538

# உலக அரங்கில்

டி.கே.சீனிவாசன்

538
3-1951



O,3NSV,V
N51
105317

பொன்னி வெளியீடு

பொன்னி வெளியீடு

538/3

3

# உலக அரங்கில்

-டி.கே.சீனிவாசன்-

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 1951

விலை ரு. 1/—

வெளியிடுவோர் :
**பொன்னி லிமிடெட்**
16, சேணியம்மன் கோவில் தெரு,
தண்டையார்ப்பேட்டை
சென்னை-21

சென்னை பொன்னி அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.

# பிரதிவாதிகள் சார்பில்...

இன்று தமிழ்நாட்டின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் என்று விளம்பரப்படுத்தப்பட்ட — உண்மையிலேயே அந்த நிலையை அடைந்த ஓரிருவர் உட்பட — சிலர் கூடிக் கொண்டு சிறுகதை இலக்கியத்துக்கு இலக்கணம் வகுத்திருக்கிறார்கள். அந்த வரம்புக்குள் வாராதவைகளை எல்லாம் சிறுகதைகள் என்று ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை! அதுதான் எவரையும் ஆச்சரியப்படச் செய்யும் பகுதி.

கதைகள் பிரச்சாரத்துக்குப் பயன்படக்கூடாது என்பதுதான் அவர்கள் குறிக்கோள் அல்லது வாதம். தனிப்பட்ட ஒரு சிலரின் பிழைப்புக்கும் புகழுக்கும் சிறுகதை இலக்கியம் பயன்படுவதை விட உயர்ந்த நோக்கத்துக்காகப் பயன்படுவது எந்த முறையில் தவறு என்பதை எடுத்துக் காட்டவில்லை அவர்கள்! சொந்தக் கருத்து ஒன்றிருக்க, விளம்பரப்படுத்தப்பட்ட பத்திரிகையில் தன் கதை வெளிவரவேண்டும் என்பதற்காகக் கருத்தை மாற்றிக்கொண்டு எழுதும் எழுத்தாளனை விடத் தன் கருத்தைப் பரப்ப எழுதுபவன் ஏன் தாழ்த்தப்படவேண்டும் என்பதையும் எண்ணிப் பார்ப்பதில்லை அவர்கள்!

கதைகளில் பிரச்சாரம் இருக்கக்கூடாது என்று சொல்பவர்கள் புகழ்ந்து மதிப்பிடும் எத்தனையோ கதைகள் வெறும் பிரச்சார இலக்கியமாகத்தான் இருந்து வருகின்றன. சரத்சந்திரர் எழுதிய ‘பாரதி’, டாகூர் எழுதியிருக்கும் ‘நாலு அத்தியாயங்கள்’, வேங்கடரமணி உருவாக்கியிருக்கும் ‘தேசபக்தன் கந்தன்’ இவையெல்லாம் பிரச்சாரக் கதைகள் தாம். வெளிப்படையாகவே அரசியல் கட்சியொன்றைப்பற்றிப் பிரச்சாரம் இவற்றில் மலிந்து காணப்படுகிறது.

இன்னும், 'தலைவிதி' — 'ஆண்டவன்' — 'ஊழிக் கூத்து' — 'அவன் செயல்' — 'சக்திவேல்' — போன்ற சொற்களுக்குத் தனிப்பட்ட செல்வாக்கும் மதிப்பும் கொடுத்து எழுதுவது மதம், கடவுள் இவை இரண்டுக்கும் ஆன பிரச்சாரம் என்பதைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்?

ஆகையால் இவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் எதை யும் எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்பதைத் தவிர அறிவுக்கு ஒத்த விளக்கம் எதுவும் இல்லை அவர்கள் பேச்சில். தங்களுக்குப் பிடிக்காத கட்சி, கொள்கைகள் சிறுகதைகளில் இடம் பெற்றால் உடனே பிரச்சார வாடை வீசுவது இவர்கட்குத் தெரியத் தொடங்கிவிடுகிறது. இன்று தமிழ்நாட்டின் பத்திரிகைஉலகம் ஒரு குறிப்பிட்ட நோக்கம் கொண்டோரின் கையில் சிக்கியிருப்பதால், இளம் எழுத்தாளர்கள் — வளர்ந்து புகழடைந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் சிலர் உட்பட — அவர்களுக்கு எடுபிடிகளாகத்தான் இருக்க நேரிடுகிறது. இவர்களும் தாங்கள் அடிமைப்பட்டிருப்பதை மறைக்க ஒத்துப் பேசு கிறார்கள், அவர்களோடு.

யாரோ ஒரு சிலரைத் திருப்திப்படுத்தச் செய்யும் 'விபச்சாரத்தை' விட ஒரு கொள்கைக்கான பிரச்சாரம் எத்தனையோ மடங்கு மேலானதுதான். இன்றைய சமுதாயம் ஒரு சிலரை உதவாக்கரைகள் என்று ஒதுக்கித் தள்ளு கிறது. அந்த முடிவையே எல்லோரும் ஏற்றுக்கொண்டு எடுத்துரைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகச் சிலருக்கு உடன்பாடு இருக்கலாம். ஆனால் என்னையும், என்போன்ற மற்றவர்களையும் விளம்பரத்துக்காக! 'விபச் சாரம்' செய்யக் கட்டாயப்படுத்துவது முடியாதுதான் எங்கள் கருத்துக்கள் இன்று சமுதாயத்தில் உலவிவரும் எந்தக் கருத்துக்கும் தாழ்ந்தவையல்ல; அல்லது மறைத்து வைக்க வேண்டிய அளவுக்கு மட்ட ரகமானவையுமல்ல.

சிந்தனைக்குச் சிறைகட்டியிருப்பவர்கள் பார்வைக்குத் தான் மேலே சொன்ன சில வரிகளை வைத்திருக்கிறேன். இது போதும். இனி.........

# முன்னுரை

திடீரென ஒரு நாள், ஏறத்தாழ நான்கைந்து ஆண்டுகளுக்கு முன், 'பொன்னி' ஆசிரியர் தோழர். முருகு சுப்பிரமணியம் எனக்கு, "சிறுகதை எழுதி அனுப்புங்கள்" என்று கடிதம் எழுதினார். என்னாலே கதைகளை உருவாக்க முடியும் என்பதை எப்படி அவர் கண்டுபிடித்தார் என்பது தான் எனக்கு இன்னும் விளங்கவில்லை. அந்த விளக்கத்தையும் இன்னும் அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசைப்படவில்லை நான் — எழுத்தாளனுக்கிருக்கும் — இருக்க வேண்டிய — கர்வத்தால்!

நான் வளர ஆலோசனைகள் கூறிய தோழர் பாண்டுரங்கனுக்கு (சிறுகதை எழுத்தாளர்) என் வணக்கம்.

நான் வளர இடங்கொடுத்த 'பொன்னி' ஆசிரியருக்கு .........? அவரைப் பற்றிப் புகழமாட்டேன் — 'காக்கா பிடிக்கிறேன்' என்று அவர் நினைத்துவிடக்கூடாதல்லவா!

என் கதைகள் பிடிக்கவில்லை என்பார்கள் சிலர்; அது என் குற்றமல்ல! இதைப் படிப்போர், பாராட்டுவோர் யாராவது இருந்தால் அவர்களுக்கு என் நன்றி.

திருச்சி
20—8—51

அன்பன்
டி. கே. சீனிவாசன்

என் தாய்க்கு

டி. கே. சீ.

# ஆனந்த பைரவி

நிலவொளி...நீரோடை...நிம்மதி நிறைந்த நேரம்! துறவி ஆனந்தனுக்குத் தூக்கம் வரவில்லை.

இரவு, நிலவொளியால் தன்னை 'மேக்கப்' செய்து கொண்டு பட்டப்பகலைப்போல நடித்துக் கொண்டிருந்தது. பளிச்சென்று ஒளிவீசும் உடையணிந்து உலவப் புறப் பட்ட நிலா உடலைச் சரிவர மூடி மறைத்துக்கொள்ளாமல் காணப்பட்டது. அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந் தான் ஆனந்தன். வெட்கங்கெட்ட அந்த நிலா கொஞ்சங் கூட நாணமடையாமல் நகைமுகங் காட்டியது. 'பச்'சென்று அவன் உள்ளத்தில் துளிர்த்த பருவ உணர்ச்சிகள் வளர்ந்து பொன்னிறம் பெற்றன. யார் யாரோ அவனுக்கே அறிமுக மாகாத பெண்கள் பலர் அவன் இதயத்தை நிலைக்கண்ணாடி யாக்கிக் கொண்டனர். பலவித கோணங்களில் இருந்து அதில் பார்த்தனர் – சிரித்தனர் – பரிகாசம் செய்தனர்!

எதிரே சலசலவென்று சதங்கையொலி எழுப்பும் தெள்ளிய நீரோடை கரையில் வளர்ந்திருந்த ஒரு மகிழ மரத்தின் வேரைத் தொட்டு முத்தமிட்டுச் சென்றது. கூச்சம் தாங்காது மரத்தின் உடல் சிலிர்த்துத்தான் இருக்க வேண்டும்! 'பொல பொல' என்று மலர்களை உதிர்த்தது அந்த மரம். விழுந்த மலர்களை ஏந்தியிழுத்துக்கொண்டு வேகமாக ஓடிற்று அந்த ஓடை! வேட்கையைத் தூண்டி விட்டுத் தாபத்தைத் தணிக்காது மறையும் தன்னலம் மிகுந்த சில பெண்களைப் போன்ற அந்த ஓடை...! மாயை ஆனந்தன் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது!

அங்கிருந்து எழுந்து நேரே தன் குருநாதர் எதிரே வந்து நின்றான்.

"சுவாமி! ஒரு சந்தேகம்?"

"என்னப்பா அது?"

"ஏன் கடவுள் உலகைப் படைத்தார்?"

குருநாதர் அவனைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்தார். அவருக்குக் கிடைத்த அந்தச் சீடன் அவரை ஆச்சரியத்தால் திகைக்க வைத்தான்.

"கடவுள் உலகத்தைப் படைக்கும்போது நீ அவர் பக்கத்திலிருந்து புத்தி சொல்லாததால்தான்!"

"சந்தேகத்தைச் சஞ்சலமாக்காதீர்கள் சுவாமி! கடவுள் ஏன் உலகைப் படைத்தார்? உலகைப் படைத்தவர் ஏன் மனிதர்களைப் படைத்தார்? மனிதனைப் படைத்தவர் ஏன் அவனைச் சுற்றிப் பாவங்களைப் படையெடுக்க வைத்தார்? எனக்கொன்றும் விளங்கவில்லையே சுவாமி!"

"எவருக்குமே அது விளங்கியதில்லையே, ஆனந்தா! வேதவேதாந்த வித்தகர்கள் எல்லாம் விடைதேடித் தத்தளித்த கேள்வி அல்லவா அது!"

பயிற்சியில்லாத முரட்டு விரல் பட்டுத் துடித்துத் தணிந்த வீணைத் தந்திபோல ஆனந்தனின் உள்ளக் குமுறல் தானே அடங்கிப் போனது.

"ஆனந்தா! உடல் சாந்தியடைந்து உள்ளம் மட்டும் சலனத்திலிருந்தால் சஞ்சலம் ஏற்பட்டுத்தான் தீரும். இன்று திருவிழா. தேவன் ஊர்வலம் வந்து கொண்டிருப்பார். போ. நிம்மதி ஏற்படும்வரை அவரோடு சுற்றிவிட்டு வா. எல்லாம் சரியாய்ப் போய்விடும்."

"தனியாக உங்களை விட்டுவிட்டா சுவாமி?"

"என்னை எவரும் களவாடிவிட மாட்டார்கள். கலங்காமல் போய்வா."

ஆனந்தன் அங்கிருந்து அகன்றான்.

**சு**ற்றிலும் வேலியமைத்துக் கொத்தி, நீர்பாய்ச்சி விதைத்துக் காத்து வளர்த்த செடியாக இருந்திருந்தால் ஆனந்தன்

செழிப்பாக வளர்ந்திருப்பான். காட்டில் பிறந்து கண் காணிப்புப் போதாமல் வளர்ந்ததால் அவனைச் சுற்றிக் கள்ளி படர்ந்தது—கரையான் புற்றெடுத்தது! வேதனையில் பிறந்து வேதனையிலேயே வளர்ந்த அவனுக்கு வேதனை யோடு வாழமட்டும் பிடிக்கவில்லை. கவைக்குதவாத இந்த உலகத்தைக் காறிஉமிழ்ந்து விட்டுப் பேசாமல் துறவி யானான்!

உலகைப் படைத்துக் காத்துப் பரிபாலிக்கும் பரமன்— நித்தியன், நிர்மலன், நிரஞ்சனன்–பவனி வந்துகொண்டிருந் தார். விண்ணில் ஒட்டிக்கொண்டிருந்த தாரகைகள் மண் ணில் விழுந்து ஊர்வது போன்ற விளக்கு வரிசைகள். ஒழுங்கோ கட்டுப்பாடோ இல்லாத அந்த ஜனத்திரளில் சத்தமும் சந்தடியும் மொய்த்துக் கொண்டிருந்தன. பள பளப்பான பட்டுப் பட்டாடைகள் அணிந்து பார்வையைப் பற்றியிழுக்கும் பதுமைகளைப் போன்ற பாவைகள்—கூட்ட மாகக் கூடிய குருவிக் கூட்டத்தைப்போல ஓயாமல் ஓழி யாமல் கூச்சல் போட்டுக்கொண்டே நடந்தனர். ஆண் டவனே மாயையின் மத்தியில் சிக்கித் தவிப்பதை ஆனந்தன் கண்டபோது...!

பளிச்சென்று அவன் கண்ணெதிரே ஒளிவிட்டது ஒரு கத்திரிக்கோல். ஒரே வெட்டு. அந்தத் தங்கச் சங் கிலியின் இணைப்பு அறுந்தது. பறிகொடுத்த கழுத்துப் பரதவித்தது— ஏந்திப் பிடித்த கை இறுமாப்போடு அங் கிருந்து அகன்றது. கூட்டத்தில் கலந்து கரையப்போன அந்தத் திருடனைத் தொடர்ந்தோடினான் ஆனந்தன். இவ னையும் இவன் கருத்தையும் எப்படியோ கண்டுபிடித்து விட்டான் அவன். பிறகு...? பறந்தோடும் புறாவும்— அதைப் பாய்ந்து துரத்தும் ராஜாளியும்! நீதிக்கும் அதன் பிடிப்புக்கு அகப்படாமல் தப்பிப் பதுங்க ஓடும் பாவத் துக்கும் இடையே நெடுநேரம் ஓட்டப்பந்தயம் நடந்தது. நிம்மதி நிறைந்த பல வீதிகளில் விறைக்க விறைக்க ஓடி வரும் குதிரையின் குளம்படி யோசைகள் கிளம்பின.

கடைசியில் திறந்திருந்த ஒரு வீட்டுக்குள் ஓடிப் புகுந்தான் அந்தத் திருடன். கதவு தாழிடப்பட்டது. தொடர்ந்தோடி வந்த ஆனந்தன் தேக்கி நிறுத்தப்பட்டான்.

ஆண்டவன் ஊர்வலம் அந்த வீதியைக் கடந்துபோய் அத்தனை நாழிகையான பிறகும் ஏன் அந்த வீட்டுக் கதவு திறந்திருந்தது? ஒருவேளை வெளியே போன யாராவது திறந்து வைத்துவிட்டுப் போயிருந்தால்...! அப்படியானால் கள்வன் புகுந்த செய்தி தெரியாமல் கவலையற்றுத் தூங்கும் ஆத்மாக்களின் கதி...? ஓங்கிக் கதவைத் தட்டினான் ஆனந்தன்.

"யார்?"

அந்தக் கேள்விக் குரலைத் தொடர்ந்து கதவும் திறந்தது. உள்ளே பாய்ந்த ஆனந்தனுடைய பார்வை எதிரேயிருந்த அந்த உருவத்தை அப்படியே படம் பிடித்தெடுத்து வந்து அவன் இதயத்தில் பதித்தது. சிந்தித்துச் செதுக்கிய சிலை அவள்—உயிர்பெற்று மெருகேறி ஒளிவிட்டு நின்றாள் அவன் கண்ணெதிரே! உறக்கத்தின் சாயலே படாத மலர் விழிகள். ஆடம்பரமற்ற அலங்காரம், தவழும் தென்றலில் மிதந்துவந்த மல்லிகையின் மணம். இமை வில்லில் விழிக் கணையைக் கோர்த்து இவன்மேல் எய்தாள் அவள்!

"உள்ளே வாருங்கள்"

தளிர்விரல் தந்தியில் படும்போது வீணையெழுப்பும் இன்பஒலி...இல்லை இல்லை...ஜோடிப் புறாவின் ஜாடை மொழி...'தத்தோம்' என ஆண்டவன் எதிரே தாளம் போடும் இரு மத்தளங்கள் இவன் நேரெதிரே யிருந்து ஒலிப்பதுபோல இவனுக்குத் தெரிந்தது. மயக்கம் இவனைக் கவ்விப் போதையாக உருப்பெற்றது...போதை வெறியாகப் பரிணமிக்கும் நேரம்... தன்னைத்தானே சமாளித்துக் கொண்டான் ஆனந்தன்.

"உள்ளே யாரோ..."

இவன் சொல்லி முடிப்பதற்குள் அதைப் பாதியிலே வெட்டித் துண்டித்துவிட்டுப் பதில் அளித்தாள் பேசிய பழக்கப்பட்ட அந்தக் கூவுங்குயில்!

"எவருமில்லை! கதவு தாழிடப்பட்டுத்தானே இருந்தது."

கண்ணால் கண்டதும் பொய் — காதால் கேட்டதும் பொய் — தீர விசாரிப்பதே மெய்!

"இல்லை! என் கண்ணாலேயே பார்த்தேனே!"

"இருக்காதே! இத்தனை நேரமும் நான் கதவருகில் தானே காத்திருந்தேன்."

"யாருக்காக?"

"எல்லாம் உங்களுக்காகத்தான்!"

தேனருவி பாலாற்றில் கலந்து அதைக்கொண்டு பாய்ச்சிப் பயிரிட்ட பழக்குலைகளைப்போல அந்தப் பதில் இனித்தது ஆனந்தனுக்கு. அவன் – ஒரு துறவி! உலகத்தைத் துச்சம் என்று உதறித் தள்ளிவிட்டு வெளியேறியவன். அவனுக்காக அந்த எழில்வல்லி அந்த நள்ளிரவு நேரத்தில் கூடக் காத்துக்கொண்டிருந்திருக்கிறாள். அந்த இளவயதில் அவளுக்கிருந்த பக்தியும் பண்பாடும் பக்குவ நிலையும்! மெய்மறந்தான் — உள்ளம் நெக்குவிட்டுருகியது! ஆண்டவன் அருகே நாதஸ்வரக்காரன் 'புன்னாகவராளி' வாசித்துக் கொண்டிருந்தது தெளிவாகக் காதில் விழுந்தது.

"ஏன் தயங்குகிறீர்கள்? உள்ளே வாருங்கள்!"

உள்ளே நுழைந்தான் ஆனந்தன். நீலநிறம் தீட்டப்பட்ட சுவர்கள். அதில் பச்சை ஒளி வீசும் விளக்கு. எதிரேயிருந்த ஒரு பெரிய நிலைக்கண்ணாடியில் இவன் உருவமும் அவள் உருவமும் தெளிவாகத் தெரிந்தன. அவள்...? ஒரு மலர்ந்த ரோஜா! இவன்...? அதை வட்டமிட்டுச் சுற்றிவரும் வண்டு! சீ! மாயை மறுபடியும் அவன் மனதை...! அந்த மலரைப் பறித்துப் பரமனுக்குப் பூஜை செய்யும் பூஜாரி! முக்திநிலைக்கேற்ற 'மோகனம்' அவன் உள்ளத்தில் மலர்ந்து மணம்விட்டது!

கட்டில் – பட்டுமெத்தை – பால் – பழம் – வெற்றிலைத் தட்டு – புகைந்துகொண்டிருந்த ஊதுவர்த்திகள் – பிறந்த மேனியைத் திறந்து காட்டும் பதினைந்து வயதுப் 'பெண்

குழந்தைகள்' ஆனந்தனுக்கு நேரெதிரே 'நீலாம்புரி' பாடக் காத்துக்கொண்டு நின்றனர்!

"ஏன் கலங்குகிறீர்கள்? பயப்படாதீர்கள். போலீ சார் பயங்கூட இங்கே கிடையாது!"

தாளம் தவறியதால் ராகம் குலைந்தது. நீலாம்புரிக்குப் பதில் 'முகாரி' எழுந்தது!

"அப்படியானால் நீ..."

அவள் உரத்துச் சிரித்தாள். சிந்திச் சிதறிய அந்தச் சிரிப்பொலிகட்கு மட்டும் உருவம் இருந்திருந்தால் அவை களைத் திரட்டிச் சேகரித்திருக்கலாம். அந்தப் பெண்ணின் உதடுகள் வழியாக ஓடிவந்த அத்தனையும் வெறும் மண்ணாக இல்லை – பொன்னாக மின்னின!

"இது தெரியாமலா கதவைத் தட்டினீர்கள்? பரவா யில்லை. சுவாமி! குறுகிய என் வாழ்வில் பலர் குறுக்கிட் டிருக்கின்றனர். இளமை இழந்தவர்கள்–வளமை யொழிந்த வர்கள்–வாழ்ந்து கெட்டவர்கள்! அவர்களுக்கெல்லாம் அணைக்கும்போது அமிர்த சஞ்சீவியாக, தழுவும்போது தளிர்க்கொடியாக, வெறி கிளம்பும் நேரத்தில் வெறும் பிணமாகத்தான் கிடந்தேன். எப்போதும் பெண்ணாக இருந்ததே இல்லை! ஊர்ந்து–தவழ்ந்து–ஓடியாடி–தாண்டிக் குதித்து–தளர்ந்து–தடுமாறும் இந்த மனித சமுதாயத்தில் பலரைப் பார்த்திருக்கிறேன். உங்களைப் போன்ற கவர்ச்சி நிறைந்த தோற்றம் என் கண்களுக்குப் புலப்பட்டதே யில்லை. களையொழுகும் உங்கள் முகத்தின் கம்பீரம் என் கன்னிப் பருவ உணர்ச்சிகளை எழுப்பி விட்டது. உட் காருங்கள்."

"பாவத்தில் ஊறிப்போன நீ என்னையுமா பாவஞ் செய்யத் தூண்டுகிறாய்?" ஆனந்தன் குரலில் 'அடாணா' வின் சாயல்தான் இருந்தது!

"நான் மட்டுந்தான் பாவியா? என்னிடம் வந்து போகிறவர்கள்...? அவர்களும் அப்படித்தான் சொல்லு கிறார்கள். உள்ளே புகுந்தவுடன் அவர்கள் ஏதோ புனி தம் நிறைந்தவர்கள் போலவும் நான்தான் பாவம் சூழ்ந்

தவள் என்றும் பேசுவார்கள். பிறகு கெட்டுப்போன என்னை மேலும் கெடுத்துவிட்டு நான்தான் அவர்களைக் கெடுத்தேன் என்றும் குற்றஞ்சாட்டுவார்கள். சுவாமி! உலகத்தில் பாவத்துக்கு இருக்கும் சக்தி பரமனுக்கே கிடையாதே!" 'அடாணு'வைச் 'சகாண'வால் சாந்தப்படுத்தினாள் அந்த வேசி!

ஆனந்தனுடைய தொண்டை வரண்டு போன குறிப்பறிந்து கொஞ்சம் பாலை ஊற்றிக் கொடுத்தாள். உலகம் மெல்லச் சுழலத் தொடங்கியது! 'இந்தோளம்' இன்னிசையாகக் கேட்டது எங்கோ இருந்து!

"உன் பெயர் என்ன?"

"பைரவி"

அவன் அவளைப் பார்த்தான். மூச்சுவிட்டால் ஆடியசையும் பூங்கொடி — அவள் நின்று கொண்டிருந்தாள். தரையில் அல்ல — தகிக்கும் தாபம் நிறைந்த அவன் இதயத்தில்! அவள் மெல்ல அவன் தோளைப் பற்றினாள். பொங்கும் பாலில் அள்ளித் தெளித்த குளிர்நீர் அவளுடைய தளிருடல்! உதடுகளை உதடுகளால் பொத்திப் போதை யேற்றினாள்.

"சுவாமி! கதிரவன் — அவனைச் சுற்றிவரும் பூமி — அதைச் சுற்றிச் சுழலும் சந்திரன்! ஆண் — அவனைத் தழுவும் பெண் — அவனுக்குப் பிறக்கும் குழந்தை! இயற்கையின் அமைப்பே இல்லறத்தைத்தானே கற்பிக்கிறது. அப்படியிருக்க நீர் மட்டும்..."

நள்ளிரவு-இன்பவல்லி-எவருக்கும் தெரியாத இடம்-விஸ்வாமித்திரரே மேனகையிடம் தவறித்தானே போனார்! தொட்டுப் படர்ந்த பாவம் அவன் மனதைத் துவளச் செய்யும் நேரம். அவன் கண்கள் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டன. அந்தப் படம்! பாவத்தின் சந்நிதானத்தில் பரமன் 'நந்தி'யாக்கப்பட்டிருந்தார்!

"படுக்கையறையில் பூஜைக்கூடமா?"

"பதருதீர்கள் சுவாமி! இங்கே கடவுள், பூஜைக்காக இல்லே. வியாபாரிக்குத் தராசு போல விபசாரிக்குக் கடவுள்! என் கன்னித் தன்மைக்குச் சாட்சி! அவ்வளவுதான்."

அந்தரத்தில் சுற்றிச் சுழலும் பந்து – அந்தப் பந்தின் சுழற்சி வேகத்தால் கட்டுப்பட்டுக் கரைதாண்டாது குமுறிக் கொந்தளிக்கும் அலேகடல்கள் — கடலின் ஆழத்தை ஈடு செய்யும் அளவுக்கு ஓங்கி உயர்ந்த மலேகள் — கதிரவனுல் காய்ச்சப்பட்டுக் கருமுகிலான கடல் நீர் மலேகளால் தடுக்கப் பட்டு மழையாகப் பொழியும் விந்தை — மழை நீரால் வளமடையும் வயல்கள் — வயலின் வளத்தை நம்பி வயிறு வளர்க்கும் மனித ஜாதி — கோடானு கோடி மனிதக் கூட்டத்திலே ஒருத்தியான இவள் — அதுவும் ஒரு விபச்சாரி! துரும்பிலும் துரும்பு — துளியிலும் துளி — அணுவிலும் அணு! ஆண்டவனேத் துச்சமாகப் பேசிவிட்டாள்!

துள்ளி எழுந்தான் ஆனந்தன் படுக்கையிலிருந்து. ஓங்கி ஒரு அறை! அவளுடைய கன்னம் கன்றிச் சிவந்தது.

"பாதகி! கடவுளேயா கயமைக்குத் துணைபுரிய வைக்கிருய்?"

அவள் அலறவில்லே. துடிக்கவில்லே. ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தாள்.

"பரவாயில்லே சுவாமி. இது ஒன்றும் எனக்குப் புது நிகழ்ச்சியல்ல! பலரிடம் பட்டுப் பழகியிருக்கிறேன். நானே கேட்கிறேன் உம்மை. நானுவது என் வயிற்றுப் பிழைப்புக்காகக் கடவுளேச் சாட்சிக்கூண்டில் ஏற்றி வைத்திருக்கிறேன். ஆனுல் நீர் கடவுளேக் கைதிக் கூண்டிலேயே நிறுத்தியிருக்கிறீரே! உழைக்காமல் பாடுபடாமல் வாழ நீர் பயன்படுத்தும் கருவியே கடவுள்தானே!"

வெங்கலத்தில் கூழாங்கற்களே வீசியெறிவது போல ஒருமுறை சிரித்தான் ஆனந்தன்.

"சேறு, சந்தனத்தை வாதத்துக்கு அழைக்கிறது! போடி! பிழைப்பற்றவளே! பாவத்தினுல் பிழைக்கும் நீயா பரமன் அடியார்களுக்கு அறைகூவல் விடுக்கிருய்?"

"கற்றுத் தேர்ந்தவரே! உம்மையே கேட்கிறேன். நான் பிறக்கும்போது கள்ளங் கபடமற்றவளாகத்தானே பிறந்தேன். 'குழந்தை உள்ளம்' என்று உவமையாகக் கூறியிருப்பீரே உபதேசத்தின்போது! என்னோடு கூடப் பிறக்காத பாவங்கள் நான் வளரும்போது என்னை வந்து பற்றினால் அதற்கு நான் பொறுப்பாளியா? அல்லது என்னைப் பாவியாக்கிய இந்த உலகம் பொறுப்பாளியா?"

"ஏன் நீ திருந்தி நல்ல வாழ்க்கை வாழக்கூடாது?"

"சேறும் சகதியும் நிறைந்த இந்தச் சமுதாயத்தில் குப்பையுங் கூளமுந்தான் அதிகமே தவிரக் குன்றிமணிகள் குறைவுதான் சுவாமி! சேற்றைச் செம்மைப்படுத்த உழைக்கவேண்டிய உம்மைப் போன்றவர்கள் ஆண்டவனைத் தேடித் திரிந்தால் நான் எப்படி நல்வாழ்க்கை நடத்த முடியும்?"

துரும்பென்று அவன் எண்ணிய அந்தப் பொருள் இரும்பாக அவன் எதிரே நின்றது! தோல்வி! இனி அவனுக்கு அங்கே வேலையே கிடையாது. பேசாமல் அங்கிருந்து நகன்றான்.

வெளியே அந்தத் திருடன் நின்றுகொண்டிருந்தான்.

"அகப்பட்டாயா? வா! போலீஸ் ஸ்டேஷனுக்கு" என்று அவன் கையைப் பற்றினான் ஆனந்தன்.

"என்னய்யா? நீ தேவடியா வீட்டுக்கு வந்துட்டுப் போனதை நான் பார்த்ததுக்கா என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்புடுறே?" என்று அந்தக் கையை உதறிவிட்டுப் பதிலளித்தான் திருடன்.


பூபாளம் ஒலிக்கும் நேரம். கதிரவன் அப்போதுதான் பழுத்துக்கொண்டிருந்தான். ஆசிரமத்தை அடைந்தான் ஆனந்தன். குருநாதர் தூங்கி விழித்தெழுந்தார்.

"வெற்றி பெற்றுவிட்டேன், சுவாமி! மாயை மண்ணானது" என்று உற்சாகந் தாங்க முடியாமல் உரத்துக் கூவியே விட்டான்.

"இல்லையப்பா! அது இன்னும் பொன்னாகத்தான் ஒளிவிடுகிறது" என்று நிதானமாகப் பதிலளித்தார் குருநாதர்.

குருவின் படுக்கையில் வாடி வதங்கிய மல்லிகைச் சரம் ஒன்று கிடந்தது. கசங்கிக் கிடந்த தலையணையில் எண்ணெய்க் கறை படிந்திருந்தது. எப்போதும் வரண்டிருக்கும் குருநாதரின் மொட்டைத் தலை வழக்கம் போலத்தான் காணப்பட்டது!

அன்று முழுவதும் 'சிந்து பைரவி' ஆனந்தன் சிந்தையைக் கலக்கியது. இரவு வந்ததும் அவன் அந்த வேசியைத் தேடிப் போனபோது பாவம் குறுக்கிடவில்லை—பாமன் தடுக்கவில்லை! ஒன்றுபட்டு வாழத் தொடங்கிய அந்தத் துறவிக்கும் வேசிக்கும் எப்போதும் 'ராக மாலிகை' கேட்கவேயில்லை. துவளாத, துண்டிக்கப் படாத 'ஆனந்த பைரவி' தான் அசைந்து வளைந்து தவழ்ந்துகொண்டிருந்தது!



# முடியவில்லை, தொடர்கிறது!

ஒன்று....இரண்டு....மூன்று....நான்கு....ஐந்து... ஆறு... ஏழு!

அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக ஒலித்த அந்தக் கடிகாரத்தின் மணியொலிகள் ஏழும் அடங்கிப் போயின. ஒளி மங்கிவிட்டது. வண்ணச்சித்திரங்கள் பலப்பல படர்ந்து பளிச்சென்றிருந்த வானம் மெருகு குலைந்து காணப்படுகிறது. ஊர்ந்து நகர்ந்து வரும் அந்த வெண்ணிலா...... வெள்ளி முலாம் பூசிய வெறும் இரும்புத் தகடு... அதுவும் கொஞ்சம் முலாம் உதிர்ந்து போய்த் தேய்ந்திருக்கிறது! ஓடி ஆடித் திரிந்த உற்சாகம் நிறைந்த உடல்களையும் உள்ளங்களையும் ஏதோ ஒருவித மயக்கம் தழுவித் தலைசாய்க்கச் செய்யும் அந்த நேரம்...சத்தமுஞ் சந்தடியும் அடங்கி வெகுநேரம் ஆகிவிட்டது. ஆடாது அசைவற்றுக் கிடக்கும் உலகம் அருவருப்பு நிறைந்த சவம்போல என்னெதிரே காட்சி அளிக்கிறது!

கம்பிகள் பதித்த இரும்புக் கதவுக்கும் கற்களால் எழுப்பிய சுவர்களுக்கும் இடையே கட்டுப்பட்டிருக்கிறேன் நான். காற்றில் பறந்து கதிரவனைக் கட்டி அணைத்து, ஒளி வீசும் தண்ணிலவின் உதடுகளில் முத்தம் விதைத்து, தனித்தனியே சிதறிக்கிடக்கும் தாரகைகளை ஒன்று திரட்டி ஒளிவிடும் சுடர்மாலையாக்கி மார்பில் அணிந்து மகிழ்ச்சி அடையும் என் எண்ணங்களோடு ஒத்துழைக்க முடியாமல் உடல் சிறைவைக்கப்பட்டிருக்கிறது. சிறை...! அதற்கும்

சர்க்கஸ் கொட்டகைக்கும் உள்ள அந்த மாபெரும் முரண்பாடு...! மிருகங்களை மனிதர்கள் பழக்குகிறார்கள் சர்க்கஸ் கொட்டகையில்—மனிதர்களை மிருகங்கள் பழக்குகின்றன இந்தச் சிறைச்சாலையில்!

என் உடலின் ஒவ்வொரு அங்கமும் காய்ச்சி உருக்கப் படுவதைப் போன்ற உணர்ச்சி என்னையறியாமலே எனக் கேற்படுகிறது. "அகலாத இருள்" என்ற அருமையான நூலுக்கு அமைந்த அழகான முன்னுரைதான் எனக்கும் உலக வாழ்வுக்கும் இடையே இருக்கும் இறுதித் தொடர்பான இந்த இரவு! நாளை...? எனக்கேற்படப் போகாத அந்த நாள்! சாகப்போகிறேன்...இல்லை...கொல்லப்போகிறார்கள் என்னை! பிறகு...?கடவுள்......மோட்சம்! உரத்து வாய் விட்டுச் சிரிக்க வேண்டும்போல் இருக்கிறது. ஆனால், சிந்தனை அந்தச் சிரிப்பைத் தடுத்து நிறுத்துகிறது.

மோட்சம்...!...சுயநலமே உருவான பிறவிச் சோம்பேறியின் மூளையில் உதித்த பித்தலாட்டம் நிறைந்த கற்பனை! மது இருக்கும்—மங்கை இருப்பாள்—மனோகரமான வாழ்விருக்கும்—ஆனால் இத்தனைக்கும் உழைக்கவோ, பாடுபடவோ வேண்டியதே இல்லை! குவியல் குவியலாகப் பொன்னும் மணியும் கொட்டப்பட்டிருக்கும் குபேரப் பட்டணத்தில்—விற்பனை வரி விதிக்கும் சர்க்காரோ, வருமான வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களோ இருக்கமாட்டார்கள்! கருத்தில் பட்டதையெல்லாம் கண் முன்னே கொண்டுவரக் காமதேனுவும், கற்பக விருட்சமும் இருக்கும்—ஆனால் பசி தாகம் பற்று இவை மூன்றும் ஏற்படா! உதவாக்கரைச் சரக்குகளும்—உளுத்துப் போன உலுத்தர்களும்! இதைக் கற்பனை செய்த மனிதனுடைய உடலில் ஊறிப்போயிருந்த சுயநலமும் சோம்பேறித்தனமும் பேராசையும்...!

என் இதயத்தை மத்தளமாக்கி யாரோ ஓங்கி ஓங்கித் தட்டுகிறார்கள். உடலில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும்

நரம்புகளை மீட்டும் ஒலி கேட்கிறது. கொதிக்கும் குருதியிலிருந்து ஜலதரங்க ஓசை கிளம்புகிறது. அவலமே உருவான இந்தப் பின்னணி......அதற்குத் தகுந்தாற்போல் என் இதய அரங்கில் படமெடுத்தாடும் பயம்...ஒருவேளை அதன் சீற்றங்கள்தாம் எனக்கு அடிக்கடி ஏற்படும் பெருமூச்சுகளாக இருக்குமோ? இல்லை இல்லை, உயிரற்ற ஒரு முழக் கயிறுதான் உயிர்பெற்று என் உள்ளத்தில் கூத்தாடுகிறது. கண்களை மூடினால் அது என் கழுத்துக்கு அருகேயே வந்து வட்டமிட்டு வட்டமிட்டுக் கண்ணாமூச்சி விளையாடுகிறது !

என் இதயம்...! இன்னதென்று எவராலுமே விளக்க முடியாத அதிசயமான அந்தப் பொருள்...! மரணத்தின் நினைவு அதைத் தொடும்போது......உருகும் மெழுகு... கரையும் உப்பு...காற்றில் கலந்து காணாமலே போகும் பீடியின் புகை...சீச்சீச்சீ...இவையெல்லாம் உதவாக்கரை உவமைகள்......சுருக்கமாகச் சொன்னால் மரணத்துக்குப் பயந்து சாகிறேன்! ஏன்...? அது எனக்குப் பழக்கமில்லாத நிகழ்ச்சி. செத்துத் தொலைந்தவர்களாவது ஒரு முறை வந்து அதை எனக்கு விளக்கியிருந்தால் இந்தப் பயமே ஏற்படாது. அனுபவித்தறியாத எந்த நிலையும் நமக்கு அச்சத்தைத்தான் உண்டாக்கும்! வாழ்நாள் முழுதும் ஒத்துத்தான் வாழப்போகிறோம் என்பது தெரிந்தும் ஆணும் பெண்ணும் முதல் தடவை சந்திக்கும்போது எவ்வளவு நாணிக்கோணி வெட்கி வேதனைப்படுகிறார்கள்? அப்படியிருக்க, சாவின் சாயலே படாத என்னைச் சாகச் சொன்னால்...

இரத்தஞ் செத்துச் சோகையேறி வெளுத்துப்போன நோயாளியின் முகத்தை நினைவூட்டும் இந்தப் பரிதாபத்துக்குரிய நிலா ஏன் என்னை இவ்வளவு பரிவாகப் பார்க்கிறது? எங்கோ ஒலித்துச் சிறையின் சுவர்களில் எல்லாம் எதிரொலிக்கும் சாவின் குரல் ஏன் என்னைச் சுற்றி நின்று தட்டாமாலை ஆடுகிறது?

எத்தனையோ ஜீவராசிகளை அணைத்து ஆறுதல் அளிக்கும் அமைதியும் நிம்மதியும் ஏன் எனக்கு மட்டும் பிணக்காட்டை நினைவுபடுத்துகின்றன? லேசாகத்தானே வீசுகிறது காற்று! அது பட்டவுடன் உரோமங்கள் சிலிர்த்து என் உடல் நடுங்குவானேன்? எங்கெங்கோ நடமாடிக்கொண்டிருக்கும் சிறை வார்டர்களின் காலடி ஓசைகள் கடந்துசெல்லும் காலத்தை அறிவுறுத்தும் கடிகார முட்களின் அசைவொலிகளைப் போல என் காதுகளில் விழுகின்றனவே. அது ஏன்? ஏன்...? ஏன்...? அதுதான் எனக்குத் தெரியவில்லை – விளங்கவில்லை – விளக்க எவரும் இல்லை – விளக்கினாலும் புரிந்துகொள்ளும் நிலையில் நானில்லை!

ஐயோ! இதென்ன? நான் அழுதிருக்கிறேன். கதறிக் கண்ணீர் சிந்தியிருக்கிறேன். சீ! கையாலாகாதவர்கள் அல்லவா கண்ணீர் சிந்துவார்கள்! சாகவா அஞ்சுவது? அது சகலருக்கும் ஏற்படும் சகஜமான நிகழ்ச்சிதானே! பூச்சி விழுந்த கதிர்களுக்கும் உறுதியிழந்த இயந்திரங்களுக்கும் வாழ்வளிக்க வழி கண்டுபிடித்துவிட்டோம். தேய்ந்து சத்திழக்கும் சதை எலும்பு நரம்பு இவைகளைப் பாதுகாக்க ஒருவித சாதனமும் கண்டுபிடிக்கவில்லை. அதனால்தான் அவை தெம்பிழந்து விழுந்துவிடுகின்றன. சாறற்ற எந்தச் சக்கைக்கும் இயற்கையாக ஏற்படும் இறுதி முடிவுதானே சாவு! இதற்காகவா அழுவது?

ஆனால்...! நான் சாவதற்கும் மற்றவர்கள் சாவதற்கும் உள்ள அந்த மாறுபாடு...! கிளையிலேயே வாடி வதங்கிக் காய்ந்து சருகாகிக் கீழே விழும் இலைகள் அவர்கள் — காலண்டரிலிருந்து கிழித்தெறியப்படும் கடந்துபோன நாளைக் குறிக்கும் தேதித்தாள் நான்!

பொறியில் சிக்கிய எலியிடம் எவரும், "நாளைக் காலையில் உன்னை ஒரு பூனைக்கு முன்னால் திறந்துவிடப் போகிறோம்" என்று சொல்வதில்லை — சொன்னாலும் அது புரிந்துகொள்ளாது! ஆனால் என்னை இங்கே அனுப்பும்

போதே நாள் குறித்து நல்ல நாழிகை நிச்சயித்து அதை என்னிடமுந் தெரிவித்து அனுப்பிவிட்டார்கள்! என்னைப் பூட்டிப் பாதுகாக்கிறார்கள். ஏன்? சாக அடிக்க! இவர்களை எல்லாம் ஏமாற்றி விட்டேன் நான். என்னை நாளைக்குக் காலையில்தானே சாகவேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஆனால் இவர்கள் கண்களில் எல்லாம் மண்ணைத் தூவிவிட்டு இத்தனைக் கட்டுக்காவலையும் மீறி இப்போதிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக அணுஅணுவாகச் செத்துக்கொண்டிருக்கிறேனே!

நான் சாவதா? இல்லை! முடியாது! என் இதயத்துக்குள்ளே மூடிப் பதுக்கி வைத்திருக்கும் அந்த இன்ப நினைவுகள்...! தூக்கம் வராத சில இரவுகளில் என் உள்ளத்திலிருந்து உதிர்ந்து கொட்டிய அந்த இன்பக் கற்பனைகள்...! சத்தற்ற என் வாழ்வைக் கசக்கிப் பிழிந்து வடித்தெடுத்த அந்தத் திட்டங்கள்......! என்றாவது ஒருநாள் இவை யத்தனையும் ஈடேறும் என்றுதானே ஈவிரக்கமில்லாத சூழ்நிலை என்னைக் கொட்டிக் கடித்து என் இதயத்தைக் குமுற வைத்தபோது பொறுத்துக் கொண்டிருந்தேன். அந்த இன்பம் சொட்டும் நாட்கள் நான் செத்துப் பிணமான பிறகு வந்தால்...!அனுபவிக்க நானிருக்க மாட்டேனே! ஐயோ! நான் சாகப்போவதில்லை. வாழத்தான் விரும்புகிறேன். ஆனால் சாகச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறதே இந்தச் சதிகார உலகம்!

வாழ்க்கை! இளமை, வளமை, ஜீவசக்தி, நிறைந்த இன்ப வாழ்க்கை! வாழவேண்டும் என்ற ஆசை, குருதியில் கொட்டிக் கிடக்கும் சிவப்பு அணுக்களோடு சேர்ந்து கொண்டு கூத்தாடுகிறது. இதைத்தான் உலகத்துக்குச் சொன்னேன். அதற்காகத்தான் எனக்குத் தூக்குத்தண்டனை! உழைப்பை எல்லோரும் பகிர்ந்து கொள்வோம் — உல்லாசத்தை அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்போம்! மனித ஜாதியின் நல்வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையான இந்தக் கருத்தை நான் வாய்விட்டுச் சொன்ன

போது கைதட்டி வரவேற்ற உலகம் அதைச் செயலில் செய்துகாட்ட முனைந்தபோது "செத்துத் தொலை" என்று கட்டளையிட்டிருக்கிறது. உலகம்...! மிகவும் உயர்ந்தது! பொன்னைப்போல மின்னும் பித்தளைகள் அதை அவர்கள் இஷ்டத்துக்கு ஆட்டிவைக்கிறார்கள்! மதகுருக்கள், புரோகிதர்கள், பாதிரிகள், மௌல்விகள் — இந்த வேலையற்ற சோம்பேறிக் கூட்டம் நரகத்தைக் கற்பித்து உலகத்தைத் தம் கட்டுக்குள் அடக்கி வைத்திருக்கிறது. கொத்துப் பூக்கள் குரங்கின் கையில் சிக்கியிருக்கின்றன! கன்னி மாடத்தின் காவலர்களாகக் காமுகர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சீ! இந்த மந்தையோடு சேர்ந்தா வாழவேண்டும்?

நான் செத்தபிறகு...? அந்தக் காட்சி என் கண் முன்னே வருகிறது. என் பிணத்தைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாக வட்டமிட்டு வலம்வரும் அந்தக் கழுகுகள்! அவைகளுக்குத்தான் எவ்வளவு பசி? அவைகள் என் உடலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொத்திக் கொத்திச் சதைத் துண்டங்களைத் தின்னும்போது என் உடலில் துளிக்கூட வலி இல்லை — உள்ளந்தான் துடிக்கிறது! சாவு! எவ்வளவு புனிதம் நிறைந்த பொதுநலம்! செத்துப் பிணமான உடல் வறண்ட நிலத்தை வளம் நிறைந்த வயலாக்கும்—பாழடைந்த நிலத்தைப் பழத்தோட்டமாக்கும்! ஒருவேளை தன்னலமற்ற தியாகத்துக்குக் கொடுக்கப்பட்ட பயங்கரம் நிறைந்த பெயர்தான் "சாவு" என்றிருக்குமா? வாழ்வு...! கொடுமையும் கொடூரமும் நிறைந்த கலப்பில்லாத சுயநலம்! பலரைப் பாடுபட வைக்காமல் எவராலுமே வாழமுடியாது. நான் சாகத்தான் போகிறேன். சாவதில் பெருமை அடைகிறேன்!

சிறைக் கதவை யாரோ திறக்கிறார்கள்.

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறந்தது; சிறுத்தையே வெளியே வா!" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏட்டில் எழுதி என் எண்ணத்தில் பதித்த

அந்தக் கவிதையின் அடிகள் என் காதுகளில் ஒலிக்கின்றன. இரவே! நீ என்னை விட்டுப் பிரிந்துவிட்டாய்— நான் உன்னைவிட்டுப் பிரியப் போகிறேன். உனக்கு என் இறுதி வணக்கம்! வெளுத்துப்போன வானத்தில் ஒளியிழந்து உருவிழந்து நாதியற்றுக் கிடக்கும் நிலவே, உனக்கு என் அனுதாபங்கள்! மானம்—மரியாதை, சடங்கு—சாஸ்திரம், மதம்—கடவுள் இவைகளைக்கொண்டு ஆடப்பட்ட சூதாட்டத்தில் வெட்டி வீழ்த்தப்பட்டு வீணர்களான மனிதப் புழுக்களே! நீங்கள் இருப்பதைவிட அழிந்து போவதே மேல் என்று வாழ்த்துகிறேன்—மனப்பூர்வமாக!


கழுத்தில் கயிறு மாட்டப்பட்டுவிட்டது. கருப்புத் துணியால் முகத்தை மூடி மறைத்துவிட்டார்கள். கடைசி மணி அடிப்பதற்காகக் காத்திருக்கிறார்கள்.

ஆவி பிரியும் அந்த நேரம்...! வாழ்நாள் எல்லாம் அணைத்து ஆலிங்கனம் செய்து அனுபவித்த மனைவி "எனக்கு என்ன ஆதரவு?" என்று கதறி நிற்பாள். வளர்த்து ஆளாக்கிய தாய், "மகனே, நீ மறுபடியும் வந்து என் வயிற்றில் பிறக்கவா போகிறாய்?" என்று மாரடித்துக் கொள்வாள். சுற்றி வளைத்தேறிய கொடிகளான பிள்ளைகள், "அப்பா! இனி எங்களுக்கு ஏது பற்றுக்கோல்?" என்று பதறிக் கண்ணீர் வடிப்பார்கள். இதயத்தின் ஆழத்தில் ஒளித்து வைத்திருந்த பாவங்கள், பழிகள், கொடுமைகள் எல்லாம் ஒன்று திரண்டு ஒருருவாகி யாரோ கற்பித்துக் கொடுத்த அந்த நரகத்தைக் கவனப்படுத்தும். வெளியே கலங்கித் தவிக்கும் கண்கள்—உள்ளே கருக்கித் தீய்க்கும் கருத்து! வாழ்வின் கடைசிக் "கோரஸ்" பாடப் பாடுவதற்கு முன்னால் நடக்கும் அந்த இறுதிக் கட்டம்...!

இவற்றிலிருந்து நான் தப்பிவிட்டேன். வேதனைப் படுத்தும் சூழ்நிலை என்னிடமிருந்து வெட்டித் துண்டு படுத்தப்பட்டு விட்டது. என்னிடம் எஞ்சியிருந்த ஒரே உடமை நான் எவருக்கும் தெரியாமல் கடைசி வரையில்

பதுக்கிவைத்திருந்த பீடிகள்தாம்! அவைகளையும் நேற்றிரவே புகைத்துத் தீர்த்துவிட்டேன்! கயிறு கழுத்தை இறுக்குகிறது. இதயத்துச்கும் மூளைக்கும் இடையே உள்ள அந்த இணைப்பு அறுபடுகிறது. மணியொலிகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்துகொண்டே வருகின்றன.

ஒன்று... இரண்டு... மூன்று.... நான்கு... ஐந்து... ஆ...



# விடிந்ததா ?

திக்குமுக்காடித் திணறித் திண்டாடி இழுத்து நகர்ந்து ஓட ஆரம்பித்தது ரயில்வண்டி. ஒரு பக்க ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து மறுபக்க ஜன்னலை நோக்கி ஓடிய காற்று ஜன்னலருகே உட்கார்ந்திருந்த "மேக்கப்" அழகியின் மேலாக்கைத் திறந்து பார்த்துவிட்டுச் சென்றது. எங்கெங்கோ திரிந்துகொண்டிருந்த எல்லாக் கண்களும் இதை எப்படியோ தெரிந்துகொண்டு அவள் பக்கம் திரும்பின. மேலாக்கை இழுத்து மூடிக்கொண்டு நிமிர்த்தினாள் தன் கண்களை. அவள் முகத்தில் எழுப்பப்பட்டிருந்த "பவுடர்" சுவரையும் மீறி வெளிக்குத் தெரிந்தது அவளுக்கு ஏற்பட்டு மறைந்த வெட்கத்தின் சாயல்! "பெண்கள் விலக்காத உடையை நீ போய் விலக்கினும் விலக்கார் உன்னை" என்ற கவியரசர் பாரதிதாசனின் அடிகள் என் மன அரங்கில் நடமாடத் தொடங்கின!

விரித்துக் கையில் பிடித்திருந்த சிறுகதைப் புத்தகத்தில் விழிகளைச் செலுத்தினேன். "விடிந்தது" என்ற ஐந்து எழுத்துக்களும் தலைப்பாகத் தனித்து நின்று என் மனதைப் பிடித்து இழுத்தன. எப்போதும் கூண்டுக் கிளியாக இருக்க மறுக்கும் என் மனம் அடபோதும் பறந்து திரிய ஆரம்பித்தது. அதுவும ஒரு "அவன்-அவள்" கதையாகத்தானிருக்கும். அவர்கள இருவருக்கும் வாழ்வில் விடிவு ஏற்பட்டுவிட்டது. ஆனால் விடிவெள்ளியை எதிர்பார்த்து இருட் காட்டில் அலறித் துடிக்கும் என்

ணற்ற இதயங்களுக்கு வாழ்வு விடியுமா? அவர்கள் வாழ்வில் மறைந்த கதிரவன் மறுபடியும் தோன்ருமல் ஆழ்ந்த கடலில் அமிழ்ந்தே போய்விடுவாஞ? "உரிமைக்கும் ஒரு எல்லேயுண்டு" என்று என் மனத்திற்குப் பக்குவமாக எடுத்துச் சொல்லிக் கதையில் கவனஞ் செலுத்தினேன்.

"கதிரவனுடைய ஒளிக்கதிர்கள் தன் இதழ்களே முத்த மிடும்போது அந்த மலரின் மனத்தில் களிப்புப் பொங்கி வழியும். மாலே நேரமானவுடன் தன் கதிர்களே எல்லாம் ஒன்று திரட்டி மூட்டை கட்டிக்கொண்டு கதிரவன் மறையும்போது அதன் கண்கள் கலங்கும். கொஞ்சங்கூட வெட்கமில்லாமல் கதிரவன் வெளியே போயிருக்கும்போது சந்திரனிடம் தன் உடலே ஒப்படைக்கும் வானத்தின் மானங்கெட்ட செயல் மலரை நாணித் தலேகுனியச் செய்யும்!

"தொடர்ந்து வாடிக்கையாக இதே நிகழ்ச்சிகள். மாறுதல் எதும் ஏற்படாததால் மலருக்கு வாழ்வில் சலிப் பேற்பட்டது. வளமையும் செழுமையும் நிறைந்து மலர்ந்து விரிந்திருந்தது. செழித்து ஜீவசக்தியை வெளிப்படுத்திக்கொண்டிருந்த அதன் இதழ்களில் லேசான சிவப்பு மெருகு ஏறியிருந்தது. ஆனுல் அதைச் சுற்றி வளேக்கப்பட்டிருந்த முள்வேலிதான் அதற்குப் பெரும் இடையூருக இருந்தது. வேலிக்கப்பாலிருந்த வெளி உலகத்தில் என்னென்ன விநோதங்கள் இருக்கின்றனவோ? அவைகளே எல்லாம் கண்டு களிக்கத் தன்னுல் முடியவில்லேயே! ஆகாயத்தை அண்ணுந்து பார்த்துப் பார்த்து அது அலுத்துப் போயிருந்தது. ஆசையால் தூண்டப்பட்டுக் கழுத்தை வலிக்க வலிக்க உயர்த்தி வேலிக் கப்பால் எட்டிப் பார்த்தது. வேலிக்கு வெளியே தன்னேயே வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்ற ஆடுகளும் மாடுகளும் அதற்கு அச்சத்தைக் கொடுத்தன. தலேயைத் தாழ்த்தி வேலிக்குள் தன்னே மறைத்துக் கொண்டது."

என் மனம் மறுபடியும் ஓடி ஆடத் தொடங்கியது. அந்த மலரை ஒரு வண்டு வட்டமிட்டால் மலரின் உடல் வேட்கையாவது தீரும். கசக்கி நசுக்கி மலரின் வாழ்வையே வதைக்கும் ஆடும் மாடும் அதைச் சுற்றி நின்ருல்...? இந்த முரட்டு மிருகங்களுக்குப் பயந்து அமைக்கப்படும் வேலிக்குள்ளிருந்து அந்த மலர் அடையும் வேதனை! என் மனம் ஒரு பக்கம் அலேய, விழிகள் வேருெரு பக்கம் அலேந்தன. கரிக் கட்டையைக் கலர் பொம்மையாக்கி வைத்திருப்பதைப் போலக் காட்சி அளித்தாள் அந்த ஜன்னலோரத்து அழகி. கண்களால் வண்டிக்குள் வேட்டையாடிக் கொண்டிருந்த அவளே ஏதாவது ஒரு வண்டு முகர்ந்திருக்குமா அல்லது ஆடும் மாடும்...? மட்டரகமான நினேவுகளுக்கு இடங் கொடுத்த என் மனத்தின் இழிசெயல் எனக்குப் பிடிக்கவே இல்லே. அதைக் கட்டுப்படுத்திக் கதையைப் படிக்கச் செய்தேன்.

“தனிமை அந்த மலரைத் தகித்தது. வேலிக்கு வெளியே இருந்த மாடி வீட்டின்மேல் நின்று நிலா முகத்தைக் காட்டிக்கொண்டிருந்த கன்னியின்மேல் மலரின் கண்கள் பாய்ந்தன. வகிடெடுத்து வாரிப் பின்னப்பட்டிருந்த அவள் கூந்தல் மலரை வசீகரித்தது. கருப்பில் ஒளிபடர்ந்து தன் கருத்தைக் கவர்ந்த அந்தப் பின்னல் ஜடையில் தான் குடியேறினல்...! ஆசை முகத்தோடு மலர் அவள் முகத்தைப் பார்த்தது. விழுங்கும் கண்களால் அவள் அந்த மலரைப் பார்த்தாள். கனிந்திருந்த அவள் பார்வையில் காதல் ஒளி வீசியது. மலர்ந்திருந்த அந்த மலரின் மனத்தில் நாணம் புகுந்து வெட்கமடையச் செய்தது.”

மலரும் அந்த மங்கையும் என் மனத்தில் ஒரு பெரும் புயலேக் கிளப்பி விட்டனர். வெறியை யூட்டும் அவர்கள் செயலிலிருந்து கவனத்தை இழுத்துக் கண்களேச் சுற்றிலும் சுழற்றினேன். ஓடிக்கொண்டிருந்த ரயிலுக்குள் நிம்மதி நிலவியது. கதிரவன் எங்கேயோ காணுமற்

போயிருந்தான். விதவையான வானம் கருப்புடை உடுத்தி வருத்தந் தெரிவித்துக்கொண்டிருந்தது. உடுத்தியிருந்த அதன் ஆடைக்குள்ளிருந்து அதன் உடலழகு மின்னிக் கொண்டிருந்தது. இந்தச் சோகச் சித்திரத்தைவிட மலரின் காதல் சித்திரம் என் மனதிற்கு மிகவும் பிடித்திருந்ததோ என்னவோ? காதல் வளர்ச்சியைக் கவனிக்க ஆரம்பித்தது மனம்.

"தினந்தினம் அந்தக் கருங்குழலழகி மலரைப் பார்த்துப் பார்த்து ஏங்குவாள். மலரும் அவள் அதனருகே வந்து அதைப் பறித்தெடுத்து அவள் தலையில் எப்போது சூட்டிக்கொள்வாள் என்று ஆவலுடன எதிர்பார்த்தது. ஆனால் வேலிக்குச் சொந்தக்காரர்கள் விதித்திருக்கும் கடுமையான கட்டுப்பாடு அவள் கண்கள் மூலமாகப் பிரதி பலித்தது. விலங்கை உடைத்தெறிய மன உரமில்லா அந்தக் கோழைமேல் மலருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் அவளுடைய குளிர்முகமும் பளபளவென்று பார்வையைப் பறிக்கும் கூந்தலும் அதன் கோபத்தைத் தாபமாக மாற்றின."

ஒத்த இதயங்களை ஒன்றுபடாமல் தடுக்கும் கட்டுப் பாட்டை என் மனம் காறித் துப்பியது. விலங்கை உடைத் தெறிய வலியிலாத கோழைகளை அது கடுமையாகக் கண் டித்தது. ஆனால் அது மலராகவுமிருந்ததில்லை. மங்கை யாகவுமிருந்ததில்லை. ஒருவேளை இருக்க நேரிட்டால்...? ஓடிக்கொண்டிருந்த வண்டியின் ஓசைகூடக் காதில் விழா மல் உரத்துக் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தனர் உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள். உலகப் பேச்சு—குடும்பப் பேச்சு—வண்டிக்குள் உட்கார்ந்திருக்கும் வரையில் வாய்க்கு வேலை கொடுக்க ஏதோ வெட்டிப் பேச்சு! நான் மேலே படிக்கத் தொடங்கினேன்.

"ஒருநாள் வேலியோரத்தில் ஒரு புடவை தோன்றி யது. ஒளி வீசிய அந்தப் புடவை மலரின் விழிகளைக்

கூசவைத்தது. 'எது அவளுக்கும் இவ்வளவு துணிவு ஏற்பட்டுவிட்டது' என்ற வியப்பும் அதிற் கலந்த பெருமையும் மலரைத் 'தன்னை மறந்தென் மனம் துள்ளி விளையாடுதே' என்று மனதிற்குள்ளேயே பாடச் செய்தன. வேலி விலகும் அந்த நாள், மலரைத் தாங்க முடியாத மகிழ்ச்சி தடுமாறச் செய்தது. ரோமியோ—ஜூலியட், லைலா—மஜ்னு, அமராவதி—அம்பிகாபதி—அதன் மனத்தைக் கவர்ந்த மங்கை! கற்பனை அருவியில் அந்த மலர் நீந்தி இன்புற்றது. நாணங் கவிந்த கண்களை மெல்ல உயர்த்திற்று. பன்னீரைத் தேடிப் போய்க் கடைசியில் செந்நீரைக் கொட்டியது போலானது அதன் மனம்! உள்ளங் கவர்ந்த கன்னியல்ல அங்கே இருந்தது, காய்ந்து சருகிப் போயிருந்த முகம்; அதில் படிந்திருந்த தேய்ந்து ஓய்ந்து போன தோற்றம்; பரட்டை மயிரில் ஈரும் பேனும் நெளிந்தன. கூந்தலின் நாற்றத்தை மாற்றப் பூசப்பட்டிருந்த நறுமணம் மலருக்கு மயக்கத்தைக் கொடுத்தது. விம்மி விம்மி மனதுக்குள்ளேயே அழுது இரத்தக் கண்ணீர் வடித்தது அந்த மலர். அதற்கு அழகும் மணமுந்தானிருந்ததே தவிர வாயும் பேசும் சக்தியுமில்லையே! "இந்தத் தலையில் குடியேறவா இத்தனை நாளாக வேலிக்குள் வைத்துக் காப்பாற்றப்பட்டேன்!" என்று ஏங்கித் துடித்தது. "உன்னை வளர்த்தவர்கள் உன்னை எனக்குத்தான் உரிமையாக்கப் போகிறார்கள்" என்று வந்தவள் பெருமையாகக் கூறினாள்."

கலங்கித் தவித்த என் மனம் கசிந்துருகிக் கேட்டது; "வெல்வெட் பெட்டியில் வைக்கப்படவேண்டிய வைரங்களைத் தகர டப்பியில் வைத்தால் இருக்கும் ஒளியும் மங்கியல்லவா போய்விடும்?" என்று

"எல்லா வைரங்களுக்கும் வெல்வெட் பெட்டி கிடைக்கும் விதம் சமூகம் அமைக்கப்படவில்லையே" என்று பதிலளித்தேன்.

"அறிவில்லாச் சமுதாயத்தை மாற்றி அமைத்தால்!" என்று அது எதிர்த்துக் கேட்டது.

"பாசியை அகற்றிவிட்டல்லவா புதுத் தண்ணீர் பாய்ச்சவேண்டும்! பாசியை அகற்றும்போதே பாம்புகள் விழுந்து பிடுங்குகின்றனவே!" இது நானளித்த பதில்.

என் பதில் மனதைத் திருப்திப்படுத்தவில்லை. "போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று சொல்லி அதைக் கேலியாகப் பார்த்தேன். அது கழுத்தை வளைத்து ஒரு வெட்டு வெட்டி என்னை ஒரு வெறுப்போடு பார்த்து விட்டு மலரைப்பற்றித் தெரிந்துகொள்ளத் தொடங்கியது!

"மலரைப் பறித்து அந்த அலங்கோல அழகி தன் தலையில் சூட்டிக்கொண்டாள். மதிப்பும் பெருமையும் அவள் கழுத்தை இறுக்கிப் பிடித்துத் தலையை நிமிர்த்தி வைத்தன. எல்லோரையும் கம்பீரமாகப் பார்த்தாள். ஒருவராவது அவளை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. மலரைச் சுற்றிமட்டும் பல கண்கள் மொய்க்கத் தொடங்கின. வேதனைத் தீயில் மலர் வெந்துகொண்டிருந்தது. இன்னுஞ் சிறிது நேரத்தில் வாடி வதங்கப்போகும் தன் இதழ்களுக்குத் துளி அளவு இன்பங்கூடக் கிடைக்கவில்லையே என்ற எண்ணத்தால் மலர் துடித்துத் துவண்டது அவள் தலையில் நெளிந்த ஈரும் பேனும் மலரை நெருங்கின. தன்னுடைய மெல்லிய இதழ்களில் அவை ஊர்ந்து ஊறு செய்துவிட்டால் அவற்றின் கதி என்னாவது என்று மலர் வருந்திற்று. அப்போதுதான் இளமையில் அதைப் பார்வையால் பரவசப் படுத்திய பாவை அதன் கண்ணில் பட்டாள். தூண்டிலில் சிக்கிய புழுவை நாடி ஓடும் மீனைப் போல அவளைத் தேடி ஓடியது மலரின் மனம்!"

விரும்பாத இணைப்பில் விலங்கிட்டுப் பிணைக்கப்பட்டிருக்கும் எத்தனை மலர்கள் இந்நிலையை அடைகின்றன என்று என் மனம் எண்ணமிட ஆரம்பித்தது. உண்மைக் குற்றவாளியான இந்த உலகம் அந்த நிரபராதிகளின் செயலுக்குச் சூட்டும் பட்டம்—விபசாரம்! உரத்த குரலும் அதற்கு உட்பட்டு ஆட ஒரு சில ஏமாளிகளும் இருப்பதால்

எதையும் செய்யும் உரிமைதான் இந்தச் சமூகத்துக்கு இருக்கிறதே! படிக்கத் தொடங்கினேன்.

"மலரின் மனம் அலையத் தொடங்கியதை அதன் முழு உரிமையையும் விலைக்கு வாங்கியிருந்தவள் எப்படியோ தெரிந்துகொண்டாள். முரட்டுக் கைகளால் மலரைப் பிடித்துக் கசக்கினாள். இதழ்கள் கசங்க இதயந் துடிக்க மலர் மனம் புழுங்கி அழுதது. இன்னுஞ் சற்று நேரத்தில் அழகையும் மணத்தையும் தன்னிடமிருந்து கசக்கிப் பிழிந்துவிட்டு மண்ணோடு மண்ணாகத் தன் வாழ்வை மடிய வைக்கப்போகிறாளே அவள் என்று தவித்தது. ஆத்திரத்தோடு அவள் அந்த மலரை வீசி எறிந்தாள்."

"மலரின் தலைவிதி இப்படியா ஆகவேண்டும்?" என்று என் மனம் வெதும்பிக் கேட்டது.

"மதி கெட்டிருக்கும் வரையில் அந்தத் 'தலைவிதி' அப்படியேதானிருக்கும்" என்று அதற்குரைத்தேன் நான். விழிகளைத் துணைக்கழைத்துக்கொண்டு மலரின் வாழ்க்கையைத் தொடர்ந்தது என் மனம்.

"நினைவு மங்கி மயங்கிக் கீழே கிடந்தது அந்த மலர். நெருப்புத் துண்டுகளைப் போல எரிக்கக் காத்திருக்கும் அந்த இரு கண்களும் அதன் மனத்தில் நடுக்கத்தை உண்டாக்கின. ஏழ்மை நிறைந்திருந்தாலும் எரியும் அகல் விளக்கைப் போலக் குளிர்ச்சி நிறைந்த அந்தக் கண்களுக்கும் இந்தக் கண்களுக்கும் எவ்வளவு வேற்றுமை? திடீரென ஏற்பட்டுச் சுற்றிச் சுழன்றது ஒரு சூறாவளி. காற்றில் பறந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது மலர்."

"விடிந்துவிட்டதா?" என்று என் மனம் என்னைப் பார்த்துக் கேட்டது.

"இந்த இடத்தில்தான் கதாசிரியர் மனப்பான்மை தெரியும். மலருக்கு வாழ்வளித்தால் சமுதாயம் எதிர்க்கும். அளிக்காவிட்டால் மற்ற மலர்கள் மனந் துடிக்கும். இந்த ஆசிரியர் கைக்கூலியாக இருந்தால் எப்படி விடியும்?"

என்று கேட்டேன். என் மனம் மௌனம் சாதித்ததால் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது எனத்தான் நம்பினேன். அதுவும் பார்க்கத் தொடங்கியது.


"மயக்கந் தெளிந்து கண்களைத் திறந்து பார்க்கும்போது மறுபடியும் ஒரு மயக்கந் தொடர்ந்தது மலருக்கு! அதன் சிவந்த இதழ்களை ஒரு சிரிப்புக் கவ்வியது. மலர் அவளைப் பார்த்தது. அவள் மலரைப் பார்த்தாள். 'தன்னை மறந்தேன் மதன மோகனு' என்று மலர் பாடவுமில்லை. 'நானுன்னை மறவேன்" என்று அதற்கு அவள் உறுதி கூறவுமில்லை. 'பிரேமையால் யாவும் மறந்தோமோ' என்று பாடாமலே அந்த நிலையில் இருந்தனர்."

"மங்களம் சுபமங்களம் என்று பாடட்டுமா?" என என்னைப் பார்த்துக் கேட்டது என் மனம்.

"ஒரே ஒரு மலருக்குத்தானே விடிந்தது."

"மறுபடியும் துன்ப நினைவுகளா?" என்று அது சலித்துக்கொண்டது.

ரயில் ஓடிக்கொண்டே இருந்தது. வானத்தில் மையிருட்டு மண்டிக் கிடந்தது. சுற்றியிருந்தவர்கள் வாய் இன்னும் ஓயவே இல்லை. ஜன்னலோரத்து அழகியும் அவளுக்கு அந்த இடை நேரத்தில் ஏற்பட்ட அழகனும் கண்ணால் பார்த்துக் கருத்தால் ஒருமித்தனர் போலும்! அந்த "மலரும்—மங்கையும்!"—எவருக்கும் அதைப்பற்றிய கவலை இருந்ததாகவே தெரியவில்லை!



# தேய்ந்த நிலா

"அன்புடையீர்" எனத் தொடங்கியிருந்தது அந்தக் கடிதம். ஒத்த அளவில் குண்டுமல்லிகைகளைப் பறித்தெடுத்து ஒன்றுசேர்த்து வைத்தது போல அந்த எழுத்துக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒருமுறை அதை ரசித்து அனுபவித்தான்.

"நெஞ்சுக்கு வஞ்சகம் செய்யாமல் எழுதுகிறேன்."

விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே சத்தியம் செய்துவிட்டுத் தொடங்குவது போலக் காணப்பட்டன அந்த வார்த்தைகள்.

"என்னை முன்பின் தெரியாத ஒருவருக்கு மணமுடித்து வைத்தார்கள். நம் நாட்டில் வழக்கமாக நடப்பதுபோலத்தான் அதுவும் நடந்தது. அவர் என் உடலைப் பூரணமாகக் கட்டுப்படுத்தி விட்டார். ஆனல் உள்ளத்தைப்பற்றிக் கவலையே படவில்லை.

"நானுக அதை அர்ப்பணம் செய்வேன் என்று எதிர் பார்த்தாரோ என்னவோ? தானுக அதைப் பற்றி எடுத்துக் கொள்ள அவர் முயற்சிக்கவே இல்லை!" ஏதோ அவள் மனவேதனையை எழுத்துருவாக்கியிருந்தாள். அதில் மறைந்திருந்த உண்மைகள் அவன் மூளையைப் போய்த் தாக்கின.

"பெண்களே எப்போதும் பிடிவாதம் உள்ளவர்கள் என்று தூற்றுகிறுர்கள். வெட்கமும் பயமும் வலிவற்ற உள்ளமுந்தான் அவர்களை அப்படி நடக்கச் சொல்லுகின்றன என்பதை யாரும் உணருவதில்லை."

பூட்டியிருந்த மனக்கதவைத் திறந்து உண்மைகளை உள்ளவாறே எடுத்து வெளியில் வைத்ததுபோல் இருந்தன அந்தச் சொற்றொடர்கள். "காற்றில்லாத வீடு, நீரே அகப்படாத பாலைவனம், வாழ இடமளிக்காத நாடு இவை மூன்றும் பெருங்கொடுமைகள் என்று உங்கள் கவிதையிலே எழுதியிருக்கிறீர்கள். இதயம் ஒன்றுபடாத வாழ்க்கை என்னைச் சித்திரவதை செய்தது. உணர்ச்சியில்லாத, உறவு தேடாத பொருள்களில் மனமும் ஒன்றல்லவே!"

அவன் சேர்க்க விட்டுப்போன பொருளை அவள் சேர்த்திருந்தாள். முடிவு என்னதான் இருக்கும் என்ற ஆவலோடு மேலே தொடர்ந்தான்.

"தன்னந்தனியாக மனம்விட்டுப் பழக யாருமின்றித் தவித்தேன். அப்போதுதான் உங்கள் கவிதைப் புத்தகம் என் கைக்குக் கிடைத்தது. பலமுறைகள் படித்தேன். 'படித்தேன்' என்று எல்லோரும் எழுதுவதுபோலத் தவறுதலாக எழுதிவிட்டேன். நான் அவைகளைப் படிக்கவில்லை. ஒவ்வொரு கவிதையும் உயிர்பெற்று என்னோடு பேசின; ஒழிந்த வேளைகளில் தோழனாக உறவாடின. எனக்குத் தெரியாமலே, நீங்களும் உணராமலே மெள்ள மெள்ளக் கவிதைகளைக் காட்டி என் மனதில் புகுந்துவிட்டீர்கள்! பெண்ணின் இதயத்தை எப்போதும் ஒருவர்தானே ஆட்சி செய்யமுடியும்!"

மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டான். ஏதோ ஒரு பெருமை அவனுக்குக் கர்வத்தை உண்டாக்கியது. காணமற்போன தன் குழந்தை திடீரென எதிரே நின்றால் ஒரு தாய் எப்படிக் கட்டித் தழுவிக்கொள்வாளோ அதே போல அந்த வார்த்தைகளை அவன் இதயம் அணைத்துக் கொண்டது.

"உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை 'கடிதம் எழுதி அழை' என்று என்னைக் கேட்டுக் கொண்டது. நாளை என் கணவர் ஊரில் இருக்கமாட்டார். எதிர்பார்த்து...

ஸ்டேஷனில் காத்திருப்பேன். தவறாது வாருங்கள். ஏமாற்றம் தராதீர்கள்.''

கடிதம் முடிந்துவிட்டது. கண்கள் மட்டும் அதிலிருந்து விடுபட முடியாமல் தவித்தன. எங்கோ இருந்து, எவளோ ஒருத்தி, எதற்காகவோ அவனை அழைத்திருந்தாள். எத்தனையோ நாட்கள் அவள் பட்ட அவதி அதிலிருந்து அவனைக் குழப்பிற்று.

அழகின் முழு உரிமையுள்ள பெண் குலந்தான் அவனுடைய கவிதைகளின் ஊற்று. உவமைகளை அள்ளிக் கொட்டி விதம் விதமான உருவங்களில் அவர்களைக் கற்பனை செய்திருக்கிறான். ஒழிந்த வேளைகளில் அந்த உருவங்கள் அவனோடு உறவாடின. படுத்துக் கண்ணை மூடினால் எதிரே வந்து 'என்னைப் பார்' என அழைக்கும் ஒரு பெண்ணுருவம்; கண்ணயரும் வரையில் மறையாமல் அவன் முன்னேயே நிற்கும். இவ்வாறு கனவுலகத்தில் காதல் நாடகமாடினானே தவிர நினைவுலகைக் கண் திறந்து கூடப் பார்த்ததில்லை. அந்தக் கடிதம் 'இதோ அழைப்பு' என வரவேற்றது. ஒருவிதமாக அந்தக் கடிதம் மேஜையில் விழுந்தது. கடிகாரத்தைப் பார்த்தான்; எட்டு மணியில் நின்றுகொண்டிருந்த சிறிய முள் பன்னிரண்டை நெருங்கிக்கொண்டிருந்த பெரிய முள்ளை எட்டிப் பிடிக்க இன்னும் எத்தனை நேரமாகும் என்று கணக்குப் போட்டுக்கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக ஒரு கொத்துப் பூக்கள் மலர்ந்து நகைமுகங்காட்டிக் கொண்டிருந்தன. பறித்துப் பையில் போட்டுக்கொண்டு புறப்பட்டான்.

அழுது வடிந்து கொண்டே ரயில் வண்டி ஓடியது. 'தவிர்க்கமுடியாத தொல்லை' என மனதைத் தேற்றிக் கொண்டான். எதிரிலே யாரோ ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தார். அடுத்த பெஞ்சியில் ஒருவன் பாடிக்கொண்டிருந்தான். ஓடும் வண்டி தாளம் போட்டுக்கொண்டிருந்தது. புகைந்து எரிந்துபோன சாம்பலைத் தட்டிவிட்டுச் சிகரட்டை ஒரு முறை இழுத்தான்.

* * * *

அன்போடும் ஆதரவோடும் கணவனால் கண்காணிக்கப் படாத அவள் முகத்தில் ஏக்கம் படிந்திருந்தது. வாழ்க்கை அளித்த ஏமாற்றமும் ஏக்கத்தோடு கலந்து உருக்கி வார்க்கப்பட்டிருந்தது. படபடப்பும் ஆத்திரமும் நிறைந்து கைகாட்டியையே பார்த்துக்கொண்டிருந்தாள். கைகாட்டி தலைநிமிர்ந்து கம்பீரமாக நின்றது. பிளாட் பாரம் காலியாயிருந்தது. "ஏம்மா, யாராவது வர்ராங்களா?" என்று அந்த ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டார். "ஆமாம்" என்று சொல்லித் தலையை அசைத்தாள். ஏதோ தன் பழைய அனுபவத்தை நினைத்துச் சிரித்துக்கொண்டே தன் காரியத்தைக் கவனிக்கப் போனார். சந்தடி ஏது மில்லாதிருந்த பிளாட்பாரத்தில் கூச்சலுங் குழப்பமுங் குடியேறின. மணியோசை கேட்டது. கர்வம் பிடித்திருந்த கைகாட்டியை யாரோ தலையிலடித்து மட்டந்தட்டினார்கள். ரயிலும் தன் உருவத்தைக் காட்டியது. பரபரப்புடன் எல்லோரும் சென்றுகொண்டிருந்தனர். அவள் மட்டும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டே வரும் ரயிலை உற்றுப்பார்த்துக்கொண்டே நின்றாள். வண்டி வந்து நின்றது. ஒவ்வொருவராக இறங்கி வந்துகொண்டிருந்தார்கள். அவள் தன் கண்களை மட்டும் அலையவிட்டு அவனைத் தேடிக்கொண்டிருந்தாள்.

பெட்டியை எடுத்துக் கொண்டு அவன் கீழே இறங்கினான். அவளைத் தேடினான். எத்தனையோ பெண்கள் நின்று கொண்டிருந்தனர்; ஒருத்திக்காவது அவன் ஒரு 'தேவை' எனப் படவே இல்லை; எந்த அழகி முகத்திலும் எதிர்பார்க்கும் தோற்றமே காணப்படவில்லை. பேசாமல் வெளியே போகும் வழியை நோக்கி நடந்தான்.

எரிந்துகொண்டிருந்த விளக்கு அயர்ந்து கண்ணை மூட முயற்சி செய்து கொண்டிருந்தது. ஒரு பெண்ணுருவம் அதன் அருகில் நின்றது. அதை நோக்கி நடந்தான். எழிலும் இளமையும் அவன் எதிரே நின்று புன்முறுவல் செய்தன.

கண்களிலேயே அத்தனை இரத்தமும் பாய்ந்து தேங்கிவிட்டதால் வாய் மரத்துப்போய்ப் பேச முடியாமல் தவித்தது! "நீங்கள் தானே..." என்று இழுத்தாற் போலச் சொல்லி எப்படி முடிப்பது என்று தெரியாமல் அவள் திகைத்தாள். "ஆமாம்'' என்பதற் கறிகுறியாகத் தலையை அசைத்தான். இருவரும் ஒன்றுமே பேசாமல் நின்று கொண்டிருந்தார்கள். அயர்ந்திருந்த விளக்கின் கண்கள் தாமாக அவிந்து போயின. காரிருள் சுற்றிலும் கவிந்து கொண்டது. "போகலாமா?" என அழைத்தான். "எங்கே போவது?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள். "வீட்டிற்கு" என்று அவன் சொல்லி முடிக்கக்கூட இல்லை. அதற்குள் "வீட்டிற்கா? வேண்டாம். இங்கேயே இருக்கலாம். விடிந்தவுடன் புறப்படலாம்'' என்று சொல்லிக் கீழே உட்கார்ந்தாள். வேறு வழியில்லாமல் அவனும் உட்கார்ந்தான்.

இருவரும் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாமல் வெகுநேரம் உட்கார்ந்தே இருந்தார்கள். சூரியன் மெள்ளத் தலையை நீட்டி உடலை எப்படி உள்ளே நுழைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான். தூணில் சாய்ந்து கொண்டிருந்த அவளுடைய உருவம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. தாய் வீட்டிற்குத் திரும்பும் பெண், வீட்டுக்குள்ளே நுழையும்போது காணப்படும் அத்தனை உணர்ச்சிகளும் அவள் முகத்தில் படிந்திருந்தன. இருள் துளிக்கூட இல்லாமல் ஒளி மறைத்துவிட்டது. இருவரும் எழுந்து அங்கிருந்து நடந்தார்கள்.

காலைச் சிற்றுண்டி ஒருவகையாக முடிந்தது. "எங்கே போவது?'' என்று முடிவு செய்யாமல் இருவரும் நடந்து கொண்டே இருந்தார்கள். 'இதோ இருப்பிடம்' என்று எதிரில் இருந்த தோட்டம் அழைத்தது. காலை நேரத்திலே உள்ளே நுழைந்த இருவரையும் தோட்டக்காரன் ஆச்சரியத்தோடு பார்த்தான். காலியாயிருந்த இடத்தில் இருவரும் உட்கார்ந்தார்கள்; அங்கே வேறு யாரும் இல்லை.

"எப்படிப் பேச்சைத் துவக்குவது?" என்று புரியாமல் விழித்தான். உலகத்தை ஏட்டிலேயும் எண்ணத்திலேயும் பார்த்த அவனுக்கு இது ஒரு புது அனுபவமாக இருந்தது. கலைந்திருந்த தலைமயிரைக் கைகளால் ஒதுக்கிச் செம்மை செய்துகொண்டிருந்தாள் அவள். வளைந்து நெளிந்த வட்டமாகச் சுற்றப்பட்டிருந்த அவள் தலைமயிர் அவனை வசீகரித்தது. முடியில்லா அரசன் போல பூவில்லாமல் அது இருந்தது. "தலையில் இருந்த பூ, கீழே விழுந்துவிட்டதே." என்றான். "பூவா? நான் வாங்குவதே இல்லையே" என்று சொல்லி அவனைப் பார்த்தாள். எதையோ எதிர்பார்த்த அவன் ஏமாற்ற மடைந்தான். பைக்குள் கைவிட்டு அதில் சிக்கிய பூவை எடுத்து அவள் கொண்டையில் செருகினான். ஆச்சரியத்தோடு அவன் முகத்தைப் பார்த்தாள். "நான் கொண்டுவந்தேன், வாடிவிட்டது." என்று பரிதாபமாகச் சொன்னான். "வாடினால் என்ன?" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டே பூவைச் சரிசெய்து கொண்டாள்.

இருவருக்கும் என்ன பேசுவது என்று புரியவில்லை. எதிரே இருந்த பூச்செடியில் இருந்த மலர் ஒன்று அப்போதுதான் விரிந்தது. அதைச்சுற்றி ஒரு வண்டு வட்டமிட ஆரம்பித்தது. ஆடாமல் அசையாமல் அந்த மலர், வண்டு எப்போது வந்து தன் ஆவலைத் தீர்க்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. சுற்றிச் சுற்றி வண்டு வட்டமிட்டு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தது. "புதுக் கவிதை ஏதும் உதயமாகிறதோ?" என்று சொல்லி அவனைப் பார்த்தாள். புன்சிரிப்பு ஒன்று அவன் உதடுகளில் உதயமாயிற்று. முகபாவம் 'பொல்லாக் குறும்புக்காரி' என எடுத்துக் காட்டிற்று. அவன் இதயத்தில் இத்தனை நாழியாக இருந்த அச்சம் அகன்று 'பேசலாம்' என்ற திடம் பெற்றான். "அந்த வண்டு ஒவ்வொரு முறையும் மலரின் மேல் உட்காரும்போது மலருக்கு எப்படி இருக்கும்?" என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு விடையை எதிர்பார்த்தான். "வண்டுகளே அப்படித்தான். தேனைத்தான்

முக்கியம் என்று நினைக்கும். அவை மலரைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை'' என்றாள். வெறுப்போடு அவள் கொட்டிய அந்த வார்த்தைகள் சலித்துப்போன அவள் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டின. அந்தக் கடிதம் அவன் கண்ணெதிரே தோன்றிற்று. ஏதோ செய்துவிட்டு வண்டு எங்கேயோ பறந்து சென்றது!

முகவுரையை முடித்துவிட்டு விரிவுரையை ஆரம்பித்தாள். பேசிக்கொண்டே போனாள். பள்ளித் தோழிகளுடன் விளையாடிக் களித்த நாட்களை அவள் விவரித்தபோது இப்போது சற்று எழுந்து தன்னோடு அதேமாதிரி விளையாடமாட்டாளா என்று ஏங்கினான். தன்னோடு சிரித்துப் பேசிக் குதித்து விளையாடிய தன் தோழிகளைப்பற்றி மகிழ்வோடு கூறிக்கொண்டிருந்தாள். அப்படியே அவைகளைத் தன் மனதில் பதிவு செய்துகொண்டே அவன் கேட்டுக் கொண்டிருந்தான். தனிமையில் கிளியேதும் அகப்படாமல் தானே ஒரு கிளியை உருவாக்கி அதோடு கொஞ்சிக் காலங்கழித்த அந்தப் பருவத்தை அவனிடம் வர்ணித்தாள். உண்மையிலேயே ஒரு கிளியின் உடலில் அவள் விரல் பட்டிருந்தால் அதன் உடல் எவ்வாறு சிலிர்க்கும் என்று எண்ணிப்பார்த்து மகிழ்ந்தான். நாணமும் வெட்கமும் கலந்த குரலிலே திருமண ஏற்பாடுபற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவனுக்கும் ஏதோ பேச வேண்டும் என்ற எழுச்சி ஏற்பட்டது. "உங்கள் கணவருக்கு என்ன வேலை?'' எனக்கேட்டான். உட்கார்ந்திருக்கும் தாயின் மடியில் ஏறி உட்காரக் குழந்தை ஓடி வரும்போது, தாய் எழுந்து நடக்க ஆரம்பித்தால் குழந்தையின் முகம் எப்படி மாறுமோ அதேபோல அவள் முகம் மாறிற்று. "தெரியாது'' என்று சுருக்கமாகப் பதில் சொன்னாள். "நீங்கள் கேட்கவில்லையா?'' எனக் குறுக்குக் கேள்வி போட்டான். ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாகவே இருந்தாள். "போகலாமா?'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள். வேறு வழியில்லாமல் அவனும்

எழுந்தான். மணிக்கூண்டுக் கடிகாரம் நாலு மணி என்று உரத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. உண்மைதான் என்று தன் கதிரவன் தன் கதிர்களால் சொல்லாமற் சொல்லிக் காட்டினான். பசி அப்போதுதான் தான் எங்கேயும் ஓடிப்போய்விடவில்லை எனக் காட்டிக்கொண்டது. இருவரும் எதிரில் இருந்த சிற்றுண்டி விடுதிக்குள் நுழைந்தனர்.

* * * *

சுவைத்துச் சுவைத்து ஒவ்வொரு தின்பண்டமாகச் சாப்பிட்டாள். ஹோட்டலிலேயே வழக்கமாகச் சாப்பிட்டு வெறுப்படைந்திருந்த அவனுக்கு ஆத்திரமுண்டாகியது. "வீட்டில் செய்தால் இன்னும் நன்றாக இருக்கும்." என்று தன் கருத்தைத் தெரிவித்தான். ஆச்சரியத்தோடு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகத்தோற்றம் அவளுக்கு இன்னதென்றே புரியவில்லை.

இருவரும் புறப்பட்டனர். சேர்ந்து நடந்து சென்றார்கள். அவள் பேசிக்கொண்டே இருந்தாள்; அவன் கேட்டுக்கொண்டே நடந்தான். எதிரே அந்தச் சினிமாக் கொட்டகை இருந்தது. "சினிமாவுக்குப் போகலாமா?" எனக் கேட்டான். 'எங்கேயும் வரத் தயார்.' என்ற பார்வையோடு அவனைப் பார்த்தாள்.

டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். விளக்குகள் அணைந்தன. காட்சிகள் திரையில் விழத் தொடங்கின. கதாநாயகி படுக்கையில் படுத்துக்கொண்டே பாடிக் கொண்டிருந்தாள். விதவிதமான கோணங்களைக் கையாண்டிருந்தார் படத்தின் டைரக்டர். திரும்பி அவளைப் பார்த்தான். நாற்காலியில் உடலைக் கட்டுப்படுத்தாமல் சாய்ந்திருந்தாள். மூடியிருந்த கண்களை அமைதி அணைத்துக் கொண்டிருந்தது. சிவந்த உதடுகளிடையே ஒரு கோடு போல வெள்ளைப் பற்கள் அந்த இருளிலும் மின்னின. அவள் முகத்தில் ஏதோ ஒரு திருப்தி நிறைந்திருந்தது. தன்னை மறந்து, உலகை மறந்து, ஏதோ ஒரு இன்பத்தை

அனுபவித்துக் கொண்டிருந்தாள். எவளோ ஒருத்தி—இங்கிதந் தெரியாத கணவன்—எப்படியோ பழக்கப்பட்டவன்—இவை மூன்றும் புரியாத கேள்விகளாக மாறி விடை தெரியாமல் அவனை விழிக்க வைத்தன.

படம் முடிந்தது. அவளை எழுப்பக் கையைப்பிடித்து ஆட்டினான். விசையை முடுக்கியவுடன் விசிறி தானாகச் சுழல்வதுபோல அவன் உடல், மனம், மூளை அத்தனையும் சேர்த்து சுற்ற ஆரம்பித்தன. அவள் விழித்துப் பார்த்தாள். எல்லோரும் வெளியேறிக் கொண்டிருந்தனர். விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

'முடிவுதான் என்ன?' என்று துடித்துக் கொண்டிருந்த அவன் மனம், அவனைப் பார்த்துக் கேட்டது. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அது நடக்காமல் இருந்தால் எப்படியிருக்குமோ அதே நிலை அவனைத் தொல்லைப்படுத்தியது. ரயில்வே ஸ்டேஷனை நோக்கி அவளோடு அவன் கால்களும் போய்க்கொண்டிருந்தன. "படம் எப்படி?" என்று பரிகாசமாகக் கேட்டான். "மிகவும் நன்றாக இருந்தது." என்றாள். அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். 'இன்பங் கொள்ளை கொள்ளை' என்று பாரதிதாசன் கவிதையின் அடிகளைப் படித்துக் காட்டிக்கொண்டிருந்தன அவள் விழிகள். நடுங்கும் கைகளால் அவள் கையைப் பற்றினான். நடந்துகொண்டே இருந்த அவள் நின்றாள். சலனமற்ற பார்வையோடு அவன் முகத்தைக் கவனித்தாள். அவன் கண்கள் கெஞ்சிக்கொண்டிருந்தன. முகம் பரிதாபமாகக் காட்சியளித்தது. போதை ஏறிய அந்த உடல் தன்னைத் தனித்துக் காட்டிக்கொண்டிருந்தது. "சீ! இவ்வளவுதானா?" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து ஓடிவந்து வெளியே குதித்தன. வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டாள். வேகமாகத் திரும்பி வந்தவழியே நடந்தாள். எங்கேயோ சென்று மறைந்துபோனாள்.

குழம்பிக்கொண்டே தலையை நிமிர்த்தினான். மேலே பாதி தேய்ந்துபோன நிலா ஒளிவீசிக் கொண்டிருந்தது. பரிதாபமாக அதைப் பார்த்தான். "எப்படி இருந்தாலும் இன்னும் உயரத்திலேதான் இருக்கிறேன்." என்று அது சொல்வது போலத் தோன்றிற்று. அமைதி நிறைந்த அந்த இரவில் எங்கேயோ இருந்து "ஒருமனப் பட்ட தன்றோ திருமணமாம்" என்ற பாடல் தெளிவாக அவன் காதுகளில் விழுந்தது. அதுவும் ஒரு பெண் குரல்தான். எதிரே "ராதாவின் போர்வாள்" என்ற விளம்பரப் பலகை தொங்கிக் கொண்டிருந்தது. கொட்டகைக்குள் நாடகம் நடந்து கொண்டிருந்தது.



# துன்பக் கதை

எதிர்வீட்டிலிருந்து காற்றில் மிதந்துவந்த நாதஸ்வர இசை என் காதுகளைத் தாக்கியது. ஜன்னல் வழியாக வெளியே பந்தலைப் பார்த்தேன். யாராரோ பெரிய மனிதர்கள் — தம்பதிகளை வாழ்த்தியருள அழைப்புக் கொடுத்து வரவேற்கப்பட்டவர்கள் — தங்கள் சொந்தக் கதைகளைப் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

"அறுபது வயதுக் கிழவனுக்கும் இருபது வயதுக் குமரிக்கும் திருமணமாமே" — ஊர் முழுவதும் பேசிக்கொண்ட இந்தக் கேலிப்பேச்சு என் காதுகளுக்குள்ளேயே தங்கித் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது.

"கற்சிலையைச் சுற்றிக் கவர்ச்சிகரமான சேலையைக் கட்டி வைத்தால் அதைப் பார்க்கும் எந்தப் பெண்ணுக்காவது மனமயக்கம் உண்டாகிவிடுமே." என்ற சந்தேகம் என்னை அறியாமலே எழுந்தது.

"பக்தி மனப்பான்மை இருக்கும் வரையில் எந்த விதமான பாதகமும் நேர்ந்துவிடாது." என்று என் மனதில் எங்கோ மறைந்திருந்த சமுதாய அமைப்பு சமாதானம் கூறியது.

"அப்போதுதான் பூத்த புதுமலரை அர்ச்சனைக்கென்று பிய்த்துச் சின்னாபின்னப் படுத்துவதுதான் பக்தியா?" என்று அறிவு எதிர்த்துக் கேட்டது!

திருமணக் கோலத்தில் இருக்கும் என் சக்குவின் உருவம் மன அரங்கில் தோன்றியது. செவ்விதழ்களும் சிரித்த முகமும்! பட்டுப்போன்ற கன்னங்களும் பட்டால் விடாது பற்றிக்கொள்ளும் பார்வையும்! என்னென்னவோ கற்பனைகள் என் சிந்தனையிலிருந்து தெறித்துச் சிதறின. அவள் ஒரு சிலையாகவோ சித்திரமாகவோ இருந்திருந் தால் உலகம் அந்த அழகைப் பார்த்து ரசித்துக்கொண் டாவது இருந்திருக்கும். உயிரும் உணர்ச்சியுங்கொண்ட பெண்ணாயிருப்பதால்தான் அவள் வாழ்வை இன்று உருக்குலைக்கிறது.

கடுங் கோடையும் குளிருமே நிறைந்த என் வாழ்க்கைப் பாலைவனத்தில் என்னைத் தன்னந் தனியே தவிக்கவிட்டுச் செல்லுகிறாள் அவள் என்பதை நினைத்தபோது உலகம் தலைகீழாகச் சுழலத் தொடங்கியது எனக்கு. நான் விட்டுப் பிரிந்த இறந்தகாலம் என் மனதைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டது. தென்றலாகத் தொடங்கிய சிந்தனை மெல்ல மெல்ல வளர்ந்து புயலாக வீசத் தொடங்கிற்று. என் இதயக் கடல் குமுறிக் கொந்தளித்தது!

## 2

நான் என்று தொடங்கி எழுதப்படும் பெரும்பாலான கதைகளில் எப்படியோ சோகத்தின் சாயல் படிந்துவிடு கிறது. துர்ப்பாக்கியம் மிகுந்த என் வாழ்வு மட்டும் அந்த விதிக்கு விலக்காக இருக்குமா? வாழ்க்கையை வசந்தமாகவே விரும்பி வரவேற்றேன். ஆனால் கடுங் கோடையே என்னைச் சுற்றிக் கவிந்துகொண்டு வாட்டி வதைத்தது. அந்தக் கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளக் குளிர்தருவோ, தருநிழலோ, நிழல் கனிந்த கனியோ என் நினைவுக்கெட்டிய தூரம்வரை தட்டுப்படவே இல்லை!

சிறுவயதில் ஏதாவது ஒரு காரணத்துக்காக நான் தவறாமல் என் அப்பாவிடம் அடிவாங்கிக்கொண்டே யிருப் பேன். அப்போதெல்லாம் என் தாய் நான் அடிபடுவதைத்

தடுக்காவிட்டாலும் "ஐயோ பாவம்" என்று அனுதாபங் காட்டக்கூட மாட்டாள். "இத்தனை அடி வாங்கியும் இன்னும் சொரணை வரவில்லையே" என்று ஏசித்தான் காட்டுவாள்.

அன்று வலியின் வேதனை தாங்கமாட்டாமல் திண்ணையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தேன். "எங்கே யாவது ஓடிப்போய் விடலாமா?" என்ற எண்ணம் என்னைத் தன்பால் திருப்பிக்கொண்டிருந்தது. ஆனால் அழுகை மட்டும் ஓயவில்லை. "வலிச்சுதா?" என்ற குரல்கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். எதிர்வீட்டுச் சக்கு என்னெதிரே நின்றுகொண்டிருந்தாள். அவள் பார்வையில் நிறைந்திருந்த கனிவு, குரலில் கலந்திருந்த குழைவு இரண்டுஞ் சேர்ந்து என் அழுகையை மேலும் அதிகமாக ஆக்கின.

"சக்கு" என்றேன்.

"ஏன்" என்று கேட்டுக்கொண்டே என்னருகில் வந்து உட்கார்ந்தாள்.

"ஒருவேளை நான் பேய்க்கும் பிடாரிக்கும் பிள்ளையாகப் பிறந்திருப்பேனோ?" என்று வெகு நாட்களாக எனக்கிருந்த சந்தேகத்தைக் கேள்வி உருவில் வெளியிட்டேன்.

உடனே வாய்விட்டு உரத்துச் சிரித்தாள் அவள். எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ஓங்கி விட்டேன் ஒரு அறை அவள் கன்னத்தில். "ஐயோ" என்றலறிவிட்டாள் சக்கு. "டேய்" என்ற என் அப்பாவின் அழைப்பு உள்ளேயிருந்து கேட்டது. எங்கேயாவது ஓடித் தப்பித்துக் கொள்ளலாமா என்று எண்ணம் ஏற்பட்டது எனக்கு. 'அப்படித்தான் ஓடினாலும் திரும்பி வந்துதானே ஆகவேண்டும். அப்போது.........!' நடுங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தேன். பிறகு......?

வழக்கமாகக் கிடைக்கும் அதே தண்டனைதான்!

இந்தத் தடவை நான் திண்ணையில் வந்து உட்கார்ந்த போது சக்குவின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அவள் மட்டும் அழுதிருக்காவிட்டால்.........!' அவளோடு பேசுவதே இல்லை என்று உறுதி செய்துகொண்டேன்.

"இப்படியாகும்னு தெரிஞ்சிருந்தா நான் அழுதே இருக்கமாட்டேன்."

நிமிர்ந்து பார்த்தேன். சக்குவின் கண்கள் அன்பும் அனுதாபமும் நிறைந்து காட்சியளித்தன. அவள் கன்னம் இன்னும் சிவந்துதான் இருந்தது. பட்டுப்போயிருந்த என் உள்ளத்தில்கூடச் சிறிது கலக்கந் தோன்றியது. "வலிச்சுதா?" என்று கேட்டேன். பேசாமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள் அவள். குனிந்து அவள் முகத்தைப் பார்த்தேன். குறும்பும் கேலியும் அதிலிருந்து கூத்தாடின!

உதிர்ந்துபோகும் தாரகையைப் பற்றி இழுத்துக் கொண்டிருக்கும் வானத்தைப் போலத் தீய்ந்து கருகிக் கொண்டிருக்கும் என் வாழ்வு பாழாகாமல் காத்துவந்தாள் சக்கு. உலகிலேயே எனக்காகக் கண்ணீர்விட்ட ஒரே ஜீவன் அவள். அவள் உருவை என் உள்ளம் விரும்பி வரவேற்காத நாளே கிடையாது.

"சக்கு, என்னையே கல்யாணம் பண்ணிக்கிறியா?" என்று பல தடவைகளில் அவளைக் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அவள் வாய்திறந்து எந்தவித பதிலும் சொல்வதில்லை. அன்பும் ஆசையும் நிறைந்த பார்வையால் என் முகத்தைப் பார்ப்பாள். பின்பு தலையைக் கவிழ்த்துக் கொள்ளுவாள். அவ்வளவுதான்!

திரையில் ஓடிக்கொண்டேயிருந்த படத்தைத் 'இடை வேளை' என்ற அறிவிப்போடு திடீரென நிறுத்தியதைப் போலக் கட்டுக்காவல் இல்லாது திரிந்த சக்குவுக்கு எதிர் பாராமல் சிறைவாசம் கிடைத்தது. நான் தனியாள்

ஆனேன். சூழ்நிலை வேறு என்னைச் சுற்றிநின்று வேட்டையாடத் தொடங்கியது. எட்டுந்தூரத்தில்தான் இருந்தாள் என் சக்கு. ஆனால் எட்டாப் பொருளாக எனக் காகிவிட்டாள். அவளுக்கு மட்டும் என் நிலை தெரிய நேர்ந்தால்...!

## 3

திருமணமாகிச் சக்கு தன் கணவன் ஊருக்குப் போய் விட்டாள். என் வாழ்க்கைப் புத்தகத்தின் ஏடுகளை நான் புரட்டாமல் அவைகள் தாமாகவே புரண்டுகொண்டே சென்றன. காலப்போக்கில் ஏதோ ஒரு மாறுதல் என் உடலிலும் உள்ளத்திலும் தோன்றத் தொடங்கியது. பாரதியார் பாடல்களில் 'கண்ணன் பாட்டு'க்களை விடக் 'கண்ணம்மா பாட்டு'க்கள் தாம் என் கருத்தை அதிகமாகக் கவர்ந்தன. இதுவரையில் சுற்றி நின்று நிழல்தரும் சோலை தான் பெண் என்று நினைத்திருந்தேன். இப்போதுதான் நான் அந்தச் சோலையில் கீதம் பாடித் தேன் குடிக்கும் வண்டு என்ற உண்மை எனக்குத் தெரியவந்தது. அழகும் அலங்காரமும் நிறைந்த அந்தப்புரங்கள், கட்டிலறைகள், கண்ணாடிக்கு முன் நின்று உடைமாற்றுங் கட்டங்கள் இவைகளாகவே நிறைந்திருக்கும் கதைகளையும் நாவல்களையும் தேடிப்பிடித்துப் படிக்கத் தொடங்கினேன்.

பூப்போலப் பாதுகாத்திருக்க வேண்டிய என் மென்மையான உள்ளத்தைச் சிறுவயதிலேயே கசக்கிக் கசக்கித் தீய்த்துவிட்டதால் என் மனதில் இருந்த உயர்ந்த பண்புகள் எல்லாம் வற்றி வறண்டே போய்விட்டன. தெளிந்த நீரோடையில் எதிர்நீச்சுப் போடும் மீன் குஞ்சுகளைப்போல என் உள்ளத்தில் உடல் வேட்கையால் தோன்றும் உணர்ச்சிகள் துள்ளிவிளையாடத் தொடங்கின! என்னைவிட ஏழெட்டு வயது மூத்த பெண்கள்மேல் கூடக் 'காதல்' கொண்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் மட்டும் 'நானேக்குங்கால் நிலத்தையும் நோக்காக்கால் என்னையும்' பார்ப்பதேயில்லை!

பெண்கள் அழுதால் உலகமே ஓடிவந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறது. ஆனால் ஆண்கள் அழுதால் கையாலாகாதவன் என்று ஏசித்தான் காட்டுகிறார்கள். கெட்டு நாசமாகப்போன நான் என்னைத் தொல்லைப்படுத்திய சூழ்நிலையை விட்டு ஓடினேன். எங்கெங்கோ திரிந்தேன். எங்கேயும் என் நிலைதான் இருந்தது. எல்லோரும் 'நானா'கவே தெரிந்தார்கள்.

கடைசியில் எப்படியோ சக்கு இருந்த ஊருக்கே வந்து சேர்ந்தேன். என்னைச் சக்கு வரவேற்றபோது அவள் உருவம் எனக்குக் கலக்கத்தை உண்டாக்கி விட்டது. மெருகு கலைந்திருந்த அவள் தோற்றம் என்னைத் துடிதுடிக்கச் செய்தது. அங்கே நான் தங்கியிருந்த அன்று முழுவதும் சேறும் சகதியுமாகவே என் மனதில் குழம்பிக் கொண்டிருந்தன.

"சீ! அவளையா அப்படி நினைப்பது?" என்று என் மனதில் எழுந்தது ஒரு எண்ணம்.

"அவள் என்ன? அவளும் ஒரு பெண்தானே!" என்ற சமாதானமும் கூடவே தோன்றியது.

"உனக்கு அவள் செய்த உதவிக்கு நீ செய்யும் கைம்மாறு இதுதானா?" என்று என்னிடம் கொஞ்சநஞ்சம் எஞ்சியிருந்த நல்ல பண்புகள் என்னைப் பார்த்துக் கேட்டன.

"பழுத்த பழத்தைச் சுற்றி வேலியமைத்துக்கொண்டு அதைப் பறிக்காமல் அழுகவிடுவதை விட..." என்னையே தேற்றிக்கொண்டேன்.

இரவு படுக்கப் போவதற்குமுன் பால் கொண்டுவந்து கொடுத்தாள் சக்கு.

"சக்கு" என்றேன்.

மௌனமாக என் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

"வாழ்வில் இருள்படிய விட்டுக்கொண்டே இருப்பது அறியாமையல்லவா?" என்று கேட்டேன்.

பெருமூச்சும் சிரிப்புமாக என்னைப் பார்த்தாள். அவள் முகத்தில் வெட்கமோ வேதனையோ இல்லை. அலட்சியமும் வெறுப்பும் நிறைந்த ஒரு தோற்றம்!

"இருள் என்பது என்ன? உலகத்தின் நிழல்தானே! உலகம் என்ன அவ்வளவு கொடுமையானதா, அதன் நிழல் கூட வேதனை தரும் அளவுக்கு?" என்று பதிலளித்தாள் அவள்.

காய்ந்து சருகாகிக் கொண்டிருந்த மலரான அவளைப் பார்க்க என்னால் சகிக்கவில்லை. அந்த மலர்ச்செடிக்கு மட்டும் நீர் வார்த்துக் காப்பாற்றினால்...! சிவந்த, மணம் நிறைந்த இதழ்களும ஜீவசக்தியும் நிறைந்துவிடுமே! மெல்ல அவள் கையைப் பற்றினேன். என் கைகள் நடுங்கிக் கொண்டேதான் இருந்தன. என்னையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் அவள். அந்தக் கைகளைப் பிடித்திழுத்தேன். ஓங்கி ஒரு அறை என் கன்னத்தில்! வேகமாகத் திரும்பி வெளியே நடந்து போனாள் சக்கு! வலியேதும் தோன்றவில்லை எனக்கு. ஆனால் அவளைப் பின் தொடரும் நெஞ்சுரம் மட்டும் உண்டாகவில்லை. எங்கோ என் மனதின் ஒரு மூலையில் சக்கு மறுபடியும் வந்து "வலிச்சுதா?" என்று கேட்கமாட்டாளா என்ற ஆசை மட்டும் தோன்றியது!

அமைதி நிறைந்த அந்த இரவில் என் மன நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருந்தன அந்தப் பாழும் கனவுகள்! வெகுநேரம் என்னால் அயர்ந்துறங்கவே முடியவில்லை. எப்போது அயர்ந்தேன் என்பது தெரியவில்லை. நான் எழுந்தபோது விடிந்து வெகுநேரமாகி யிருந்தது. வேலைக்காரி நானிருந்த அறையைக் கூட்டிக்கொண்டிருந்தாள்.

"மணி என்ன இருக்கும்?" என்று அவளை நான் கேட்டபோது உண்மையிலேயே இரவில் நடந்த அந்த விஷயம் வெளியில் தெரிந்துவிட்டதா என்று அறிய வேண்டும் என்ற ஆவல்தான் எனக்கிருந்தது.

4

"என் ஐயா! ராத்திரிப் பாலைக் குடிக்காமே அப்படியே வச்சிட்டிங்களே. கெட்டுப் 'போயிருக்கே இப்போ" என்று சொல்லிவிட்டுப் பால் பாத்திரத்தை எனக்குக் காட்டினாள் அவள்.

மேஜையருகே சென்ற எனக்கு அதிலிருந்த கடிதந் தான் கண்களில் பட்டது. எடுத்துப் படித்தேன்.

"அன்புள்ள......

ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றின் எல்லையை விட்டுக் கவனித்தால் கூட உன் செயல் நல்லதல்ல. எத்தனையோ முறைகள் உனக்கு ஆறுதல் அளித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் குளிர்ச்சி நிறைந்த அருவியாக இருந்தேன். ஏக்கம் நிறைந்த இதயமும் தூக்கம் வராத இரவுகளும் என்னை இப்போது ஒரு எரிமலையாக ஆக்கிவிட்டன. க்ஷயரோகத்தால் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக்கொண்டேயிருக்கிறேன். நான் கெட்டாலும் பரவாயில்லை, உன்னைக் கெடுப்பது மட்டும்...

நீ இங்கிருந்தால் ஒருவேளை எனக்கும் அந்த மயக்கம் ஏற்படலாம். ஆகையால் விடிந்ததும் என் பார்வையில் படாமலே போய்விடு.

அன்புள்ள

சக்கு"

செம்பில் இருந்த பாலை எடுத்து வெளியே கொட்டினேன். பேசாமல் பையை எடுத்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றேன். நிராசையால் சாம்பலான என் உணர்ச்சிகள் என்னைத் தள்ளிக்கொண்டே சென்றன.

"அப்பவே குடிச்சிருந்தா அந்தப் பால் கெட்டுப் போயிருக்காதுல்ல" என்று வேலைக்காரி சொல்லிக் கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது!

"பாலைக்கொண்டு பாவையைக்காட்டி பால் கெட்டதைக் கொண்டு பாவை கெட்டதைக் காட்டி பாலைக் கொட்டியதைக் காட்டு சூழ்நிலையை படம் பிடித்துக் காட்டி இருக்கும் ஆசிரியரின் எழுத்து நடையே தனி"



## பாவமும் சாபமும்

"என்ன எழுதுகிருய்?"

"ஒரு கதையை உருவாக்குகிறேன்."

"காதல் கதைதானே?"

"ஐயோ! 'காதலைத் தவிர வேறு எதுவுமே கிடையாதா கதையாக எழுத?' என்று கேட்கிருர்களே படிப்பவர்களில் சிலர்."

"கட்டுத் தளர்ந்தவர்களுக்குக் காதல் கசப்பாகத்தான் இருக்கும். எங்கே, என்ன எழுதியிருக்கிருய்? படி. கேட்போம்."

"படிக்கிறேன் கேள் — வானம் இருளோடு போராடத் தன்னிடத்தில் சிந்திச் சிதறிக்கிடந்த விண்மீன்களை யெல்லாம் சேகரித்து ஒன்றுதிரட்டி நிலவுருவாக்கி வெற்றி பெற்றது. வெள்ளைக் காகிதத்தை விரித்து வைத்ததைப் போல நிலத்தில் படிந்திருந்தது நிலவின் ஒளி. ஆனல்...? காலம் கூதிர்காலம்! வெண்புகை மண்டலமாகச் சுற்றிச் சுழன்றது மூடுபனி. உயிர்கள் வீட்டுக்குள்ளும் கூட்டுக்குள்ளும் அடங்கி அடைபட்டுக் கிடந்தன. பால்வண்ண நிலா பாழாகிப் போனது."

"ஐயோ பாவம். 'பனிக்காலம் – நிலவு காயும் வானம்.' இதைச் சொல்லவா இப்படி வார்த்தைகளையும் வர்ணனைகளையும் கொட்டிக் குவித்திருக்கிருய்? அடர்ந்த கேசத்தில்

தனித்து ஒரே ஒரு சிவந்த மலரைச் செருகினல்தான் மனோகரமாகத் தோன்றும்!"

"அது பார்த்து ரசிப்பவர்களுக்கு! மலரைச் சூடிக் கொள்ளுபவர்கள் கொத்தாகவும் சமமாகவுந்தானே கூந் தலைச் சுற்றிக் கட்டுகிருர்கள்."

"சரி. வீண் கதை ஏன்? மேலே என்ன நடந்தது? தொடர்ந்து படி."

"அதுதானே எனக்கும் புலப்படவில்லை. ஊதும் புகையும் உதிரும் சாம்பலுந்தான் வளர்கிறதே தவிர, கதை உருவாகவில்லையே!"

"நான் ஒரு கதை சொல்லுகிறேன். எழுதுகிருயா? உன் முன்னுரைக்கேற்ற பின்னுரையாக அமையும்."

"யார் நீ? என்ன...? எவரையுமே காணுமே!"

"தெரியாமலா இதுவரையில் பதில் சொன்னய்? நான் ஒரு பெண். உருவத்தை ஒளித்து வைத்திருக்கிறேன். எந்த உயிரும் வெப்பத்தைத் தேடும் இந்த வேளையில் மனித மிருகத்தின் வெறி உணர்ச்சிக்கு நீ மட்டும் விலக் காக முடியாதே என்றுதான்."

"நீ...ஒரு பெண்ணு? பொய் சொல்லாதே! பெண் உருவங்கள் பலவற்றை நான் பார்த்தவன்தான்—பழகியும் இருக்கிறேன். 'பெண்மை' என்ற அந்தப் பண்புதான் தேடினுலும் தென்படவில்லை—அவற்றிடத்தில். பொம்மை கள் இருக்கின்றன—பேய்கள் நடமாடுகின்றன; எல்லாம் பெண் உருவத்தில்தான்."

"அசையுங் கொடியிலே அலரும் அழகான மலர் அசையாத சிலைக்கு அணியாக அமைவது அதன் குற்றமா? பறித்துப் பாழ் செய்பவன் தவறல்லவோ அது? உலகம் எப்படியோ ஆண்கள் ஆட்சியில் அகப்பட்டுக் கொண்டது. மடமையே உருவான அந்த முரடர்கள் பெண்ணை மண்ணுக

மதிக்கின்றனர்—கடவுளைக் கல்லாக ஆக்கியதைப் போல. இரங்கத்தக்க அந்த இரண்டு பொருள்களையும் விருப்பத்துக் கேற்றாற்போல உருவாக்குகின்றனர். வெறியின் பிடிப்பிலே விவேகம் சிக்கினால் அதற்குள்ள விளக்கமும் வேறுவித மாகத்தானே அமையும்!''

"அது சரி. உன்னைப் பற்றி இதுவரையில் ஏதும் சொல்லவில்லையே?''

"என்னைப்பற்றித்தானே! சொல்கிறேன் கேள். மெரு கிழந்த ஒரு மென்கொடி நான்—பார்வைக்கு! கற்பிழந்த காரிகை—காலட்சேபங்களில்! பாழாக்கப்பட்ட பாவை—பகுத்தறிவு மன்றத்தில்! என் பெயர் அகல்யா!''

"அகலிகை என்று அழகாகத் தமிழில் சொல்லேன். ஏன் அகல்யா என்று வாயைப் பிளக்கிறாய்?''

"நீயும் உன் தமிழும்! ஒரு பெயர்ச் சொல்லை மொழி காரணமாக உருமாற்றுவது பேதமை. அதனால் அதன் பொருள் சிதைந்துவிடும். என் பெயருக்கு மூலச்சொல் 'அகல்யா' என்பது.''

"அதற்குள்ள அர்த்தம்?''

"உழப்படாத என்பதுதான் அதன் பொருள்!''

"அகல்யா என்றால் உழப்படாதவள் என்றல்லவா ஆகிறது? கோதமரை மணந்து—இந்திரனால் கெடுக்கப் பட்டு...''

"போதும் உளறாதே; நிறுத்து. எழுதுபவன் எண் ணங்களுக்கு ஏற்றாற்போலத்தான் உருவாகின்றன ஏடுகள். மற்றவர்கள் கருத்துக்களைக் கொண்டு முடிவுக்கு வருவது இயக்கப்படுவதே தவிர இயங்குவது ஆகாது. எப்போதும் பொருளாக இரு—அதன் நிழலாக ஆகாதே.''

"எல்லாம் உணர்ந்தவன் ஈசன் ஒருவன்தான். அவ னுக்கோ உருவமே கிடையாது—ஆகவே பேசவோ எழு தவோ முடியாது! உண்மையை எப்படித்தான் உணர்வது?''

"நானே சொல்லுகிறேன் கேள். கோதமரை நான் மணக்கவில்லை—அவருக்கு என்னைக் கொடுத்தார்கள். இந்திரன் என்னைக் கெடுக்கவில்லை—என்றால் அவன் பாழானான்."

"சிக்கல் தீரவில்லை அம்மா—வளர்கிறது!"

"முற்றுங் கேள்! நானும் இந்திரனும் சிறு வயதிலிருந்தே சேர்ந்து வளர்ந்தவர்கள். வானத்துச் சந்திரனை வட்டமான பந்தென்று நினைக்கும் வயதிலிருந்து வாட்டி வதைக்கும் ஒளிப்பிழம்பாக உணரும் பருவம் வரும்வரை ஒத்து வளர்ந்தோம்—விட்டுப் பிரிந்ததில்லை. இந்திரனை நான் நேசித்தேன்—அவன் உடலில் காமுற்றேன்—உள்ளத்தைக் காதலித்தேன்—உயிர்மேல் உயிர் வைத்தேன், ஏன் தெரியுமா? எல்லாம் என்னுடைய இன்ப வாழ்வுக்காகத்தான். ஆனால்...அவனோ...? ஆட்டி அசைத்துவிட்டு அப்பாலே பறந்துபோகும் காற்றாக மறைந்தான்."

"அடுக்குச் சொற்களை அழகாக அமைத்திருக்கிறாயே!"

"அசடுகளைப்போல நீயும் உளறாதே. அறிவுள்ள கருத்துக்களைப் பொருள்பட அடுக்கியிருக்கிறேன்."

"சரி. பக்கத்தைப் புரட்டு சீக்கிரம். அந்தக் காதல் கரைந்ததா — கவிழ்ந்ததா — காணாமலே போனதா என்பதைக் கவனிப்போம்."

"பெண்ணைத் தாமரைக்கு ஒப்பிடும்போது மலரை மனதால் நினைத்திருப்பாயே தவிர இலையை மறந்திருப்பாய். இரண்டையும் சேர்த்துத்தான் ஒப்பிட வேண்டும். தனக்கு உயிர் கொடுத்து வாழ்வளித்த தண்ணீரை ஒட்டவிடாமல் ஒதுக்கிவிட்டு வானத்துச் சூரியனோடும் வட்டமிடும் வண்டோடும் உறவாடும் அந்த நன்றி கெட்ட தாமரை. நம் நாட்டுப் பெண்கள் நிலையும் அப்படித்தான். பிறந்த வீடு அவர்களுக்குத் தண்ணீர். போய்ச் சேருகிற வீடு வண்டும் கதிரவனும்!"

"இது என்னுடைய கற்பனையல்லவா! எப்படியோ திருடி என்னிடமே சொல்லுகிறாயே சொந்தம்போல."

"எழுத்தாள வர்க்கத்தையே இந்தப் புத்தி விடுவதில்லை. கற்பனை, யாருடையதாக இருந்தால் என்ன? கதையைக் கேள். என்னைக் கௌதமருக்குக் கொடுத்தார்கள்."

"மந்தியின் கையில் மலர் மாலையை ஒப்படைத்ததைப் போலவா?"

"அல்ல, கல்லாலான சிலையின் முன்னாலே கவர்ச்சி மிகுந்த கணிகையரை நடனமாட விடுவதைப் போல! நான் வாழ்வில் எதையும் இழக்க முடியாத இளம் பெண்—அவரோ எல்லாவற்றையும் துறக்கத் துணிந்த துறவி. இளந் துளிரின் நெளிவு வளைவுகளிலே என் இதயத் துடிப்பை உணர்ந்தேன் நான்—காய்ந்து சருகான ஓலைகளிலே கவனஞ் செலுத்தினார் அவர். எரி தழலிலே இருந்தான் என் ஈசன்—அணைந்த சாம்பலிலே மறைந்திருந்தார் அவருடைய ஆண்டவன்."

"பிறகு...?"

"பிறகென்ன? எல்லாப் பெண்களும் இன்ப நாட்களைக் கொஞ்சினோம்—குலவினோம் என்று வர்ணிப்பார்கள். ஆனால் நானோ......? கேட்டேன்—கெஞ்சினேன் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. உடலின்பத்தை எனக்கு மருந்தாக்கி அளவிட்டுக் காலங் குறித்துக் கட்டுப்பாடும் செய்தார் அந்த வைத்தியர்!"

"கணவன் போகும் பாதைவழிச் செல்வதுதானே கற்புள்ள பெண்களின் கடமை?"

"ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால்......? சதையையும் நரம்பையும் படைத்த கடவுள் ஏன் அவற்றிற்கு வெறியை உண்டாக்கினார் என்று அவரையே கேள். கடவுள் அளித்த வேட்கையைக் கணவனுக்காகக் கட்டுப்படுத்துவது தெய்வ விரோதமாகாதா? கோதமர் முனி

வர்—முற்றுந் துறந்தவர். உடலைப் பூலோகத்தில் விட்டு விட்டு உள்ளத்தை மேலோகத்தில் மிதக்க விடுபவர். அவருக்கு மோட்சம் கிடைக்கும். ஆனால் நானோ பெண்! வேத சாஸ்திரங்களின்படி பாவத்தின் விளைவு. தப்பித் தவறி நான் மோட்சத்துக்குப் போனாலும் அங்கே நான் அனுபவிக்க ஆண்களா இருக்கிறார்கள்?—ஆண்களுக்காக ரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை காத்துக்கொண் டிருப்பதைப் போல!"

"பெண்கள் மோட்சத்துக்குப் போக முடியாதா? காரைக்காலம்மையார் போக வில்லையா?"

"அது திராவிடர்கள் பண்பு. எங்கள் பண்பு வேறு. நாங்கள் பூசுரர்கள் புராணத்தின்படி—ஆரியர்கள் சரித்திரத்தின்படி."

"கற்புக் கரசிகளுக்குக் கணவன்தானே கடவுள்?"

"கையாலாகாத கபோதிக் கடவுளை வழிபடுவதைவிட நாஸ்திகமே மேல்."

"அதைத்தான் நானும் சொல்லுகிறேன். ஆனால் கட்டுப்பாடு என்று ஒன்று இருக்கிறதே. அது உனக்குத் தெரியாதா?"

"அது எனக்கும் தெரியும். ஆனால் கட்டப்படும் பொருளைவிடக் கட்டும் பொருள் வலிவுள்ளதாக இருக்க வேண்டும் என்பதுதான் உனக்குப் புரிந்ததில்லை."

"சரி. கதையைத் தொடர்ந்து சொல்."

"வறண்ட வயலைச் சாசனமாகப் பெற்ற நான் வளத்தைப் பக்கத்து வயல்களில் தேடினேன். தென்பட்டது—தின்று களித்தேன். காலப் போக்கில்..."

"என்ன நடந்தது?"

"எப்போதும் நடப்பதுதான் அப்போதும் நடந்தது. உடல் வலி நலிந்தது—உள்ளம் நைந்தது."

"ஐயோ பதிவிரதையே! சீதையும் சாவித்திரியும் பிறந்த நாட்டிலா போயும் போயும் நீயும் பிறந்தாய்?"

"மடமையைப் பெரிய தீப்பந்தமாகப் பெற்றுத் திருப்தியடைகிறுயே தவிர அறிவைச் சிறு அகல் விளக்காகக் கூடப் பெற மறுக்கிறுயே! சீதையும் சாவித்திரியும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள். கற்போடிருந்தார்கள். ஆனுல் நானே...? கல்யாணமான பிறகும் காதலிக்க முடியாதவள்."

"சரி. கதையை முடி விரைவில்"

"அப்போதுதான் இந்திரன் வந்தான் — என் நடவடிக்கைகளைப்பற்றிக் கேள்விப்பட்டு"

"இளவயதுத் தோழன்தானே என்று இணங்கினுய் போலிருக்கிறது!"

"சீச்சீ! முறிந்த பாலைத் துணிந்து எப்படி விற்பது— அதுவும் இனந் தெரிந்தவனிடம்? மறுத்து விட்டேன். மாறு வேடத்தில் வந்தான் — என் கணவரைப்போல. என்னுல் கண்டுபிடிக்க முடியாமற்போனது. அதனுல் தான்......"

"ஆமாம்! உன் அவல நிலை......?"

"என்ன செய்ய முடியும் என்னுல்? நான் என் கணவருக்குத் தர்மபத்தினி ஆயிற்றே — தட்டிப் பேச முடியுமா? இக்கட்டான அந்த நிலையை எப்படி மனம் விட்டு வாய்திறந்து விளக்க முடியும்? இணங்கினேன்."

"பிறகு முனிவர் வந்தார் — உன்னைக் கல்லாகச் சபித்தார். அதுதானே!"

"நீயும் உன் மூளையும்! புதிதாக ஏதாவது புத்தகம் வெளிவந்தால் படிக்கிறாய் — ஆராய்கிறாய் — அலசிப் பார்க்கிறாய் — முடிவுக்கு வருகிறாய். ஆனால் பழம் புராணத்தை மட்டும் அப்படியே ஏற்றுக்கொள்கிறாயே! வாழ்பவனைச் சந்தேகிப்பதும் செத்தவனை நம்புவதுந்தான் உங்கள் பண்போ? உருவமும் உணர்ச்சியும் வளர்ச்சியும் பெற்ற ஒரு பெண்ணைக் 'கல்லாகப் போ' என்றால் உருவற்ற சிறுகல்லாக ஆக மாட்டாள் — உருவுள்ள சிலையாகத்தானே ஆவாள்."

"இந்திரன் உடலைக் கண்ணாகச் சபித்து...?"

"பாவத்துக்குப் பரிகாரம் சாபம் ஆகாது. பாவம் கொடுமையின் விளைவு. சாபம் கொந்தளிப்பிலிருந்து பிறப்பது. கட்டுப்படுத்தி அடக்கவேண்டிய கொடுமைக்குத் தன்னாலே அடங்கிப்போகும் கொந்தளிப்பு சாந்தியாகாது!"

"உண்மைதான் என்ன?"

"கண்ணாகவுமில்லை மண்ணாகவுமில்லை. உடம்பெல்லாம் புண்ணாகத்தான் ஆனது!"

"ஏன்?"

"வெட்கமோ விவஸ்தையோ இல்லாமல் என்னையே சொல்லும்படி வாயைக் கிளறுகிறாயே! உனக்கு மூளை இல்லையா, சிந்திக்க?"

"சரி, பரிதாபத்துக்குரிய உன் உருவத்தைக் கொஞ்சம் காட்டு. பார்க்கிறேன்."

"எனக்கேது உருவம்? நான் உனக்குள் அல்லவா, அடங்கியிருக்கிறேன்."

"அப்படியானால்......நீ அகலிகை அல்லவா?"

"அகலிகையுமில்லை, அருந்ததியுமில்லை!"

"பிறகு... நீ யார்?"

"................?"



# காதல் பிறந்தது

“தேய்ந்த பிம்பங்கள்! வர்ணப் பூச்சும் விளக்கொளியுந் தான் இவைகளை வண்ணச் சித்திரங்களாக்கிக் காட்டுகின்றன!”—வெறுப்பும் ஆத்திரமும் நிறைந்த இந்தச் சொற்களைத் தன் உள்ளத்திலிருந்தே உதிர்த்துவிட்டான் ஓவியன் மாதவன்.

மாலை ஐந்து மணி யிருக்கும். எதிர் வீட்டில் குடியிருந்த நாட்டிய ராணி நளினி உலாவப் புறப்படும் நேரம் அது. அந்த நேரத்தில் சொல்லி வைத்ததுபோல மாதவன் கண்கள் ஜன்னல் பக்கம் திரும்பும். நளினியின் உருவம் கண்ணில் பட்டதோ இல்லையோ அவன் உள்ளத்தில் புயல் வீசத் தொடங்கும். முழு நிலாவைக் கண்ட கடல் போல அவன் மனம் குமுறிக் கொந்தளிக்கும். ஏக்கம்—பொறுமை—வெறுப்பு! இந்த மூன்று உணர்ச்சிகளும் தம்மை மீறி எழுந்து தாண்டவமாடும். “வேசி!” என்று ஒரு முறை சொல்லிக் காறி வெளியே துப்புவான். வெறுப்பு வெளிப்பட்டதும் அத்தனை உணர்ச்சிகளும் தாமே அடங்கிப் போகும். வழக்கமாக நடக்கும் அந்த நாடகம் அன்றும் தொடர்ந்து நடந்து முடிந்தது!

“கண் பார்க்கும்போது, கருத்து அமைந்தாலல்லவா கையால் வரைய முடியும். அவளைப் பார்த்தவுடன் உங்கள் கருத்து அவள் அழகில் தன்னையே மறந்து போனால் கையால் எப்படி வரைய முடியும்?”

நளினியின் சார்பிலே வாதாடினூர் அந்த நாடகக் கம்பெனி முதலாளி. விஷயம் இதுதான். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தீட்டிய 'உதாரன் — அமுதவல்லி' காதல் சித்திரத்தைப் படமாகப் பிடிக்கத் திட்டமிட்டனர் ஒரு சினிமாக் கம்பெனியார். அதில் கதாநாயகி வேடத்துக்கு நாட்டியராணி நளினியை ஏற்பாடு செய்யத் தீர்மானமும் செய்யப்பட்டு அது காற்றில் பறந்து வந்து செய்தியாகப் பத்திரிகைகளிலும் வெளிவந்து விட்டது. ஆனால் கடைசி நேரத்தில் நளினிக்கு அமுதவல்லியாக நடிக்கத் தகுதியில்லை எனத் தீர்ப்பளித்து விட்டான் மாதவன். அழகை நிர்ணயிக்க ஓவியனைத் தவிர வேறு எவருக்குத் தான் தகுதி இருக்க முடியும்? ஆகையால் அந்தத் திட்டத்தைக் கைவிடும்படி நேர்ந்தது.

அலட்சியமாகச் சிரித்தான் மாதவன்.

"கலைதான் எல்லோருடைய உள்ளங்களையுங் கரைக்குமே தவிரக் கலைஞன் எதிலுமே கரைந்துவிடமாட்டான்!"

இந்தப் பதில் நாடகக் கம்பெனி முதலாளியை— நளினியின் ஆதரவாளரை விரட்டிவிட்டது!

○

அடுத்த நாள் மாலை ஐந்து மணியடித்தது. கடிகாரத்தோடு சேர்த்தே சாவி கொடுத்ததைப் போல மாதவன் கண்களும் ஜன்னல் பக்கந் திரும்பின. லேசாகத் தொடங்கிற்றுச் சலனம். மாதவன் உள்ளத்தில் தொடங்கிய புயல் எச்சில் துப்பும் கட்டம் வரை தொடர்ந்து நடந்து மறைந்தது.

அடுத்த விநாடியில் நளினியே அவன் சித்திரக் கூடத்துக்குள் நுழைந்தாள்.

"வணக்கம்!"

அழுத்தந் திருத்தமாக ஒலித்த அந்தச் சொல் மாதவன் உடலை ஊடுருவி உள்ளத்தில் பாய்ந்தது. பிறக்

கும்போது கூடப் பிறந்து வளரும்போதும் சேர்ந்தே வளர்ந்ததைப் போலக் காணப்பட்ட உடை அவள் உடலோடு ஒட்டிக் கொண்டிருந்தது. லேசாக வேண்டு மென்றே அலேக்கழிக்கப்பட்ட கூந்தல் காற்றில் பறந்து ஊசலாடுவது போலக் காணப்பட்டது.

“வணக்கம்!”

தேய்பிறை வளர்பிறையை வரவேற்பதுபோல ஒலித்தது, மாதவன் உதடுகள் வழியாகத் தெம்பில்லாமல் ஓடி வந்த அந்தச் சொல்!

அவன் அவளே நிதானமாகப் பார்த்து ஆராய்ச்சி நடத்த வசதியாக வேண்டுமென்றே உடலே வளேத்து நின்ருள் நளினி.

“நான் அழகாயில்லேயா?” தன் தோற்றத்தாலேயே அந்தக் கேள்வியை அமைத்துக் காட்டி விட்டு வாய்விட்டுக் கேட்டும் விட்டாள்.

மள மள என்று மாதவன் மனத்திரையில் முதல் நாளிரவு நாடகத்தில் நடந்த நிகழ்ச்சிகள் சித்திரமாகப் படியத் தொடங்கின. கொட்டகை தாங்க முடியாத கூட்டம். அந்தக் கூட்டத்தில் அவன் மிதந்து கொண்டிருந்தாளு அல்லது அமிழ்ந்தே போய்விட்டாளு என்பது அவனுக்கே விளங்கவில்லே. முதல் இரண்டு காட்சிகளும் பதிப்புரை முன்னுரைகளேப் போல நடந்து மறைந்தன. மூன்ருவது காட்சி தொடங்கும் நேரம். ஒரே நிம்மதி. அத்தனே பேரும் வாயடைத்துப் போயினர்—பெண்கள் உட்பட! திரை உயர்ந்தது. நாண் இல்லாத வில்லேப்போல வளேந்து நின்ருள் நாட்டிய ராணி நளினி. நீண்ட கை தட்டுதலால் அவளேயும் அவள் கொடுத்த அந்தத் ‘தோற்றத்தையும்’ வரவேற்றனர் ரசிகர்கள். ஆடத்தொடங்கிளுள். சுற்றிக் கட்டப்பட்டிருந்த வர்ணத் திரைகள் மறைந்து போயின. பின்னணி அடங்கிவிட்டது. அத்தனே ஜனத்திரளும் எங்கோ கரைந்து காணுமல் போயினர்.

அழிந்து மறைந்தொழிந்த அந்தப் பொருள்களோடு மாத வனும் கலந்து போனுன். அவள் ஒருத்திதான் இருந்தாள் —அசைந்தாள்—ஆடினுள்! எடுத்து வைக்கும் கால்களின் அசைவுகளே அவன் இதயம் உணர்ந்தது. அவள் உடலே வளைத்து நெளிக்கும்போது அவன் உள்ளத்தை உரசிச் செல்வது போலவே தெரிந்தது. எதிரே மேடையில் ஆடிய அவள் எப்படியோ அவன் மனத்தில் புகுந்து அதை அரங்காக்கி ஆடத் தொடங்கினுள்!

சுற்றி விட்ட பம்பரம் போலச் சுழன்று கொண் டிருந்த எண்ணங்கள் தாமாகவே தலேசாய்ந்தன. மாதவன் நளினியைப் பார்த்தான்.

“அழகுராணி என்று புகழப்படும் உன்னே அவலட் சணமேனி படைத்தவள் என்று நான் சொன்னுலும் உல கம் ஏற்காதே அம்மா!”

“என்ன இல்லே என்னிடத்தில்?”

“எல்லாம் இருக்கிறது, கற்பைத் தவிர!”

அமைதியை உலவ விடும் அந்த மாலே நேரம் நளினி யின் உள்ளத்தில் அவதியைப் புகுத்தியது. அவளுடைய கண்களில் நீர்த்துளிகள் துளிர்த்தன. ஒளியாலேயே உலகத்தை ஆட்டிவைக்கும் சக்தி பெற்ற அந்த விழி களால் கண்ணீரைக் காட்டிக்கூட மாதவன் உள்ளத்தைக் கவரமுடியவில்லே. பேசாமல் அங்கிருந்து அகன்ருள்.

உள்ளத்தின் வேட்கை மட்டுந் தோன்றும் கள்ளங்கபட மற்ற அந்தப் பருவமான சிறு வயது நினேவுகள் மாதவனேத் தம்பால் இழுத்தன. அப்போது.........

## 2

**கா**வியத்துக்கும் ஓவியத்துச்கும் விருந்தளிப்பவை பெரும்பாலும் எதிர்வீடுகள் தாம். அதுவும் விரியத் திறந் திருக்கும் வாயில் கதவுகளேவிட மூடிக் கிடக்கும் ஜன்னல் கதவுகளுக்குத் தான் மோகன சக்தி அதிகம்!

எதிர் வீட்டு வாயில் படியருகே கட்டம் போட்டுச் சில் விளையாடிக் கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுமி நளினியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் மாதவன். ஒரு கட்டம் விட்டு மறு கட்டத்துக்கு அவள் தாண்டும் போது வெட்டுக் கிளியைப் போலவே தோன்றினாள் மாதவனுக்கு!

"பாடத்தைப் படிக்காமே என்னடா சதா அந்தத் தேவடியாக் குட்டி மேலேயே பார்வை?"

அருவருப்பு நிறைந்த குரலில் அவனுடைய அப்பா சொன்ன அந்த வார்த்தைகள் அப்படியே அவன் மனத்தில் பதிந்தன. தேவடியாள்! அப்படி என்றால் என்ன பொருளென்பது அப்போது அவனுக்கு விளங்கவில்லை. ஆனால் அதில் ஏதோ ஒருவிதக் களங்கம் நிறைந்திருக்கிறது என்பதை மட்டும் அவன் உணர்ந்துகொண்டான். ஆனால் கனியுந் தருவாயில் இருக்கும் இரு மாங்கதுப்புகள் இடையே கொஞ்சம் கன்றிப்போயிருப்பதைப் போலக் காணப்படும் குழி விழும் அவளுடைய செந்நிறக் கன்னங்கள் மாதவன் சிந்தையைக் கவர்ந்தன.

நளினியைப் பார்த்துப் பார்த்து மாதவனுடைய கண்கள் எதையுந் தெளிவாகப் பார்க்கக் கற்றுக் கொண்டன. அதைத் தொடர்ந்து பார்த்தவைகளைச் சிறப்பாக அமைக்கக் கருத்துக்குப் பழக்கிக் கொடுத்தான் பிறகு கை தானே கண்கவர் ஓவியங்களை வரைந்து தள்ளத் தொடங்கிற்று. எதிரே நடமாடி அவன் இதயத்தில் பதிந்த அந்த அழகை உலகிலுள்ள அத்தனை பொருள்களிலும் அமைத்துச் சித்திரங்களாக்கினான் மாதவன்!

ஆனால் வெறுப்பு வேறொரு உருவத்தில் உண்டானது. கந்தலுடுத்தும் இவன்—கண்கவர் பட்டாடைகள் அணிந்து பட்டுப் பூச்சியைப் போலப் பறந்து செல்லும் அவள்! ஏற்றி வைத்த குத்து விளக்கைப் போல நளினியைப் பாதுகாத்தனர் அவள் குடும்பத்தார்—மாதவன், அவன் வீட்டில்

தேவையில்லாத ஒரு திருஷ்டிபரிகாரம்! நிரந்தர மயான காண்டம் அவன் வீட்டில் நடக்கும்போது சிரிப்புங் கூத்தும் கலந்த நித்திய மங்களம் அவள் வீட்டில் கும்மாளம் போடும்! ஏக்கத்தில் தொடங்கிப் பொருமையாக மாறும் மன உணர்ச்சிகளை வெறுப்பாக மாற்றுவான் மாதவன். "வேசி!" என்று ஒரு முறை வெறுப்போடு சொல்லிக் காறி வெளியே துப்புவான். அத்தனை உணர்ச்சிகளும் தாமே அடங்கிப்போகும்!

குஞ்சுகள் கோழிகளாயின! அந்த இடைவேளையில் இரண்டு ஜோடி விழிகள் ஆடிய கண்ணுமூச்சு ஆட்டம் இருக்கிறதே! அப்பப்பா! அனுபவித்துப் பார்த்தாலல்லவா தெரியும் அதன் அருமை! மாதவன் பார்வை பட்டதும் நளினியின் விழிகள் கைகாட்டி மரம்போலத் தன்னாலே கீழே தணியும். கை காட்டி இறக்கியாகிவிட்ட தென்றால் ரயில்வண்டி ஸ்டேஷனுக்குள் நுழையலாம் என்பதுதானே அதன் அர்த்தம். ஆனால்......! வண்டி போகமுடியாமல் தண்டவாளத்தைப் பெயர்த்து நாசவேலையல்லவா செய்து விட்டார்கள் ஜாதி முறையை அமைத்த குண்டர்கள்!

## 3

முன்னூற்று அறுபத்து ஐந்து நாட்கள் என்று நீட்டி யிழுத்துச் சொல்லும்போது தோன்றுகிற அலுப்பும் ஆயா சமும் ஒரு வருடம் என்று குறுக்கிச் சொல்லும்போது ஏற்படுவதில்லை. ஓடி மறைந்தன இருந்து வாழ வகையற்ற பல வருடங்கள்! இப்போது நளினி புகழ்பெற்ற நாட்டிய ராணி—மாதவன் ஒப்பற்ற ஓவியன்!

நளினி போய் வெகு நேரமாகிவிட்டது. இறந்த காலத்தில் புகுந்து நடமாடிய மாதவன் நிகழ்காலத்துக்கு வந்து சேர்ந்தான். அந்தி வானம் அவனைத் தன்பால் இழுத்தது. சிதையாது சீர்குலையாது வரையப்பட்ட வட்ட மான செந்நிறக் கதிரவன் வானத்துக்கு யாரோ குங்குமப் பொட்டு வைத்ததைப் போல விளங்கினான். அந்தியகாலத் திலும் சுமங்கலியாக இருப்பதாலேயே ஆறுதல் அடையும்

நம் நாட்டுப் பெண்களைப் போலக் காணப்பட்டது மேகத் திரைகள் நிறைந்த வானம். திடீரென அந்தக் குங்குமம் கலந்தது. வானத்தை இருள் பற்றியது. பிறகு......? நடுங்கும் கைகளால் இடப்பட்ட சந்தனப் பொட்டைப் போலச் சந்திரன் தோன்றினன். இயற்கை அமைத்துக் காட்டிய இந்தச் சித்திரக் கதை மாதவன் இதயத்தை என்னென்னவோ செய்தது. இதை வரையவேண்டிய அவனு அலங்கோல வாழ்வு படைத்த அவளை......?

"வேசி!" என்று ஒரு முறை சொல்லிக் காறி வெளியே துப்பினன்.

"திக்கற்றவள்கூட அல்ல, திமிரெடுத்தவள்." என்று பக்க மேளங் கொட்டியது அவனிடத்தில் நிறைந்திருந்த அகங்காரம்.

தாரகை உதிர்ந்து போவதைப் பார்த்தால் எதையாவது ஒன்றை மறந்து போவோம் என்று சொல்லுவார்கள். புகழ், முகஸ்துதி, விளம்பரம் இவை மூன்றிலுமே நீந்திக் களித்த நளினிக்கு அவளுக்கு ஏற்பட்ட அவமானம் பெரிய இடியாகத் தோன்றியது. அழகுக்காக எவரோ ஒருவருடைய ஆலோசனையைக் கேட்கும் இந்த உலகத்தின் முகத்தில் விழிக்கவே அவளுக்கு மனம் வரவில்லை. புகழ் வானில் மின்னிக்கொண்டிருந்த அந்தத் தாரகை திடீரென உதிர்ந்தது. அவளை அழைத்துவர அனுப்பப்படும் காரிலிருந்து அம்மன் தரிசனத்துக்காகக் காத்து நிற்கும் பக்த கோடிகள்வரை ஓரிரண்டு நாட்களில் அவளை மறந்தே போனார்கள்!

பிறகு.........?

கதிரவனும் கடிகாரமும் சேர்ந்து சதி செய்யத் தொடங்கின. உதிக்கும் கதிரவன் எங்கேயும் தேங்கி விடாமல் அஸ்தமிக்கச் சென்றான். மறக்காமல் ஐந்து ஒலிகளையும் எழுப்பித் தொடராமல் அத்தோடு நிறுத்தியது கடிகாரம். பழக்கப்பட்ட அவன் மனம் வழக்கம் போலக்

குமுறத் தொடங்கிற்று. ஏக்கம்—பொறுமை—வெறுப்பு! ஆனால் அவைகளை அடக்கித் தணிக்கும் அவள்......!

கட்டுப்படுத்தி அடக்கவேண்டிய உணர்ச்சிகளுக்குக் கட்டுக் காவலாக இருந்த நளினியின் நட்சத்திர வாழ்வைச் சுட்டுப் பொசுக்கிவிட்டான் மாதவன். அவைகள் தணிக்க முடியாத வெறியாக உருப்பெற்றன. அணைக்க முடியாத அந்த நெருப்பு தாங்க முடியாத கொதிப்பைத் தூண்டி விட்டது.

சிந்தை குலைந்ததால் சித்திரங்களும் சிதைந்தன. நளினியின் தோற்றத்தாலேயே அவனிடம் உருவான ஓவியக் கலை அவள் மறைவால் மக்கி மண்ணாகப் போனது!

மூடிக் கிடக்கும் எதிர் வீட்டு ஜன்னலைச் சுற்றியே மாதவன் விழிகள் வட்டமிடும். இவன் பார்வையைத் தேக்கித் தடுத்த அந்த இரண்டு துண்டு பலகைகளுக் கப்பால் என்னென்ன விசித்திர விநோதங்கள் ஒளிந்து மறைந்திருக்கின்றனவோ? மலர்த் தோட்டமாக இருந்து மணம் வீசிய மாதவன் இதயம் பிணக்காடாக மாறியதால் புகையும் சாம்பலுமே அதில் நிறையத் தொடங்கின. ஒடியும் இடைகள்—நிமிர்ந்த மார்புகள்—உள்ளத்தை ஊஞ்சலிலிட்டு ஆட்டும் உருவங்கள்! அத்தனையும் செத்து ஜீவனற்ற வெறும் சாயல்களாகவே தோன்றின மாதவனுக்கு!

அவள்......வேசி! ஆனா......லும்......? அவள்...! பித்துப் பிடித்த அவன் மனதைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. பேசாமல் நளினியைத் தேடிப் போனான்.

தட்டிய கதவு திறந்தது. நளினியே அவன் எதிரில் தோன்றினாள்.

"வாருங்கள். நானே உங்களைத் தேடிவரலாம் என்றிருந்தேன்."

எளிமையை வலிமை கேலி செய்வது போலத் தோன்றிற்று மாதவனுக்கு அந்த வரவேற்பு. நளினமாக ஆடும்

நச்சரவு — மலரும் விஷ ரோஜா — கருக்கவே உதிக்கும் கதிரவன்—இன்னும் என்னென்னவோ உவமைகள் அவன் இதயத்தைத் தொட்டுச் சென்றன. பேசாமல் அவள் பின் சென்றான்.

"மாதவா! என் உடலை அலங்கரித்து அவர்கள் உள்ளத்தின் வேட்கையைத் தணித்துக்கொள்ளும் இந்த உலகில் என் உள்ளத்தைச் செப்பனிட்டு வாழ்வைச் சீர்திருத்தும் நோக்கம் உங்களுக்குத்தான் இருந்தது......"

இன்னும் என்னென்னவோ சொல்லிக்கொண்டே போனாள் நளினி. அவளையே உற்றுக் கவனித்தான் மாதவன்.

"நளினி! உனக்கு இத்தனை அழகு எங்கிருந்து வந்தது? அமுதவல்லியைப் போலவே காணப்படுகிறாயே!"

"உதாரனைப் பார்த்துவிட்டேன், மாதவா."

"எங்கே?"

"அதோ"

திரும்பிப் பார்த்தான். கண்ணாடி அவனைப் பார்த்துக் கண் சிமிட்டியது. அதில் அவனும் அவளுந்தான் ஒளியின் பிரதிபிம்பங்களாகத் தோன்றினர்.

"காதல் என்பது ஒருவருடைய உயர்வு, சிறப்புகளைப் போற்றுவது மட்டுமல்ல, குறைகளையும் பொறுத்துக் கொண்டு திருத்துவதுதான்!"

எப்போதோ ஏதோ ஒரு புத்தகத்தில் படித்த அந்தக் கருத்தைத் தன்னை மறந்து பிதற்றியது மாதவன் வாய்!



# அந்த ஒரே குரல்!

"மலரே! நீ மொக்காக இருந்த போது என் உள்ளத்தில் ஒருவித வெறியையும் வேட்கையையுந்தான் தூண்டிவிட்டாய். என் இளமைப் பருவம், கனவு காணும் உள்ளம், கற்பனைகளைப் படித்துப் படித்துப் பழக்கப்பட்ட மூளை, இவை மூன்றுந் துடியாய்த் துடித்தன. இப்போது நீ மலர்ந்திருக்கிறுய். எதுவும் பூரணமாயிருந்தால் அது போதையைக் கொடுக்காது போலிருக்கிறது. அதனுல்தான் எழிலில் ஊறிப்போயிருக்கும் உன் உருவம் என் உள்ளத்தில் எந்தவிதக் கிளர்ச்சியையும் உண்டாக்கவில்லை. சலனமற்ற குளத்தில் மலர்ந்துகிடக்கும் தாமரையைப் பார்க்கும்போது ஏற்படும் தண்மை நிறைந்த அமைதிதான் உண்டாகிறது"

என் மனதின் ஆழத்தில் மக்கி மடிந்துபோன காதல்தான் இந்த நினைவிதழ்களை உதிர்த்தது. அவைகளிலிருந்து சகிக்கமுடியாத பிணவாடை வீசுவதுபோல எனக்குத் தெரிந்தது! எதிரே இருண்ட வானம்! அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் தாரகைகள் அத்தனையும் உதிர்ந்தால் எவ்வளவு அழகான பூமாரியாக இருக்கும்! இருளில் நிறைந்திருந்த கோரம் என் இதயத்திலும் தாண்டவமாடியது.

பக்கத்தறையில்தான் சரசுவும் வாசுவும் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தனர். எப்படித்தான் அவர்களுக்கு அயர்ந்துறங்க மனம் வந்ததோ தெரியவில்லை. அலுத்துக் களைத்துக்கிடக்கும் அந்த இரு உள்ளங்களிலும் வேடிக்கை

யும் விபரீதமும் நிறைந்த கனவுகள் தாம் தோன்றிக்கொண்டிருக்க வேண்டும். இரு அறைகளுக்கும் இடையில் ஒரே ஒரு குறுக்குச் சுவர் தான். அதன் ஒரு பக்கத்திலே அமைதி, மறு பக்கத்திலே அவதி. உலகத்தின் இந்த விசித்திரமான அமைப்பு எனக்கு வேதனையைத் தான் கொடுத்தது.

சிறு வயதிலிருந்தே எனக்குச் சரசாவைத் தெரியும். என்னை அவள் 'அண்ணு' என்றழைக்கும்போது எனக்கு என்னவோ போலிருக்கும். மலர்ந்த மல்லிகையைக் காணும்போது எந்தப் பெண்ணாவது கூந்தலில் வைத்துக் கொள்ள ஆசைப்படாமல் கற்சிலைக்கு அர்ப்பணிக்க எண்ணுவாளா? அதைப்போல அலர்ந்த ரோஜாவான அந்தப் பெண்ணைத் தங்கையாக எண்ணி என் வாழ்விலிருந்து விலக்கிவிட எனக்கெப்படி மனம் வரும்? எனக்கும் அவளுக்கும் இடையில் எழுந்த அந்த 'அண்ணு' என்ற குறுக்குச்சுவர் என்னை வெந்து வேகத்தான் செய்து கொண்டிருந்தது.

வாசுவையும் எனக்குத் தெரியும். உணர்ச்சிகளை எல்லாம் நிறுத்து எடை போட்டு முடிவு கட்டிய வேதாந்தி அவன். எழிலும் மணமும் நிறைந்த மலர்ச் சோலையான சரசு எப்படித்தான் இந்த வண்டுக்கு இடம் கொடுத்திருப்பாள் என்பது தான்......கண்ணுங் கண்ணுங் கவ்வியதோ, கருத்தும் கருத்தும் ஒத்துப்போனதோ அல்லது சூரியனும் சந்திரனும் பார்த்துக்கொண்டார்களோ, எப்படியோ அவர்கள் இருவரும் ஒன்றுபட்டார்கள்!

தந்தையற்ற அனாதைப் பெண்ணான சரசுவை என்னோடுதான் அனுப்பிவைத்தாள், கணவன் வீட்டுக்குச் சரசுவின் தாய்! அவளைப் பார்த்தவுடன் வாசுவின் முகம் மகிழ்ச்சிப்பெருக்கில் எப்படி எப்படி யெல்லாம் மாறும் என்று கற்பனை செய்துபார்த்தேன். பைக்குள்ளே போட்டு வைத்திருக்கும் ரோஜாவை அடிக்கடி திருட்டுத்தனமாக

வாவது பார்த்து மகிழ்கிறேமல்லவா, அப்படித்தான் கட்டுக்குள்ளே அடங்கியிருக்கும் அழகியைப்பார்த்தால்—அதுவும் முதன்முதலில் பார்த்தால்—என்னென்ன இன்ப அலைகள்......ஆனல் நானும் சரசுவும் உள்ளே நுழைந்த போது வாசுவுக்கு இன்பத்துக்குப் பதிலாகத் துன்பந்தான் தோன்றியதுபோல எனக்குத் தெரிந்தது.

தொடங்கி ஓடிவந்த நினைவுகளைத் தொடர்ந்து ஓட முடியாமல் தடுத்தது அந்தப்பாட்டு:

" வாழ்க்கை உடம்பினில் காதலே ஜீவன்
மலரினில் நறுந்தேன் வீணையின் நாதம் "

எவனே என்னைப்போன்ற ஒரு தனியாள் தன் இதயத் துடிப்பைப் பாட்டாகப் பாடிஆற்றிக்கொண்டிருந்தான். அவன் உள்ளம் சூன்யம் நிறைந்த வெளியாகத்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இளமைக்கும் எழிலுக்கு மாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதித் தந்த பாட்டு துடிப்பின் பிரதிபலிப்பாக இருந்திருக்குமா?

அன்று மாலை சரசா தன்னை அலங்கரித்துக்கொண்டு வந்தபோது நானே மயங்கிப்போனேன். வாழ்க்கையை எட்ட எட்ட இருந்து கவனிக்கவேண்டிய எழுத்தாளனுகிய என்னையே அது கிட்ட இழுத்துக்கொள்ளும்போலிருந்தது. வெள்ளை ரவிக்கையும் கிளிப்பச்சை நிறச் சேலையும் அவள் உடலை இறுகக் கட்டிப் பிடித்திருந்தன.

" எப்படி இருக்கிறது? "

அந்தக் கேள்வியில் ஒருவித அலட்சியம். பெருமிதம் நிறைந்த தோற்றம். இதழ்களில் மயக்கந்தரும் மலர்ச்சி. சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள அவள் கேட்டதாகத் தெரியவில்லை. "அடடா என்ன அழகு" என்ற ரசனை மிகுந்த பதிலைக் கட்டாயப்படுத்தி வரவழைக்கவே கேட்டிருக்கிருள். வாசுவின் பக்கமாக அவள் பார்வையிருந்

தாலும் அது என் இதயத்தைக் கவ்வியிருப்பதைப்போல எனக்குத் தெரிந்தது.

“சரி, வா போகலாம்” என்று சொல்லிக்கொண்டே நடந்தான் வாசு. ஒளிவிடும் சுடரை ஊதி அணைத்ததைப் போல மாறிற்றுச் சரசாவின் முகம். என் உள்ளங் குன்றிக் குறைவதுபோல எனக்குத் தெரிந்தது.

“இந்த மாதிரித் தொடர்ந்து இரண்டு நாள் அலங்காரம் செய்துகொண்டால் இவனைப் போன்ற வேதாந்தியைக் கூடக் கவர்ந்துவிடலாமே” என்றேன்.

மேகங் கவிந்திருந்த அவள் முகத்தில் திடீரென ஒரு மின்னல் மின்னி நிலைத்துவிட்டது. உலாவப் போகும்போது வாசு வாய் திறக்கவே இல்லை. சரசா என்னோடு பேசிக் கொண்டே இருந்தாள். அவள் வாயிலிருந்து சரளமாக வெளியே வரும் சொற்கள் நிதானந் தவறாமல் ஓடிக் கொண்டே இருக்கும் சிறு ஓடையை எனக்கு நினைவு படுத்தின. மாலை நேரத்து மஞ்சள் நிறக் கதிரவன் மறையுந் தருவாயிலிருந்தான். அவசரம் அவசரமாக எழுதி முடித்த கதையைச் சாவதானமாகப் படித்துப் பார்க்கும் எழுத்தாளனைப்போலத் தாண்டிக் கடந்த உலகை அவன் கண்காணித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது.

என் கவனம் முழுவதும் என் காலை முத்தமிடும் அலைகளிலேயே பதிந்திருந்தது. வெறி பிடித்துச் சுழலும் அந்த அலைகள் மன நிம்மதியைக் குலைத்துக் கொண்டிருந்தன. கடலிலிருந்து வந்த குளிர்ந்த காற்று நினைவுகளை மென்மைப் படுத்தியது. வாசுவின் முகத்தைப் பார்த்தேன். அவன் கண்கள் பழுத்திருந்தன. முகத்தில் படிந்திருந்த அந்த உணர்ச்சிகள்; ஆத்திரமும் பொறாமையும் அதிலிருந்து என்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தன. சரசா மட்டும் இவைகளைப் பற்றி எல்லாங் கவலைப்பட்ட

தாகத் தெரியவில்லை. என்னிடம் ஏதேதோ சொல்லிக் கொண்டே இருந்தாள்.

திடீரென்று ஒரு அலை உயர்ந்து எழுந்து எங்களை நோக்கி ஓடி வந்தது.

"வா, போய் விடுவோம்" என்று அந்த அலையைச் சுட்டிக் காட்டிவிட்டு நகர்ந்தேன்.

"அது இங்கே வராது" என்று சொல்லிவிட்டு அங்கேயே உட்கார்ந்திருந்தாள் சரசா.

இதைச் சொல்லி முடிக்கவில்லை. நனைந்து போன பட்டுச் சேலை — அழிந்து போன முகப்பவுடர் — கலைந்திருந்த அலங்காரம்! சரசா உரக்கச் சிரித்தாள். நானும் சிரித்தேன். இரண்டு பேரும் சேர்ந்து சிரித்தோம். மேலே அமைதி நிறைந்த நீல வானம், எதிரே அடங்காப் பிடாரிகளான அலைகள், சற்று தூரத்தில் குதித்துக் கும்மாளம் போடும் சிறுவர்கள். உலகத்தையும் மீறி உற்சாக அலைகள் ஆட்டம் போடுவது போல எனக்குத் தெரிந்தது.

ஓங்கி அறைந்த சத்தம் என்னைத் தன்உணர்வு கொள்ளச் செய்தது. திரும்பிப் பார்த்தேன்.

"சீ! நீ ஒரு பெண்ணா?" என்று சொல்லிக் கொண்டே நடந்தான் வாசு. சரசு ஒரு கன்னத்தை அழுத்திப் பிடித்து வலியை ஆற்றிக் கொண்டிருந்தாள்.

○

அன்றிரவு, எவருமே சாப்பிடவில்லை. எப்படித்தான் அவர்களுக்கு உறக்கம் வந்ததோ தெரியவில்லை. என் மனம் எங்கெங்கோ அலைந்தது. ஜன்னல் வழியாகக் குளிர்ந்த காற்று என் முகத்தைத் தழுவி முத்தமிட்டது. தந்தி அறுந்த வீணை கவலையைத்தான் கொடுக்கும். ஆனால் தந்தி இருந்தும் மீட்டத் தெரியாதவன் கையில் சிக்கிய வீணை......

" தேக்கிய அமுதின் சுவையின் சேர்க்கை
தென்றலின் குளிர்ச்சி காதலே அன்றோ! "

பாட்டு என் காதுகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

பின்னால் கழுத்தில் ஏதோ சூடாகப் படருவதைப் போலத் தெரிந்தது. திரும்பிப்பார்த்தேன். சரசு என் முன்னே நின்று கொண்டிருந்தாள். நள்ளிரவு—மணமாகாத நான்—எவனோ ஒருவனுடைய மனைவி—அவனுக்கு ஏற்கனவே இருந்த கோபம்!

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன்." சரசா, என்ன இது? போய்ப் படுத்துக்கொள்"

" சீ. இனிமேல் இங்கே இருக்க முடியாது. போய் விடலாம்."

வெந்து நொந்து போயிருந்த அவள் உள்ளம் எனக்குத் தெளிவாகவே தெரிந்தது. என்னெதிரே மலர்ந்த மலர்—அறைக்குள்ளே பொன் வண்டு; பொன் வண்டினால் மலருக்கென்ன லாபம்? இளமை குலையாத சரசுவின் உடல்—வளமை நிறைந்த அவள் உள்ளம்.

" காதல் என்றே முழங்கே நீ—முரசே
காதல் என்றே முழங்கே "

எங்கிருந்தோ பாடிய அந்தக் கபோதியின் குரல் என் காதுகளில் விழுந்துகொண்டே இருந்தது.

" வேலியை விலக்கத் தயாராகி விட்டாள். ஏன் நான் உள்ளே நுழையக்கூடாது?"

வெளியே அந்தகாரம் நிறைந்திருந்தது. சந்திரன் ஒளிகூட எனக்குத் தேவையில்லை. நட்சத்திர ஒளியிலேயே நடந்து போய்விடலாம்.

"வா. போகலாம்" என்று அவளை அழைத்துக் கொண்டே வெளியே நடந்தேன்.

"பயமாக இருக்கிறதே, அண்ணு!"


திடீரென்று ஓங்கி என் மண்டையில் ஒரு அடி. வானம் மேலே இருந்த பிடிப்பிலிருந்து விடுபட்டு நழுவி விழுவது போலத் தோன்றியது. மறு விநாடி சரசா ஏதோ ஒரு பாதாளத்தில் நழுவிக் கீழே விழுந்து கொண்டிருந்தாள். பற்றியிருந்த ஒரு கையால் அவளை மேல் நோக்கி இழுத்தேன். சமுதாயம், சாஸ்திரம், சட்டம், உற்ருர், உறவினர் அத்தனை பேரும் அவளைக் கீழே பிடித் திழுத்துக் கொண்டிருந்தனர்.

"அண்ணு! அண்ணு! அண்ணு!"

ஒரே அலறல். வியர்த்து விறுவிறுத்துப் போயின என் உடலும் உள்ளமும். என் உயிர் பதறிற்று. பாய்ந்து வந்த சூறுவளி ஓய்ந்து நின்றது போலத் தெரிந்தது. திரும்பிச் சரசாவைப் பார்த்தேன். அவள் முகத்தில் வானத்தில் நிறைந்திருந்த இருளும், அதன் இடையே துடித்துக் கொண்டிருந்த தாரகைகளும் அப்படியே இருப்பது போல் எனக்குத் தெரிந்தது.

"பைத்தியமே! கசப்பான பாகற்காயைக் கூடப் பக்குவப் படுத்திக் கறி செய்து சாப்பிடுகிறேமே, இவனைத் திருத்தவா உன்னுல் முடியாது? பேசாமல் போய்த் தூங்கு."

சொல்லி முடித்தேனோ இல்லையோ, வேகமாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தேன். எங்கேயாவது, அவள் பார்வைக் கெட்டாத தூரத்தில் பறந்தோடி விடலாம் என்ற எண்ணம் என்னைத் தள்ளிக்கொண்டே சென்றது. அலறிக்கொண்டிருந்த அந்தக் காதல் கீதம் ஒப்பாரி வைப்பது போலக் கேட்டது.



# வாழ்க்கை வாழ்வதற்கே!

உறக்கம் உலகத்தைத் தாலாட்டிக் கொண்டிருந்தது. அமைதியும் நிம்மதியும், உலகின் பெரும்பாலான ஜீவராசிகளை அணைத்து ஆறுதலளித்துக் கொண்டிருந்தன. உடலை அடகுவைப்போர் — உள்ளத்தைப் பறிகொடுத்தோர் — உடமையைக் களவாடுவோர் — இவர்கள்தாம் இமைகளை மூடாமல் அந்த இரவைக் கழித்தனர். சத்திரத்தில் படுத்திருந்த சாமியார் கூட்டத்தில் ஆறுமுகமும் ஒருவன், அவனுக்குத் தூங்க மனமில்லை; பேசாமல் எழுந்தான்.

"என்ன சாமி! ஏன் தூக்கம் வரல்லியா?"

பக்கத்தில் படுத்திருந்த சாமியாரும் விழித்திருந்தார். என்பதை அவன் உணர்ந்து கொண்டான், அந்தக் கேள்வியிலிருந்து.

"இல்லை! இப்படிக் கொஞ்சம் போய்ட்டு வரலாமின்னு தான்!"

"நடு ராத்திரியிலேயா? யாராவது கிராக்கி...?"

இதற்குப் பதில் சொல்லாமல் புன்சிரிப்போடு வெளியேறினன் ஆறுமுகம்.

## 1

ஆண்டவனைச் சுமைதாங்கி என்றோ — பாரவண்டி என்றோ நினைத்துக் கொண்டு, அவர் மேல் பாரத்தைப்

போட்டுவிட்டு அன்றாட வாழ்க்கையை ஆரம்பிப்பவர்களில் ஆறுமுகம் ஒருவனாக இருந்தான். கவலையில்லாத வாழ்க்கை. காலையில் எழுந்தவுடன் தறியிடம் நெருங்கு வான்; மாலை வரை தனித்தனியாகப் பிரிந்திருக்கும் நூல் இழைகளை ஒன்று சேர்த்து ஒருருவாக்கி, சமுதாயம் உடலை மூடி மறைத்துக் கொள்ளும் ஆடைகளாக ஆக்கு வான். காலையில் துளிர்த்து, மதியத்தில் தளிராகி, மாலை யில் இலையாக மாறி, மறுநாள் விடியலிலே காய்ந்து சருகாகி உதிர்ந்தன 'நாட்கள்' அவனுக்கு!

திடீரென ஒரு நாள் 'நூல் இல்லை' என்ற கூக்குரல் எழுந்தது. நூல் இல்லை என்றால், — நெசவாளிக்கு வாழ் வில்லை — என்றுதானே அதன் பொருள். நெருக்கடியான இந்தச் சூழ்நிலை எவர் நினைவிலும் தோன்றவில்லை. உலகம், உழைப்பை 'உதவி' என எண்ணியிருந்தால், நன்றி மறக் காமல், நெசவாளர் வாழ்வு நாசமாகாமல் தடுத்திருக்கும். ஆனால் உழைப்பை, 'ரூபாய்-அணா-பைசா' உருவில் காணும் உலகத்தின் கவனத்துக்கு இது தெரியவில்லை! நன்றி மறந்த சமுதாயம் — நாணயத்தைக் கைவிட்ட சர்க் கார் — நம்பிக்கையை நாசம் செய்த கடவுள் - இவை மூன் றும் சேர்ந்து, நாட்டு மக்களின் மானத்தைக் காத்தவர்களை நாதியற்றவர்களாக்கிவிட்டன. பிணங்களும் பிச்சைக் காரர்களும், அன்னை பாரதமாதாவின் அன்றாட அர்ச்ச னைக்கு மலர்களாக மாறினார்கள்.

பல ஜில்லாக்கள் காலியாகி ஒரு ஜில்லாவை நிரப்பின. 'வேலை—வேலை—வேலை!' இந்தக் கூக்குரல் எல்லாப் பக்கங் களிலிருந்தும் கேட்டது. ஆறுமுகம் அலைந்தான் பல னில்லாமல்! ஊரைவிட்டு வெளியேறிய ஆறுமுகத்துக்குப் பல உண்மைகள் தெரியத் தொடங்கின. உலகிலேயே மிகவும் மலிவான — ஆனால் போட்டி நிறைந்த பொருள் 'உழைப்பு' ஒன்றுதான் என்பதை உணர்ந்தான்.

குடியிருக்க வீடில்லை; ஒரு குப்பைத் தொட்டிக் கருகே கூரையில்லாக் குடிசை அமைத்துக் கொண்டான்.

தினந்தினம் அதைச் சுற்றி ஒருமுறை கவனிப்பான். வீசி எறியப்பட்ட எச்சில் இலைகள்—உடைந்துபோன எலும்புத் துண்டுகள்—கசக்கிப் போடப்பட்ட காகிதங்கள்—உலகத்தால், 'உதவாக்கரை' என உதறி எறியப்பட்ட அத்தனை பொருள்களுக்கும் அடைக்கலந் தந்துகொண்டிருந்தது அந்தக் குப்பைத்தொட்டி; அதிலே இவனும் ஒருவன்!

நாட்கள் தளிராகத் துளிர்த்த காலம் மலையேறிவிட்டது; கனலாகப் பிறந்து சாம்பலாகி அழிந்தன. அப்போதுதான் அவனுக்கு அந்த வழி தெரிந்தது. ஆண்டவனைப் பழிப்பதைவிட,'பயன்படுத்திக்கொண்டால்' என்ன? செத்துங் கொடைகொடுத்த சீதக் காதியைப் போல, 'இல்லாத ஆண்டவன்' எத்தனை பேருக்குப் படியளக்கிறார்! பரதேசி ஆனான்!—இல்லை—பாழ்பட்ட சமுதாயம் சிருஷ்டித்த சூழ்நிலையால் பரதேசி ஆக்கப்பட்டான்!

அப்போதுதான் அவனுக்கு அந்த ஆசை தோன்றிற்று. வர்ணப் பட்டாடைகளை அணிந்து 'வனப்புருவங்களாக' நடந்த வனிதாமணிகளும், அவர்களைப் பின் தொடரும் வாலிபக் காளைகளும்! அவன், முன்பு அவைகளை நெய்தபோது, அவைகளின் விலையை நிர்ணயிக்க எண்ணியிருப்பானே தவிர, வசீகரத்தை ரசித்து அனுபவித்ததில்லை. இப்போது — செய்வதற்கு ஏதுமில்லாதபோது சிந்தை, எழிலின் சிறப்பை உணர்ந்தது. உள்ளத்தில் உழைக்க வேண்டும் என்ற எண்ணம் புகுந்திருந்தபோது தோன்றாத ரசனை, அது வெளியேறியவுடன் உள்ளே புகுந்தது. 'வாழவேண்டும்' என்ற எண்ணம்—வாழ்விலே வற்றாத ஆசை — வளமை ஒரு சிலர் வாழ்வில் வழிந்தோடுவதைப் பார்த்ததினால் ஏற்பட்ட ஏக்கம் — இந்த மூன்றும் கிளை நதிகளாகி அவன் இதயக் கடலில் கலந்தன. ஆனால், அவன்...? பஞ்சை-பராரி-அன்னக்காவடி-ஏழை-வறுமைத் தீயில் வாடுபவன். இவை வெறுப்பு, பரிவு, பச்சாதாபம்-இந்த வெவ்வேறு உணர்ச்சிகளிலிருந்து உருவாகி, அவன் இனத்தாருக்கு உலகம் அளித்த பட்டங்கள்.

"எப்படி வாழ்வேன் இனிமேல்?"—'வேலைக்காரி' சினிமாப் பாட்டு அவன் இதயத்தில் படிந்து பதிந்தது. "வாழ்க்கை!" அது அவன் முன்னால் நஞ்சையும் நளினத்தையும் ஒருங்கே பெற்ற நாகத்தைப் போலப் படமெடுத்தாடிக் கொண்டிருந்தது!

## 2

நடந்தான் — நடந்துகொண்டே இருந்தான் ஆறுமுகம். நிழலும் ஒளியுங் கலந்த நிம்மதி நிறைந்த வீதிகளில் அவன் நடக்கும்போது எத்தனையோ நினைவிதழ்கள் அவன் நெஞ்சில் உதிர்ந்தன.

யாரோ கனைக்குங் குரல் அவன் காதுகளில் விழுந்தது; திரும்பிப் பார்த்தான். வீதியோரத்தில், பாதி வெளிச்சம் தன் மேல் படும்படியாக நின்றுகொண்டிருந்தாள் ஒரு பாவை. பக்கத்தில் நெருங்கினான். இவனையே உற்று நோக்கி ஆராய்ந்தாள் அவள்.

"யாரம்மா நீ?"

"நானா? ஒரு பொம்புளை?"

நீருக்குள் அமுக்கிவிட்ட பந்தைப் போல எங்கோ ஆழத்தில் அமுந்திவிட்டு மறுபடியும் உயர்ந்தது ஆறுமுகத்தின் உள்ளம், இந்தப் பதிலைக் கேட்டவுடன்.

"அது தெரியுது! என் இந்த நடுராத்திரிலே தனியா நிக்கிறே?"

"இவ்வளவு பெரிய ஆளா வளர்ந்திருக்கே! இது தெரியலைங்கிறியே!"

அவனுக்கு எதுவும் புரியவில்லை. அவள் 'விபச்சாரி' என்பது மட்டுந் தெரிந்தது.

"ஏன் அம்மா, இந்த வயசிலே கெட்டுப்போறே?"

"ஐயோ! எவ்வளவு அக்கரை—அனுதாபம்! நாஞ கெட்டுப் போனேன்...? நீயே சொல்லு — அம்மா சின்ன வயசிலேயே செத்துப் போயிட்டா; வளர்ந்தோண்ணே, அப்பாவும் போயிட்டார்; வேலை கிடைக்கிறதோ குதிரைக் கொம்பாயிருக்கு; எப்படி வயித்தை நிறப்புறது?"

இதெல்லாம் அவன் கேட்டுப் பழகாத விஷயங்கள். இதுவரையில் அவனுக்கு எவரும் எடுத்துச் சொன்ன தில்லை. ஆகையால் எந்த விதமான உணர்ச்சியும் அவனிடத்தில் உண்டாகவில்லை.

"இருந்தாலும், இது பாவமில்ல!"

பரிவோடு இதை அவன் சொன்னபோது அவள் உருகவும் இல்லை, உணர்ந்ததாகத் தெரியவுமில்லை. கேலிச் சிரிப்பொன்று சிரித்தாள்.

"நான் மட்டும் கெட்டுப்போறது எனக்குப் பிடிக்கலே; என்னைப் போல நாதியில்லாத அத்தனே பேரும் கெட்டுப் போகணும். பொம்புளங்களெல்லாம் என்னைப் போல இப்படி வந்துடணும். ஆண்புள்ளைகளெல்லாம் திருட ஆரம்பிக்கணும்."


"அடி பாவி! நீ உருப்புடுவியா?" இதைச் சொன்ன பிறகு அவனல் அங்கே நிற்கக்கூட மனமில்லை. நழுவத் தொடங்கினன்; அவள் விடவில்லை.

"மிச்சத்தையும் கேட்டுட்டுப் போ. உலகம், அனதைகளை எப்பவுமே கவனிச்சதில்லை. யாராரு அதைப் பயமுறுத்துறுங்களோ அவுங்களுக்குத்தான் கட்டுப்படுது. கடவுள் — பிசாசு—பேய்—போலீஸ்— இதுகளுக்குத்தான் எல்லாரும் பயப்படுறுங்க. நம்ப எல்லோரும் 'தேவடியாளாகவும், திருடனுகவும்' மாறிட்டா அவுங்க நன்மையை நினைத்தாவது நம்மைக் கண்டு பயந்துதானே ஆகணும்."

ஆறுமுகம் எதும் புரியாமல் அப்படியே நின்று விட்டான். அவள் அவன் அருகே நெருங்கினள்; இடுப்பைத் தடவினள்.

"ஏதாவது துட்டுக்காசு இருந்தாத் தந் துட்டுப் போயேன்."

பேசாமல், இருந்த சில்லறைகளையெல்லாம் அவளிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு நடந்தான். அவன் எதிரே யிருந்த "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற சினிமா விளம்பரம் அவனைப் பார்த்துச் சிரித்தது!



# உலக அரங்கில்

வெகு தூரத்தில் ஒலித்த அந்த முழக்கம் தெரு முழுவதுமே தெளிவாகக் கேட்டது. "முதலாளித்துவம் ஒழிக!" "தொழிலாளர் வாழ்க!" மெல்ல மெல்ல நெருங்கி வரும் ஒன்று சேர்ந்த பல குரலொலிகள் அஸ்ராவின் காதுகளில் விழுந்தன. மாடி வீடு மண் குடிசையாக மாறும் இடைவேளையில் எப்போதுமே ஒரு சோகம் நிறைந்த வரலாறு தொக்கி நிற்கும் என்பது அவளுக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். ஆனால் மாடிவீட்டுச்கும் மண்குடிசைக்கும் இடையில் ஒரு பெரும் போராட்டமே நடக்கிறது என்பதை அப்போதுதான் தெரிந்துகொண்டாள். மெல்ல ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

"அஸ்ரா! இது என்ன கெட்ட பழக்கம்?" என்று அவள் கணவன் கமால் அதட்டியபோதுதான் அவளுக்குத் தன்னை மறந்து நடந்துகொண்டது தெரியவந்தது.

சங்கு ஒலித்து முடிந்த சில வினாடிகளுக்கு அதன் ஒலி நம் காதுகளில் தங்கியிருந்து ஒலிப்பது போல அந்தக் குரலொலிகள் அஸ்ராவின் காதுகளை விட்டுப் பிரியாமல் சுற்றிக் கொண்டேயிருந்தன. அவள் மட்டும் ஒரு ஆணாகப் பிறந்திருந்தால்...! இஷ்டம்போல வெளியே போய்ச் சுற்றி விட்டுச் சாப்பாட்டு வேளைக்கு வீட்டுக்கு வரலாம்; உள்ளே நுழைந்தவுடன் தட்டில் சோறும் கறியும் தன்னாலே வந்து முன்னாலே உட்காரும். ஆனால் அல்லாவின் கருணை அவளுக்குப் பெண்ணாகப் பிறககும் பாக்கியத்தைத்தான் அளித்திருந்தது! அவளைப் பெண்ணாகப் படைத்த கடவுள் ஏன்

அந்தத் திரையையும் படைத்திருக்கவேண்டும்? அழுக்குப் படிந்த சாக்குத் திரைதான்! பிடித்திழுத்தால் அறுந்து துண்டு துண்டாகக் கிழிந்து கீழே விழுந்துவிடும். 'உத்தரவின்றி உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்ற அறிவிப்பைப் போல 'உத்திரவின்றி வெளியே கால் எடுத்து வைக்கக் கூடாது' என்று அவளை எப்போதும் எச்சரித்துக்கொண்டிருந்தது அது.

"அம்மா" என்ற குரல் வெளியிலிருந்து கேட்டது. வீதியில் பிச்சை கேட்க வரும் அந்த அந்தகன்தான் அவன். அவனுக்கு இல்லையென்று சொல்லாமல் தினந்தினம் ஏதாவது கொடுக்கும் புண்ணியவதி அந்தத் தெருவிலேயே அஸ்ரா ஒருத்திதான். தட்டில் சோறுங் கறியும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். வெளியே நிற்கும் அவனுருவம் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அவனுக்கும் விழிகளிருந்திருந்தால் திரைக்கப்பால் இருந்த அவள் உருவம் தெளிவாகவே தெரிந்திருக்கும்! ஆனாலும் வெளியுலகத்துக்கும் அவளுக்கும் இடையே எழுப்பப்பட்ட அந்த அரணை நகர்த்தும் உரிமை அவளுக்குக் கிடையாது.

"பாபா! உங்கள் வீடு எங்கே யிருக்கிறது?"

"இங்கிருந்து நேரே ஒரு மைல் நடந்தால் அங்கே யிருக்கிறதம்மா என் குடிசை."

"முஸ்லீம் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரக் கூடாதா?"

"வரலாம், அம்மா. யார் வரக் கூடாது என்று சொன்னது?"

"மற்ற ஆண்கள் முன்னால் நடமாடக் கூடாது என்று குரானில் சொல்லியிருக்கிறதாமே!"

"இல்லையம்மா! குரானில் இச்சையைத் தூண்டிவிடும் அங்கங்களை மூடி மறைத்துக்கொள்ள வேண்டும் என்றுதானிருக்கிறதே தவிரச் சிறைக்குள் அடைபட்டிருக்கவேண்டும் என்றில்லையம்மா!"

"பச்சைப் பசேலென்ற வயல்களும், நீல நிற வானத்தைத் தடையேதுமில்லாமல் பார்க்க வெட்ட வெளியும் இங்கே சமீபத்தில் எங்காவது இருக்கின்றனவா?"

அஸ்ரா இதைக் கேட்டவுடன் அந்த அந்தகன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் விழிகளில் ஒளிமட்டு மிருந்திருந்தால் அவைகளில் ஆச்சரியம் படமெடுத்தாடியிருக்கும்!

"இருக்கிறது, அம்மா. என் குடிசையைச் சுற்றிலும் அப்படித்தானம்மா."

மேலும் ஏதாவது கேட்பாள் என்று எதிர்பார்த்த அவனுக்குத் தொடர்ந்த இரண்டு மூன்று நிமிஷ மௌனம் ஏமாற்ற மளித்தது.

"என்னம்மா, கவலை உனக்கு?" என்று பரிவோடு கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்ற பதிலோடு கலந்து வந்த பெருமூச்சு அவனுக்கு அவளிடத்தில் இரக்கத்தைத் தூண்டியது. அவளை எப்படியாவது மகிழ்விக்கவேண்டும் என்ற அளவுக்கு மீறிய அக்கறை தன்னாலே எழுந்தது.

"ஏதாவது ஒரு பாட்டுப் பாடுகிறேன், கேட்கிறாயா அம்மா" என்று சொல்லிவிட்டு அவன் அவளுடைய பதிலை எதிர்பார்க்காமல் பாடத் தொடங்கிவிட்டான்.

"அகிலுந் தேக்கும் அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக் குவியுங் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நஞ்சை
முல்லைக்காடு மணக்கும் நாடு வாழ்க வாழ்கவே"

சலனமில்லாத குளத்தில் மிதந்து செல்லும் ஓடம் போல ஒவ்வொரு சொல்லும் ஆடி அசைந்துகொண்டு காற்றில் மிதந்து சென்றன. எழில் நிறைந்த இயற்கை அவள் முன் நின்று கூத்தாடிற்று. வானையெட்டும் மரங்கள், ஒளி வீசும் முத்துக்கள், சாய்ந்து வளைந்து, மாலை நேரத்து மஞ்சள் நிறக் கதிரவன் ஒளிபட்டு மின்னும் நெல் மணிகள், சிரித்து இதழ்விரித்து மணம் பரப்பும் முல்லை மலர்கள்! அவன்! விழிகளில் ஒளியற்றவன்! இவள்! ஒளி

யிருந்தும் பார்க்கும் உரிமையற்றவள்! அவர்கள் இருவரும் பார்த்தறியாத ஓவியம்; ஆனால் கேட்டு மகிழ்ச்சியடையும் காவியம்!

அன்றிரவு அஸ்ராவுக்குத் தூக்கமே வரவில்லை. தெருவில் ஆட்கள் நடமாட்டத்தின் அறிவிப்புகளாக இருந்த ஆணிகள் வைத்துப் பதித்த செருப்புகளின் ஓசைகளும் நின்றுபோயின. காலையில் நடந்த அந்த நிகழ்ச்சிகள் அவள் சிந்தையில் பதிந்திருந்தன. உடலைக் கீழே சாய்த்தவுடன், சுற்றப்பட்டிருந்த கயிற்றிலிருந்து உருவிவிடப்பட்ட பம்பரத்தைப் போல அவள் உள்ளம் சுழலத் தொடங்கியது. அவளுடைய இளம் பருவத்து நினைவுகள்! பொழியும் நிலவு, வழியுந் தேன், வாடாத ரோஜா, துடிக்காத—துவளாத உள்ளங்கள் இவை அத்தனையும் ஒன்று சேர்ந்தால் கூட அந்தப் பருவத்துச்கு இணையாகா! விழிகளைத் திறந்தவுடன் மறைந்து போகும் அழகான கனவைப் போன்ற அந்தப் பருவம் அவள் கண்முன் வந்து நின்றது. மெல்ல அதிலேயே எண்ணங்களை ஓடவிட்டாள்.

## 2

“**சி**த்திரந் தீட்டுவதற்குத் திறமை மட்டும் போதாது. எப்படி எப்படி வர்ணங்களைச் சேர்த்துக் குழைக்கவேண்டும் என்பதும் தெரிந்திருக்கவேண்டும்.”

இதைச் சொல்லிவிட்டு ஸலாம் தன் தங்கை அஸ்ராவைப் பெருமையோடு பார்த்தான். தன்னிடமிருந்து விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஒரு ஆள் அகப்பட்டிருக்கிறதே என்பதில் அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி. அஸ்ராவுக்கு இதெல்லாம் புரியவில்லை. ஆனால் தன் அண்ணன் இந்தமாதிரி விஷயங்களைப் பற்றியெல்லாம் தன்னோடு பேசுவதென்னவோ மிகவும் பிடித்திருந்தது.

“ஒவ்வொன்றையுங் கூர்ந்து கவனிக்கவேண்டும். அப்படியே மனத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்.

ஸலாம் மேலே பேசிக்கொண்டே போனான். அஸ்ரா அப்போதுதான் எழுதி முடிந்த ஒரு சித்திரத்தில் ஆழ்ந்து

விட்டாள். எங்கோ வெகு தூரத்தில் அடிவானத்தில் பாதி முகங் காட்டி அப்போதுதான் ஆழ்ந்த துயிலிலிருந்து விழித்தெழுந்த உலகத்தைப் பார்த்து மகிழும் பகலவன்—அவனுக்கு முன்னால் ஒளிக் கதிர்களால் வெண்மை மெருகு தீட்டப்பட்ட, கருநீலம் படிந்த ஒரு சிறு நீர்த்தேக்கம்—ஒரு துண்டு நிலப்பரப்பு—அதில் வளைந்து நெளிந்த ஓரிரு தென்னை மரங்கள், தூய வெள்ளைத் திரையில் தூரிகையும் வர்ணங்களும் ஒன்றுபட்டெழுப்பிய மாயாஜாலம்! இது மாதிரிச் சித்திரங்கள் பலவற்றை அஸ்ரா பார்த்திருக்கிறாள். எல்லாம் கதிரவன் உதிக்கும்போதும் மறையும்போதும் காணப்படும் தோற்றங்களைச் சித்தரிப்பவைதாம். ஒன்றாவது அவன் உச்சியிலிருந்து காயும்போது எப்படியிருக்கும் என்பதைச் சித்தரிக்கவில்லை. இது ஏன்...?

"ஏன் அண்ணா, ஒரு படமாவது மத்தியானம் பன்னிரண்டு மணிக்குச் சூரியன் எப்படியிருக்கும் என்பதை எடுத்துக் காட்டவில்லை?"

ஆர்வத்தோடு அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டுத் தன் அண்ணன் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் அஸ்ரா. ஸலாமுக்கு இந்தக் கேள்வி என்னவோ புரியத்தான் செய்தது. ஆனால் பதில் சொல்வது என்பது மட்டும்...! இருந்தாலும் தன் அறியாமையை அவளிடம் காட்டிக்கொள்ள அவன் தயாராக இல்லை.

"இதெல்லாம் உனக்குப் புரியாது. போய் உன் வேலையைப் பார்!" என்று கடுமையாகவே சொல்லிவிட்டான். மலர்ந்த முகமும் மகிழ்ச்சியுமாக அவள் இருப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கும் ஸலாம் அன்று அப்படி நடந்துகொண்டது அஸ்ராவுக்கு இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து வேதனை தந்துகொண்டே இருந்தது.

ஜனாப் ஹாஜீ அப்துல் குத்தூஸ் பாக்ஷா சாஹிபும் அவருடைய மனைவியும் தங்கள் ஒரே மகனான ஸலாமையும் ஒரே மகளான அஸ்ராவையும் ஒரு வீடு, கொஞ்சம் நிலம், தேவையான பணம் இவற்றோடு தன்னந்தனியே விட்டு விட்டு அல்லாவின் கடைசிநாள் தீர்ப்புக்காகக் கபர்ஸ்தானில்

மண்ணுக்குள் புகுந்து காத்திருந்தனர்! அதனால்தான் அண்ணனும் தங்கையும் ஒருவருக்கொருவர் ஆதரவானார்கள். இது மட்டுமல்ல அதற்குக் காரணம். ஸலாம் 'வாழ்க்கை ஒரு கலை' என்பதை இலட்சியமாகக் கொண்டவன். உலகத்தைத் திரையாகவும், அதில் வாழும் மனிதர்களை நடிகர்களாகவும், நடக்கும் நிகழ்ச்சிகளைக் காட்சிகளாகவும், இவற்றையெல்லாம் ஆட்டிப்படைக்கும் ஆண்டவனை 'டைரக்டராகவும்' மனப்பூர்வமாக நம்பினான். இந்த நாடகத்துக்குக் 'கதை வசனம்' எழுதிய ஆசாமி யார் என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. அதுவும் தெரிந்திருந்தால் நாடகம் எப்போது முடியும் என்பதையும் வரையறுத்திருப்பான்! அவனுடைய அந்த அருமையான இலட்சியத்தை அவன் நண்பர்களில் எவரும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அதற்குக் காரணம் அவர்களில் எவருக்கும் வீடு, நிலம், பணம் வைத்துவிட்டுப் போகும் பெற்றோர் கிடைக்காததுதான்! அதனால்தான் தன் தங்கை அஸ்ராவைத் தனக்கு மாணவியாக ஆக்கிக்கொண்டான்.

களங்கமில்லாத இதயத்தைக் கற்பனைகளிடையே அமிழ்த்திவிட்டதால் அஸ்ராவின் எண்ணங்கள் எல்லாம் கனவுலகிலிருந்து எங்கெங்கோ துள்ளி விளையாடின. பச்சையைக் குலுக்கி விரித்துப் பார்வையைப் பெரிதாக்கும் பசுமை நிறைந்த வயல்கள், தெளிந்த நீரோடைகள், வெண்மலர்களை உதிர்ப்பது போல நீர்த்துளிகளை அள்ளிக் கொட்டும் அருவிகள் இவைகளை நேருக்கு நேராகக் காண முடியாவிட்டாலும் சித்திரங்களிலாவது பார்த்து மகிழுவாள். இயற்கையைச் செயற்கையாக்கி அதிலேயே சிந்தனைகளைச் செலுத்தும் அந்தப் பெண்ணின் மென்மையான இதயத்தில், நீலக்கடலிலிருந்து வான்முட்டும் பனிபடர்ந்த மலைச்சிகரங்கள் வரை பதிந்து அவளைத் தம் வசமாக்கிக் கொண்டன.

காலம்! அதன் வேகத்தைக் கணக்கிடத் தெரிந்தவர்கள் மேல்நாட்டார்தாம். நமக்கு அதன் விநோதங்கள் தாம் தெரியும். நம்மைப் போல அவர்கள் வருடங்களுக்

கெல்லாம் பெயரிட்டு அறுபது வருடங்களுக்கு ஒரு தடவை மறைந்துபோன வருடத்தை மறுபடியும் வர வழைத்துத் தொல்லை கொடுக்க மாட்டார்கள். தொடர்ந்து எண்ணிக்கொண்டே போவார்கள். அவர்களைப் போல நாம் காலம் உடலில் ஏற்படுத்தும் வடுக்களையும் மாறுதல்களையும் மூடி மறைத்து இளமையை 'இமிடேஷன்' ஆக்கமாட்டோம். கருமுகிலைப் பார்த்துப் பழிக்கும் கூந்தலைக் காலப் போக்கில் வெண்முகில் கண்டு சிரிக்கும் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்!

ஆண்டுகள் தொடர்ந்து ஓடி மறைந்து கொண்டே வந்தன. இயற்கையின் பல பகுதிகளை வீட்டுக்குள் கொண்டு வந்து தங்கியிருக்கச் செய்யும் வேலையில் மும்முரமாக ஈடு பட்டிருந்தான் சலாம். மலர்க்குலத்தை மயக்கி ஏமாற்றி வண்டினம் உறிஞ்சிச் செல்லும் தேனை மனிதன் தட்டிப் பறித்துச் செல்வதைப் போல, இயற்கையிலிருந்து எழிலை வடித்தெடுக்கும் வேலையில் சலாம் ஈடுபட்டிருக்கும்போது அவனுடைய வாழ்வின் எழிலைக் காலம் கொஞ்சம் கொஞ்ச மாகக் குடித்து முடித்துவிட்டது. மாடி வீடு மண் குடிசை யாக மாறியது. பட்டாடைகளைக் கந்தலுடைகள் பரிமாறிக் கொண்டன. அந்தத் துயர்மிகுந்த சித்திரம்! அதை எந்தத் தூரிகையால் எப்படிப்பட்ட வர்ணங்களைக் கொண்டு சலாம்—அஸ்ரா வாழ்க்கைத் திரையில் காலம் தீட்டி முடித்ததோ தெரியவில்லை. கடைசியில் அஸ்ராவை எவன் கையிலாவது ஒப்படைக்க அவன் பட்டபாடு...! அப்போது அவளை மணக்க முன்வந்த கமாலை ஆண்டவன் அனுப்பிய தூதனுக்கு இணையாகவே மதித்தான் சலாம்!

## 3

கனவுலகம் கலைந்தது. அப்போதுதான் நிஜஉலகம் அஸ்ரா வுக்குத் தெரிந்தது. அந்த நினைவுகள் உண்டாக்கிச் சென்ற துயரையெல்லாம் ஆழ்ந்த பெருமூச்சொன்றால் துடைத் தெறிந்தாள். திரும்பி அவள் கணவனைப் பார்த்தாள், குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனும்

அவளும்! வானம்பாடியை வல்லூறுக்கு வாழ்க்கைப்படச் செய்திருந்ததைப் போலத்தான் அந்த இணைப்பு. வான வில்லின் வர்ணஜாலங்களைப் பார்க்கும்போது கூட ஆமணக் கெண்ணெய் குடித்தவனைப் போலவே இருப்பான் அவள் கணவன் கமால்.

எங்கிருந்தோ அந்த நேரத்தில் மணியொலிகள் கேட்டன. ஒத்து எழுப்பப்பட்ட அந்த ஓசை அந்தகன் காலையில் பாடிய அந்தப் பாட்டுக்குப் பின்னணி தொடங்கியதைப் போல அவளுக்குத் தோன்றியது. மெல்ல வாய்விட்டே பாடத்தொடங்கினுள் அந்த அடிகளை.

"அகிலுந் தேக்கும் அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக் குவியுங் கடல்கள்
முகிலும் செங்நெலும் முழங்கு நஞ்சை
முல்லைக்காடு மணக்கும்நாடு வாழ்க வாழ்கவே"

தன்னை மறந்து, தன் நிலையை மறந்து, அங்கு நிறைந்திருந்த அமைதியை மறந்து அந்தப் பாடலிலேயே ஆழ்ந்து போனுள். மணியொலியுங் குரலொலியுங் கூடிக் குலாவத் தொடங்கின!

"அஸ்ரா! இன்னும் தூங்கவில்லையா? மணி பன்னிரண்டாகிறதே!"

தம்பதிகள் இணைந்து சேர்த்து முத்தமிடப் போகும் போது எவனே ஒரு மூன்ருவது ஆள் எதிரிலிருப்பது தெரிந்தால் எப்படி வெட்கமும் வேதனையும் கவ்விக் கொள்ளுமோ அப்படியே ஆனது அஸ்ராவின் நிலை.

"இல்லை. தூக்கம் வரவில்லை. இப்போது எங்கிருந்து மணியடிக்கிருர்கள்?"

நிலைமையைச் சமாளிக்க அவள் பயன்படுத்திய அந்த ஆயுதம் பலன் தந்தது.

"இந்து ஆலயத்திலிருந்து!" சுருக்கமான பதில்.

"இந்துக்கள் இரவு பன்னிரண்டுமணிக் கொருமுறை தொழுகை நடத்துவார்களா?"

இந்தக் கேள்வியை அஸ்ரா கேட்டபோது அவளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தைக் கமாலின் சிரிப்பு வெட்கித் தலை

குனிய வைத்துவிட்டது. மசூதிகளில் தொழுகைக்குக் கூவியழைப்பதைப் போலத்தான் மணியடிப்பதும் என்று அந்தப் பேதைப் பெண் எண்ணியதை அவன் புரிந்து கொண்டான். கடவுளை இரு கைகளையும் ஏந்தி இரக்கும் கூட்டத்தைச் சேர்ந்த அவளுக்குக் கூப்பிக் கும்பிடும் கூட்டத்தைப் பற்றி எப்படித் தெரிய முடியும்?

"இல்லை, பூஜை செய்வார்கள்" என்று பதிலளித்தான் கமால்.

"அப்படியென்றால் என்ன?" இது அஸ்ராவுக்கு உடனே எழுந்த சந்தேகம்.

"கடவுளைக் கும்பிடுவார்கள். பின் கன்னத்திலடித்துக் கொள்ளுவார்கள்" என்று சொல்லிவிட்டு, 'இத்தோடு முடித்துக்கொள்' என்று அறிவிப்பதைப் போல புரண்டு படுத்தான். இதை அவள் புரிந்து கொள்ளவில்லை.

"ஏன் கும்பிட்டுவிட்டுக் கன்னத்தி லடித்துக் கொள்ள வேண்டும்?" என்று குறுக்குக் கேள்வி கேட்டாள்.

"தெரியாத்தனமாக உன்னைக் கும்பிட்டுவிட்டேன். 'தப்பு தப்பு' என்றுதான்! பேசாமல் தூங்கு!" என்று சொல்லிவிட்டுப் போர்வையை இழுத்துத் தலையை மூடிக் கொண்டான் கமால்.

ஏளனமும் வெறுப்பும்! வெளிஉலகம் அவளுக்குத் தெரியவில்லை; தெரிவிக்கவும் ஆட்கள் இல்லை. 'ஏன் அண்ணா, ஒரு படமாவது மத்தியானம் பன்னிரண்டு மணிக்குக் கதிரவன் காயும்போது எப்படியிருக்கும் என்பதை எடுத்துக் காட்டவில்லை?' அன்று ஸலாமை அவள் கேட்டபோது இப்படித்தான் எரிந்து விழுந்தான் அவன். இப்போது...? கமால்! அவளுக்கு உள்ளம் விரிந்து பரந்திருந்தது; உலகம் குறுகிச் சிறுத்திருந்தது!

ஜன்னல் வழியாக உள்ளே வீசிய குளிர்ந்த காற்று மெல்ல அவள் முகத்தைத் தழுவியதால் இரத்தக் குழாய்கள் எல்லாம் புது உற்சாகமடைந்தன. நிலா வானத்தில் அவள் பார்வைக்கு நேரெதிராக இருந்து நகைமுகங் காட்டி வரவேற்பளித்தது. வாயல் புடவையால் உடலை மூடி மறைத்து

அங்கங்களை மட்டும் பட்டும் படாமலும் வெளிக்குக் காட்டு வதைப் போல இடையிடையே மெல்லிய வெண்மேகங்கள் சந்திரனை மூடி மறைத்தும் மறைக்காமலும் அவளுக்குக் காட்டி வேடிக்கை செய்தன. ஆள் நடமாட்டமேதுமில் லாத அந்த நேரம்! திரும்பி அவள் கணவனைப் பார்த்தாள். ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான் அவன். எழுந்தாள்—பூனை போல் நடந்தாள்—ஓசைப்படாமல் கதவைத் திறந்தாள்—உலக அரங்கில் கால்வைத்தாள்!

வெளிறிய வானம். அதில் பதித்திருக்கும் ஒளித் தகடு. நிம்மதி நிறைந்த நேரம். மெல்ல ஊர்ந்து நகர்ந்து வந்து உடலைத் தழுவும் மென்காற்று. திருமணமான பிறகு இதயத்தின் ஆழத்தில் பதுக்கிவைக்கப்பட்ட அந்தக் கனவுலகம்! இன்று அவள் கண்ணெதிரே காட்சி யளித்தது. தலை, முகம் இரண்டையும் போர்த்தியிருந்த வெள்ளைத் திரை நழுவி விழுந்து கழுத்தைச் சுற்றி மூடிக் கொண்டது. மழைச்சாரல் துளிகள் வீட்டுக்குள் விழும் போது கைநீட்டி அவைகளை ஏந்தியிருக்கிறாள். அவற்றை விடக் குளிர்ந்திருந்த அந்தக் காற்று அவளுடைய குதூ கலத்தைப் பெருக்கியது. மெல்ல நடந்து சென்றாள்.

பசுமை நிறைந்த வயல்கள்—கண்ணுக்கெட்டிய தூரம் பரந்தவெளி! வீசுங் காற்றில் மெல்ல நடம்புரியும் அவ ளுடைய தலைமயிர்கள் நெற்றியில் ஒருவிதக் குறுகுறுப்பை உண்டாக்கின. கொட்டிக் குவித்த தங்கக் கட்டிகளுக் கிடையே யிருந்து கும்மாளம் போடும் சிறுமியைப்போல அந்த இயற்கையின் எழிலினிடையே அஸ்ராவின் இதயம் கைகொட்டித் தாளம்போட்டுக் குதித்துக் கும்மி பாடியது! எத்தனை தூரம் நடந்தாள் என்பதை அவள் கவனிக்க வில்லை. அந்தக் குடிசை 'கண்ணுக்குத் தெரிந்த பிறகு தான் ஒரு மைல் தூரம்வரை அவள் தன்னை மறந்திருந் ததை அவளால் உணர முடிந்தது.

"பாபா?" என்ற குரலை "யாரது?" என்ற குரல் வர வேற்றது. அந்தகன் கதவைத் திறந்தான்.

"யாரம்மா அது?" என்று மறுமுறையும் கேட்டான்.

"நான்தான்" என்றாள் அஸ்ரா.

"நீயா? இங்கே தனியாக...! வேறு யாரும்...?" அந்தக் கேள்விகளில் என்னென்னவோ அர்த்தங்கள் தொக்கி நின்றதை அஸ்ரா புரிந்துகொண்டாள்.

"இல்லை. நான் மட்டுந்தான். வயலையும் வானத்தையும் பார்க்க..."

"ஓ! வாம்மா காட்டுகிறேன்."

இருவரும் அஸ்ராவின் வீட்டுப் பக்கமே திரும்பி வந்தார்கள்.

"பாபா! ஏன் மத்தியானம் கதிரவன் காயும்போது அதை எவரும் சித்திரமாகத் தீட்டுவதில்லை?" கேட்டே விட்டாள் அஸ்ரா.

"எது ஒன்றினால் பாதிக்கப்படுகிறோமோ அதை ரசித்து அனுபவிக்க முடியாதம்மா! காயும் கதிரவன் சித்திரத்தில் எழுதப்படும் அளவுக்கு எழில் நிறைந்த காட்சி அல்லவே!"

"கடவுளை ஏன் இந்துக்கள் கும்பிடுகிறார்கள்? முஸ்லிம்கள் இருகைகளையும் ஏந்தி அவரிடம் இரங்கி நிற்கிறார்கள்?"

"இஸ்லாம் தோன்றிய அரபு நாடு வளமையற்ற நாடம்மா. அதனால்தான் ஆண்டவனிடம் தேவைகளைக் கேட்கிறார்கள். இந்துமதம் தோன்றிய நாடு வளம் நிறைந்த நாடு. அதனால்தான் பெற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்துகிறார்கள்."

"ஏன் கடவுளைக் கும்பிட்டுவிட்டுக் கன்னத்திலடித்துக் கொள்ளவேண்டும்?"

"தேவைகள் எல்லாம் அளவுக்கு மீறிக் கிடைத்தால் மனிதன் பாவகாரியங்களில் ஈடுபட்டு விடுகிறான், அம்மா. ஆகையால்தான் தேவைகளைப் பூர்த்தி செய்ததற்கு நன்றி செலுத்தி அதனால் செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கோரக் கன்னத்திலடித்து இனிமேல் செய்யமாட்டோம் என்று அறிவிக்கிறார்கள்"

அஸ்ராவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. இனி எப்போதாவது ஏதாவது சந்தேகந் தோன்றினால் கேட்டுத்

தெரிந்துகொள்ள ஆளுங் கிடைத்துவிட்டது! கவலே ஏது மில்லாமல் அந்தப் பால் வண்ண நிலவொளியில் பச்சைப் பசேலென்றிருந்த வயல்களினூடே அந்தகன் தனக்கு வழி காட்ட மெல்ல அடியெடுத்துவைத்து நடந்தாள் அவள். திடீரென அவளுக்கு மாபெரும் சந்தேகம் ஒன்றெழுந்தது.

"பாபா! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"நான் வாழ்க்கையோடு போராடப் பிறந்தவனம்மா. எதையும் கவனிக்கிறேன். ஆனல் அவைகளிலேயே ஆழ்ந்து பதிந்துவிடாமல் என் நிலே தடுத்துவிடுகிறது. ஆகையால் சிந்தித்து நல்ல முடிவுக்கு வரவேண்டியிருக்கிறதம்மா."

இருவரும் ஊருக்குள் நுழைந்துவிட்டார்கள். அவள் வீடு நெருங்கிவிட்டது. இனி நிம்மதியாக எந்தவிதக் கவலேயும் இல்லாமல் அவள் தூங்கலாம். மனதில் நிரம்பி யிருந்த ஆசைகள் எல்லாம் ஒருவிதமாகப் பூர்த்தியடைந்து விட்டன. கதவைத் திறந்தாள். தாழிடப்பட்டிருந்தது. எரிமலேயும் பூகம்பமும் இதுவரை அவளுக்குத் தெரி யாதவை. அவை அப்போது அவள் உள்ளத்தில் திடீரெனத் தோன்றி ஆட்டம், புகை, அனல்கங்குகள் மூன் றையும் ஏற்படுத்தின. மெல்லத் தட்டினுள். கதவு திறந் தது.

"எங்கே போயிருந்தாய்?"

எதிர்பாராத நேரத்தில் காதுகளில் விழுந்த அதிர்வேட் டின் ஒலி அப்படியே உடலே ஒரு முறை குலுக்கி நடுங்க வைப்பதைப் போல அந்தக் குரலொலி அவளே அதிரச் செய்தது.

"எவனிடத்தில் போயிருந்தாய்?"

நீரைக் கக்கும் விழிகள்—நெருப்பைக் கக்கும் உள்ளம்—ஆனல் பதிலேக் கக்க முடியாது அடைத்துப் போன வாய்—இவைதான் அஸ்ராவுக்கு அப்போது ஏற்பட்ட நிலேமை.

"இனிமேல் உனக்கு இங்கே இடங் கிடையாது, போ."

கதவு தாழிடப்பட்டது. காட்சி முடிந்துவிட்டது. மூன்றே கேள்விகள்! அவைகளிலேயே விசாரணே, குறுக்குக் கேள்வி, தீர்ப்பு எல்லாம்!

"வாம்மா போகலாம்! இனிமேல் இங்கே இருந்தால் பலனேதும் கிடைக்காது. பழிச்சொல்லும் இழிநிலையுந் தான் இந்த இடத்தில் உனக்கு இனிக் கிடைக்கும்."

பேசாமல் அவனோடு கூட நடந்தாள் அஸ்ரா. அவளுக்கு ஏற்பட்ட திகிலும் திகைப்பும் இன்னும் அடங்கவில்லை. உள்ளம் இன்னும் அதிர்ந்துகொண்டுதான் இருந்தது. இருவரும் ஊரைத் தாண்டிவிட்டனர்.


"பாபா குரானில் என்ன எழுதியிருக்கிறது என்று அன்றொருநாள் சொன்னீர்கள்?"

"இச்சையைத் தூண்டிவிடும் அங்கங்களை மறைத்தால் போதும் என்றுதானம்மா எழுதியிருக்கிறது."

"பின் ஏன் இவர்கள் இப்படி நடந்து கொள்ளுகிறார்கள்?"

"சந்தேகம், பயம், மிருக உணர்ச்சி மூன்றும் மனித உள்ளத்திலிருந்து சுரண்டும் வரை இந்தவிதமான பழக்க வழக்கங்கள் இருந்துதானம்மா தீரும்!"

இருவரும் நடந்துகொண்டே போனார்கள். திறந்த வெளி, எங்கோ வெகுதூரத்தில் மண்ணைக் கட்டிப் பிடித்து முத்தமிடும் வானம், பசுமை நிறைந்த வயல்கள், நீண்ட பாதை. அவற்றிடையே தன்னந்தனியே இருவரும் நடந்துகொண்டே இருந்தார்கள். அந்தகன்—பெண்! உலகம் அவர்கள் இருவரையுமே கவனிக்கவில்லை. ஏன்...? அதுதான் தெரியவில்லை!



பரந்து விரிந்துகிடக்கும் அண்டை நாட்டு இலக்கியச் செல்வங்களை, நல்ல தமிழில் செந்தமிழர் இல்லந்தோறும் வாரிவழங்க, திங்கள் தோறும் விருந்து வருகிறது. உலகிற் சிறந்த சிறுகதைகள்! சுவை மல்கும் முழு நாவல்கள்! அற்புதமான கற்பனைக் காவியங்கள்! அழகான நாடகங்கள்! ஒப்புயர்வற்ற நகைச்சுவை ஓவியங்கள்! கலை நயம் கமழ, கருத்தாழம் ததும்ப, உலக இலக்கிய அறிஞர்களின் உளப் படப்பிடிப்பாக, ஒப்பற்ற இலக்கிய விருந்தாக ஒவ்வொரு மாதமும் "விருந்து" மிளிரும்.

# விருந்து

மாதம் ஒரு புத்தகம்

★

தனிப்பிரதி அணா 8

★

பதிப்பாசிரியர் :

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை M. A., L. T.,

★

விவரங்கட்கு :

**பொன்னி லிமிடெட், சென்னை-21**